வெளியீடு எண். 551.

உ

சிவமயம்

திருவெண்ணெய்நல்லூர்த்

தலபுராணமாகிய

# திருவருட்டுறைப் புராணம்

தருமையாதீனம்

1964.

வெளியீடு எண் 551.

உ
சிவமயம்

திருவெண்ணெய்நல்லூர்த் தலபுராணமாகிய

# திருவருட்டுறைப் புராணம்

இது

திருக்கோவலூர்
போர்டு ஹைஸ்கூல் முன்னைய தலைமைத்
தமிழ்ப்பண்டிதரும், கோவல் தமிழ்ச்சங்கத் தலைவருமாகிய
திருவெண்ணெய்நல்லூர்

திரு. வடிவேல் முதலியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

தருமையாதீனம்

1964

109990

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்,

Q23:38.21192.TN
N64

உ
சிவமயம்

# நூலாசிரியர் முன்னுரை

திருவளர்ந்தோங்கும் செந்தமிழ் நாட்டில் 'திருமுனைப்பாடி நாடு' என்னும் நாடு ஒன்று உள்ளது. அது சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் நடுவில் உள்ளதால் 'நடுநாடு' என்றும் பெயர் பெற்றது.

அந்நாட்டில் தேவாரம் பெற்ற சிவத் தலங்கள் இருபத்திரண்டு. அவைகளில், 'திருவெண்ணெய்நல்லூர்' என்பது, சிறப்புடையதொன்று. அது, சிவபெருமான் வயோதிகப்பிராமண வடிவங்கொண்டு, ஆலால சுந்தரமூர்த்தியின் திருமணத்திற்குச் சென்று, அவரைத் தமக்கு அடிமை என்று ஆவணங்காட்டித் தடுத்து ஆட்கொண்ட இடமாகும்.

அதில் புலவர் பெருமக்களும், பக்தர்களும் பலர் வாழ்ந்து வந்தனர். அத்தலத்திற்குத் தல புராணம் ஒன்று இல்லாமை அவர்களின் மனத்தை வருத்திவந்தது. திருநாவலூர்ப் புராணம் பாடியவரும், திருவெண்ணைக் கலம்பகம் பாடியவரும் ஆகிய, "திருவெண்ணெய்நல்லூர் இராசப்பநாவலர்" என்னும் பெரும் புலவர் அரும்பாடுபட்டும் தக்க ஆதாரம் கிடைக்காமையால், தம் முயற்சியைக் கைவிட்டனர்.

அவரது மாணவரான சுப்பிரமணிய முதலியாரிடமே நான் ஆரம்பக் கல்வி பயின்றேன். பின்னர், திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பணியில் ஒரு பணியாளனாகச் சேர்ந்து கணக்கு எழுதி வந்தேன். அக்காலத்தில் ஓலைச் சுவடிதான் வழங்கிவந்தது. நானும் அதில் நல்ல பழக்கமடைந்தேன்.

பெரிய கோபுரம் சுதை வேலை நடந்துகொண்டிருந்தது. நான் காலை மாலை இருவேளையும் சாரத்தின்மீதேறி அதன் உச்சியிற் சென்று அங்குப் பணியாற்றுபவர்களின் பெயர்களை எழுதிக்கொண்டு வருவேன்.

"சீகாழி முத்துக் கொத்தனர்" அங்கு வேலை செய்தவர்களுள் தலைமை பெற்றவர். அவர் ஒருநாள், 'கணக்கப்பிள்ளை ஐயா தினமும் இருவேளையும் இங்கு வந்து நம் பெயர்களை எழுதிக்கொண்டு போகிருர்; நம் நினைவும் அவருக்கு இருக்கும்படி அவர் உருவை இங்கு அமைக்கவேண்டும்' எனக் கூறினர்.

பின்னர்க் கோபுரத்தின் தென்புறம் தக்ஷிணமூர்த்தியின் திருவுருவை அமைத்து அதன் அடியிலுள்ள கர்ன கூட்டில் என் முகம் மட்டில் தெரியும்படி அமைத்துவைத்தார். அதை இன்றும் காணலாகும்.

பின்னர் நான் திருச்சி சென்று இப்போது 'செயின்ட் ஜோசப் காலேஜ்' என வழங்கும் எஸ். பி. ஜி. காலேஜில் சிறிது காலம் பயின்றேன். பின் சென்னைக்கு வந்தேன். சூளை செங்கல்வராய நாயகர் கட்டிடத்தில், 'கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்' என்பார் ஒருவர் இருந்தார். அவர் 'சுப்பைய சுவாமிகள்' என்பவரைக்கொண்டு வடமொழியிலுள்ள, "ஆத்மபுராணம்" என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுவந்தார். அதில் சிறிது காலம் பிரதி செய்யும் பணியில் நான் ஈடுபட்டிருந்தேன்.

அதன்பின் திருப்பாதிரிப்புலியூர் சென்று ஐந்தாம் பட்டத்து அடிகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளிடம் யாப்பிலக்கணம் கற்றுச் செய்யுளியற்றும் புலவனுனேன். அதன் பின்னர், திருக்கோவலூர் உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியனுகப் பணியாற்றிவருகையில், 'கல்பட்டு' என்னும் சிற்றூரில் ஓர் அந்தணர் இல்லத்தில் "பிரம்மாண்ட புராணம்" என்னும் ஏட்டுச்சுவடி இருப்பதாகவும், அதில் திருவெண்ணெய் நல்லூர் வரலாறு இருப்பதாகவும் அறிந்தேன். பின் அங்குச் சென்று அதன் பொருளைத் தமிழிற் சொல்லும்படி கேட்டு எழுதிக்கொண்டு வந்து, அதை ஆதாரமாகக்கொண்டு இந்நூலை இயற்றினேன்.



"கைவல்ய நவநீதம்" என்னும் நூலை இயற்றிய தாண்டவராய சுவாமிகள், அந்நூலில் தம்மைப்பற்றிக் குறிப்பிடும் இடத்தில், 'நான் தாண்டவமாடுவேன் எனத் தெரிந்துதான் என் பெற்றோர்கள் எனக்குத் தாண்டவராயன் எனப் பெயர் வைத்தார்களோ' என்று பாடியுள்ளார். அதுபோன்று, அடியேனும் நான் தன்புகழைப் பாடுவேன் எனத் தெரிந்துதான் சிவபெருமான் தன் திருவடியின்கீழ் என் முகத்தை அமைத்து வைத்துக்கொண்டனரோ என எண்ணி இறும்பூதெய்துகிறேன்.

இந்நூல் சம்பந்தமாக ஆராய்ந்து கூறவேண்டியவர்கள் பேரறிஞர்களே. ஆகையால், அதனை அவர்கள்பால் விட்டுவிடுகிறேன்.

இப்புராணத்தை ஏற்றுத் தங்கள் ஞானசம்பந்தம் அச்சகத்திலேயே ஆதீனப் பதிப்பாக அச்சிடுவித்து, பதிப்புரிமையையும் புத்தகப் பிரதிகளையும் எனக்கே அருட்கொடையாக அளித்தருளிய, திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பெருங்கருணைக்கு யான் எழுமையும் கடப்பாடுடையேன்; அவர்களது திருவடிகளுக்கு எனது வணக்கம்.

என்னையும் இந்நூலையும் ஆதீனத்தில் அறிமுகம் செய்துவைத்து, இந்நூல் அச்சாகி வெளிவரத் துணைநின்ற சென்னை அறநிலையத்துறை ஆணையர், திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்கட்கும், அணிந்துரை வழங்கிய திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A. L. T., (ஓய்வு பெற்ற கல்வி யதிகாரி) அவர்கட்கும் எனது நன்றி உரியது.

வணக்கம்.

திருவெண்ணெய்நல்லூர்
தமிழ்ப்பண்டிதர். வடிவேல் முதலியார்.

சென்னை,
2—4—1964.

# அணிந்துரை

**திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்கள்**
அறநிலைய ஆணையர், ஆட்சித்துறை சென்னை.

திருவெண்ணெய்நல்லூர், சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தடுத்தாட்கொள்ளப் பட்ட சிறந்த தலம். சைவ சித்தாந்த சந்தானசாரியர்களுள் முதல்வராகிய மெய்கண்டதேவர் வீற்றிருந்தருளிய புனிதம் மிக்க இடம். கம்ப நாட்டாழ்வாரை ஆதரித்துப் புகழ்பெற்ற சடையப்ப வள்ளல் வாழ்ந்து வந்த பெருமைபெற்றது.

இங்கு உமாதேவியார் பசுவெண்ணெயினுற் கோட்டை கட்டி அதனிடையே பஞ்சாக்கினியை வளர்த்துத் தவம் புரிந்து சிவப்பேறு எய்திய காரணத்தால் இவ்வூர் திருவெண்ணெய் நல்லூர் என வழங்கப்பெறுகின்றது. இது நடுநாடு எனப்பெறும் திருமுனைப்பாடி நாட்டில் பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது.

திருவாரூரிற் பூங்கோயில் திருக்கச்சூரில் ஆலக்கோயில் கடம்பூரில் கரக்கோயில். மீயச்சூரில் இளங்கோயில் கருகூரில் ஆனிலை எனக் கோயில்கள் பெயர் பெற்றிருப்பது போல, இங்குள்ள கோயிலுக்குத் திருவருட்டுறை என்பது பெயர். ' பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட் டுறையுள் அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே? '' என்பது சுந்தரர் தேவாரம்.



இத்தகைய சிறப்புமிக்க திருவெண்ணெய்நல்லூர்த் திருவருட்டுறைக்கு ஒருதல புராணம் இல்லாத குறை நெடுங்காலமாக இருந்து வந்தது. அக்குறை தீரும்வண்ணம் திரு. வடிவேல் முதலியாரவர்கள் திருவருட்டுறைப் புராணம் என்னும் இந்நூலைச் சிறந்த முறையில் இயற்றியளித்திருக் கின்றார்கள். இவர்கள், '' திருநாவலூர்ப் புராணம் '' பாடிய வரும், '' திருவெண்ணெய்நல்லூர்க் கலம்பகம் '' இயற்றிய வருமான திரு. இராசப்ப நாவலர் அவர்களின் மரபில்வந்த பெரும் புலவர் ஆவார்.

மேலும் இவர் சமய உலகில் தலைசிறந்த பெருஞ் சொற்பொழிவாளராக விளங்கித் தமிழும் சமயமும் தழைத் தினிதோங்கச் செய்த சான்றோர் ஆகிய திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அவர்களின் மாணவர்களுள் ஒருவராய் அவர்தம் அன்பை யும் ஆசியையும் பெற்று அவர்களோடு நெடுங்காலம் பழகிய பெருமைபெற்ற பெரியாராவர்.

'' கோவல் நகர் ஆதீனத் தைந்தாம்பட்
டம்பெற்றே குருவாய்த் தோன்றி
நாவலிமை மிக்கோராய்ப் புலிசைவளர்
மடாலயத்தில் நாளும் வைகி
ஆவலுடன் தமிழ் ஞானம் அனைவருக்கும்
பகிர்ந்தளித்த அறிஞ ரான
பாவலராம் ஞானியார் அடிகள்இரு
தாள்வணங்கிப் பவத்தை வெல்வாம். ''

என இவர் தம் ' ஞான குருவணக்கம் '' செய்திருக்கும் இந்நூற் செய்யுளினாலும் இவ்வுண்மைபுலனாகும். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் வரலாறும் இவரால் எழுதப்பட்டுள்ளது.

இத்தகைய ஒரு சிறந்த பெரும் புலவர் தம்முன்னோ ராகிய இராசப்ப நாவலரைப் பின்பற்றி, அவர் சுந்தரர் தோன்றிய திருநாவலூருக்குப் புராணம் பாடியது போலவே, தாமும், சுந்தரர் திருவருள் பெற்றதலமாகிய திருவெண்ணெ நல்லூர்த் திருவருட்டுறையினைக் குறித்துப் புராணம் பாடி யளித்திருக்கும் செயல் மிகவும் பாராட்டிப் போற்றத்தக்க தோன்றாகும். இவர்தம் பாடல்கள் எளிமை, இனிமை, புலமைத் தெளிவு என்ற நலங்களையெல்லாம் பெற்றுத் திகழ்வனவாயுள்ளன.

“ஒப்புயர் வற்ற சைவ
சித்தாந்தத் துண்மையோர்ந்து
தப்பும்ஐம் புலன்அ டக்கித்
தனிமனம் சிவன்பால் ஒன்றத்
திப்பிய சிவானந் தத்துள்
திளைத்திடும் முத்தர் போன்றே
உப்புறை கடலின் நாப்பண்
சுறவினம் உறங்கும் ஓர்பால்”

இப்பாடல் ஒன்றே இந்நூலாசிரியர்க்குள்ள சைவ சித்தாந்தப் பற்றும் புலமையும் எத்தகையன என்று நாம் உணர்தற்குப் போதிய சான்றாகும்.

இங்ஙனம் சிறந்தபலநலங்கள் நிரம்ப, இந்நூலை இயற்றி யுதவிய பழம்பெரும் புலவர் மணியாகிய திரு. வடிவேல் முதலியார் அவர்களின் சிறந்த தொண்டுக்கு நாம் அனை வரும் பெரிதும் நன்றியும் வணக்கமும் செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இப்பெரியார் இயற்றிய நூலின் சிறப்பை உணர்ந்து இதனை அச்சிட்டு யாவரும் நலம் பெறுமாறு உலகிற்கு



உதவியுள்ள தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானம் அவர்களின் வள்ளன்மையைச் சைவநன்மக்கள் என்றென்றும் பாராட்டிப் புகழ்வர்.

இந்நூல் என்றும் நின்று நிலவிச் சிறந்து திகழவும், இதன் வாயிலாகச் சிவமணமும் தமிழ்மணமும் எங்கும் பரவிப் பெருகவும், திருவெண்ணெய்நல்லூர்த் திருவருட் டுறை நாதன் திருவடிகளை மனமொழி மெய்களாற் பணிந்து வழுத்துகின்றேன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அணிந்துரை

## திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்

**சென்னை.**

சைவசமயாசாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்திலும், சந்தனாசாரியருள் ஒருவராகிய மெய்கண்ட தேவர் சரித்திரத்திலும், முக்கியமானதோர் இடம் பெற்றுள்ள திருத்தலம் திருவெண்ணெய்நல்லூராகும். இப்பதிக்குத் தனியே தலபுராணம் இதுவரையில் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இக்குறையை இப்போது நீக்கியுள்ள புலவர், சைவத் திருவாளர் திருவெண்ணெய்நல்லூர் - வடிவேலு முதலியாராவர். இவர், அப்பதியில் **பஞ்சலக்ஷண சரபம்** என்று போற்றப்பட்டவரும், பல நூல்களை இயற்றியவருமான இராசப்ப நாவலரின் மாணவராகிய சுப்பிரமணிய முதலியாரிடம் பாடங்கேட்டவர். பின்பு, சைவ உலகில் ஞாயிறென விளங்கிச் சமயநெறி பரப்பிய தவத்திரு - ஞானியார் சுவாமிகளை அடைந்து, பல ஆண்டுக்காலம் மாணவத் தொடர்பு கொண்டிருந்து, யாப்பிலக்கணமும் சைவநூல்களும் பாடங்கேட்டவர். பின்பு, " ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் வாழ்க்கை வரலாறு " என்னும் அருமைவாய்ந்த நூலொன்றை இயற்றினார். அது, 1948ல் வெளியிடப்பட்டது.

இவ்வாறு, சிறந்த வித்தியா குருவையும் ஞான குருவையும் பெற்ற இவர், பின்பு உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியராகச் சுமார் இருபதாண்டுக் காலம் பணிபுரிந்து, மாணவர்கட்குத்



தமிழார்வம் ஊட்டிவந்தார். திருக்கோவிலூர்த் தமிழ்ச் சங்கத்திற்கும், திருவெண்ணெய்நல்லூர் - கம்பர் கலாமிருத சங்கத்திற்கும் தலைவராயிருந்தார். தமிழாசிரியர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலையத்தில் நான்காண்டுக் காலம் ஓலைச்சுவடி எழுதும் பணியும் புரிந்தார். மேலும், இவர் " காந்திஜி நினைவு மலர் ", " பஞ்சாமிர்தத் திருப்புகழ் " போன்ற சிறு செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். தமது இரண்டு ஆசிரியர்கட்கும் தம் வணக்கத்தை இத் தலபுராணத்துப் பாயிரத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நூலின் ஆசிரியர், இதற்குத் **திருவருட்டுறைப்புராணம்** என்னும் பெயர் தந்துள்ளார். இது, சூத முனிவர், வியாச முனிவரிடம் கேட்டு, நைமிசாரணிய முனிவர்கட்குச் சொன்னதை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது என்று பாயிரத்தில் நூல் வரலாறு கூறும் பாடல் தெரிவிக்கின்றது. இந்நூல் பாயிரத்தோடு பதினறுபடலங்களைக் கொண்டுள்ளது. மொத்தம் 709 செய்யுட்களை உடையது. இவற்றில் உமையம்மையும் தரும தேவதையும் தவம்புரிந்தமை, முருகப்பெருமான் சிவனார் அருள் பெற்றமை, விஜயன் வரம்பெற்றமை, ஆலாலசுந்தரர் ஆட்கொள்ளப்பட்டமை, சடையப்ப வள்ளல் சரணடைந்தமை, மெய்கண்டதேவர் மெய்ப்பொருளுணர்ந்தமை போன்ற பல வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், தலவிசேடப் படலம் முதலிய படலங்கள், திருத்தொண்டர் புராணம், கம்பராமாயணம், காஞ்சிப்புராணம் போன்ற சில தலபுராணங்கள் ஆகிய, நூல்களின் அரிய பல பகுதிகளை நினைப்பூட்டுகின்றன.

இலக்கியச் சுவையுடைய இப் புராணம், பழைய வரலாறுகளை விரித்துரைத்து வருகையில், இடையிடையே பல நீதிகளையும், சித்தாந்த உண்மைகளையும் எடுத்துரைக்கின்றது. **பாவிகள் பரிபவப் படலம்** என்னும் பகுதியில், இறைவனை எண்ணாபல் பல்வேறு பாவங்கள் புரிவோர்களை மறலியின் தூதுவர்

இன்னின்ன வகையில் தண்டிப்பர் என்பதும், அவர்கள் மறு பிறப்பை அடைந்தபின் என்ன என்ன ஊனங்களையுடையராவர் என்பதும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

ஆறாதார விவரம் **அருட்டுறைப் படலத்திலும்**, பஞ்சாக்ஷர வகைகளும், பிராணாயாமத்தின் இயல்பும் பதினைந்தாவது படலத்திலும் குறிக்கப்பெற்றுள்ளன.

இந்நூலைத் திருக்கைலாய பரம்பரைத் தருமையாதீன கர்த்தர் **ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அச்சேற்றி வெளியிடத் திருவுளங் கொண்டுள்ளார்கள் என்று கேட்டு மகிழ்வுற்றேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சைவ சமயப் பாதுகாப்பிற்காகவும் பல துறைகளில் அறங்கள் புரிந்து வருவதைத் தமிழகம் நன்கறியும். இவைகளில் ஒன்று, சமய நூல்கள் பலவற்றைச் சிறந்த முறையில் பதிப்பித்து வழங்கி வருவதாகும். இப்போது இந் நூலையும் அச்சேற்றிப் பலர்க்குக் கிடைக்கும்படி செய்யத் திருவுளங்கொண்டமைக்கு எனது நன்றியையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொது அறமும் சிறப்பறமும் உலகமெல்லாம் பெருகி நன்மை பயக்க அருட்டுறைநாதர் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.


" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையுமெம் ஆதியே! "

உ

சிவமயம்

# படல அட்டவணை


| படல வரிசை எண். | விபரம் | படலத்தின் மொத்தப் பாடல் | படலப் பக்கம். |
|---|---|---|---|
| 1 | பாயிரம் | 32 | 1 |
| 2 | திருநாட்டுப் படலம் | 62 | 11 |
| 3 | திருநகரப் படலம் | 28 | 21 |
| 4 | தலவிசேடப் படலம் | 29 | 26 |
| 5 | வேணுவனப் படலம் | 35 | 32 |
| 6 | அருட்டுறைப் படலம் | 31 | 38 |
| 7 | அம்மை அருந்தவப் படலம் | 25 | 42 |
| 8 | தருமதேவதை தவஞ்செய் படலம் | 30 | 47 |
| 9 | திருநடனப் படலம் | 32 | 52 |
| 10 | அறுமுகச்செவ்வேள் அருள்பெறு படலம் | 35 | 57 |
| 11 | விசயன் வேண்டுறு படலம் | 20 | 63 |
| 12 | வீதிகோத்திரர் வீடுபெற்ற படலம் | 42 | 68 |
| 13 | ஆலாலசுந்தரரை ஆட்கொண்ட படலம் | 100 | 75 |
| 14 | சடையப்பவள்ளல் சரணடைந்த படலம் | 75 | 93 |
| 15 | மெய்கண்டதேவர் மெய்ப்பொருளுணர்ந்த படலம் | 63 | 107 |
| 16 | பாவிகள் பரிபவப் படலம் | 44 | 119 |
| 17 | தீர்த்த விசேடப் படலம். | 26 | 128 |
| | | 709 | |



திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ அருட்டுறைநாதர் கோயில்
முன்கோபுரம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவெண்ணெய்நல்லூர்த் தலபுராணமாகிய

# திருவருட்டுறைப் புராணம்

## பாயிரம்

### காப்பு

கலி விருத்தம்

திங்கள் சூடிய தேவன் திருப்பதம்
துங்க மாமலர் கொண்டு துதிக்கவும்
தங்கு ஞானமும் வாழ்வுந் தழைக்கவும்
ஐங்க ரத்த னடியிணை யேத்து வாம். 1

### கீழைக் கோபுர வாயில் ஆலயம் கலிதீர்த்த கணபதி துதி *

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தீமைதனி லொன்றானை முன்கைமிகத் திரண்டானைத்
தீயர் நெஞ்சில்
சேமபத மூன்றானை மறைபுகல்நால் வாயானைச்
சிறுமை செய்யும்
நாமவுணர்க் கஞ்சானைச் சிரத்திலமர் ஆறானை
நவையெ ழானைத்
தூமறைகட் கெட்டானை யருட்டுறைவாழ் கணபதியைத்
தொழுது வாழ்வாம். 2

* இவ்வாலயம் தற்போது துவஜஸ்தம்பத்தின் அருகில் உள்ளது.

## வேத சபாநாதர் துதி

வேறு

துடியாற் படைக்குந் தொழில்தனையுந்
துகளில் அமைப்பாற் காத்தலையுங்
கடிய கனலால் அழித்தலையுங்
காலூன் றுதலால் மறைத்தலையும்
அடிதூக் குமதால் அருளலையும்
ஆர்க்கும் தெரித்தே யருட்டுறையில்
நடிக்கும் பரமன் அடிவணங்கி
நவையில் இன்பம் எய்துவமால்.

## அருட்டுறை நாதர் துதி

வேறு

பெண்ணிருக்குஞ் சடையானைக் குழையிருக்குஞ் செவியானைப்
பிறங்கும் அங்கிக்
கண்ணிருக்கும் நுதலானைக் கனலினொடும் உழையிருக்குங்
கரத்தி னானைப்
பண்ணிருக்கு மொழியானை மங்கைநா யகியிருக்கும்
பாகத் தானை
வெண்ணெயருட் டுறையானை விரும்பியடி பணிந்தேநம்
வினைகள் தீர்ப்பாம்.

## மங்கைநாயகியம்மை துதி

மங்குலெனுங் குழலானை மறுவறுநன் மதிபுரையும்
வதனத் தானைத்
துங்கவருட் கண்ணானைத் துடிநிகர்க்கும் இடையானைத்
துவர்வா யானைப்
பங்கயமென் பதத்தானைப் பரமனுடன் இணைபிரியாப்
பாகத் தானை
மங்கைநா யகியானை மனத்திருத்திப் பவவினையை
மாற்று வோமால்.

## தடுத்தாட்கொண்ட நாயகர் துதி

எடுத்திட்ட பிறவிகளில் ஈசனைக்கண் டேத்தாத
ஏதத் தாலே
அடுத்தவறு மையின்பயனு லகத்தொழிலி லமர்ந்தோரு
மடிவ ணங்க



நடுத்தெருவி லெழுந்தருளி நங்கையுடன் காட்சிதந்தே
நவையும் நீக்கும்
தடுத்தாட்கொண் டிட்டபிரான் அடிவணங்கிப் பிறவிதனைத்
தகர்த்து வாழ்வாம். 6

## வேற்கண்ணியம்மை துதி

நாற்குணமும் நாற்படையாக் கொண்டுமே நாயகர்க்கு
நங்கை மார்கள்
ஏற்புடைய பணிபுரிதல் கடனென்ன இயம்பிடல்போல்
இடப்பால் வைகிக்
காற்பணியும் அடியார்க்குக் கணவனுடன் சென்றெவர்க்குங்
கருணை செய்யும்
வேற்கண்ணி யம்மையிரு பதமலரை நிதம்பணிந்தே
வினையை வெல்வாம். 7

## பொல்லா விநாயகர் துதி

வேறு

சொல்லாய்ப் பொருளாய் உபநிடதத் துச்சி மருவுஞ்
சுடரொளியாய்
எல்லாச் சமயங் களுமேத்து மிறையாய் விளங்கு மெம்பெருமான்
நல்லார் சரித நனியுரைக்க நாளுங் கருணை புரிந்தருளும்
பொல்லாக் களிற்று மாமுகன்றன் பொற்பார் கமலத்
திருப்பதமே. 8

## ஆறுமுகப்பெருமான் துதி

வேறு

உயிர்மேவு கண்ணனை மெய்ம்மேவு சிரங்கரங்கொ
ளுறுப்பி னானை
அயில்மேவு படைதானும் ஆயுதமாய்ச் செந்தமிழே
யாயி னானைக்
கயல்மேவு விழிமாதர் இருபாலுங் கண்டுமனங்
களிக்கும் வண்ணம்
மயில்மேவு நடத்தானை அருட்டுறைவாழ் அறுமுகனை
வணங்கி வாழ்வாம்.

### வயிரவக்கடவுள் துதி

வலியவர்கள் எளியவரை வாட்டிடினவ் வலியவரை
வலிய தெய்வம்
ஒலிகடல்சூழ் புவியினிடை வாட்டுமெனும் உண்மையினை
யுணர்த்தல் போன்று
வலிமையினால் மாவலியை வதைத்தோனை வதைத்துரிவா
ரணமாய்ப் போர்த்த
மலிபுகழ்சேர் அருட்டுறையில் காவல்புரி வைரவரை
வணங்கு வோமால். 10

### தக்ஷிணாமூர்த்தி துதி

அருமறையா றங்கமெலா மறிந்தாலு மனுபவத்தின்
மிக்கோ ரான
குருவிருந்து பயிற்றிலரேல் குணமிலையென் றுணர்த்திடவே
குரவ னாகிப்
பெருமுனிவர் நால்வர்க்கும் பேசாம லிருந்துணர்த்திப்
பிரமை தீர்த்த
தருநிழலி லிருந்தருளுந் தக்கிணா மூர்த்திபதந்
தலைமேற் கொள்வாம். 11

### திருநந்திதேவர் துதி

சிவபெருமான் திருவடியை வணங்கிடவே திரண்டுவரு
தேவர் தம்மை
அவையிடையே பத்திபத்தி யாய்ச்செல்ல வேபணித்தும்
அடங்கா தோரைத்
தவமுடைய பொற்பிரம்பால் தண்டித்துந் தாபமின்றித்
தக்கோர்க் கெல்லாம்
பவன்சேவை யளித்தருளும் நந்திதிருப் பதமலரைப்
பரவு வோமால். 12

### திருஞானசம்பந்தர் துதி

எந்தைபிரான் மனமகிழப் பிராட்டிமுலைப் பாலருந்தி
எவருங் காணச்
செந்தணலுந் தண்புனலுந் தமிழ்மணத்தை நனியுணரச்
செய்த கோவை
வந்தரவின் வாய்ப்பட்ட வணிகனுயிர் மீட்டளித்த
மறைவல் லானைச்
சந்ததமுந் தமிழ்பாடுஞ் சம்பந்தன் றனைநினைந்து
தாபந் தீர்வாம். 13



### திருநாவுக்கரசர் துதி

இறைவனுளன் எமைக்காக்கவென்றெண்ணு மறிவுடையார்க்
கெந்த நாளுங்
குறையணுகா தெனுமொழிக்கோரிலக்கியமாய்க் குரைகடலிற்
புணையாக் கொண்டு
துறையணுகிக் கவிபுகன்று பிழைபுரிந்தோற் கருள்சுரந்த
தூய ராகும்
பொறையுடைய திருநாவுக் கரசரிரு திருவடியைப்
போற்றி வாழ்வாம். 14

### ஆலால சுந்தரர் துதி

காதலுறு திருமணத்தின் சிறப்பதனைக் காசினியோர்
காணக் காட்டி
மாதரொடு பிரியாது சிவபத்தி பூண்டிருந்த
மறைவல் லானை
மேதகுகை லைச்செலவில் தமிழ்க்கவிதை விரித்துரைத்த
மேதக் கோனை
பேதமிலா ஆலால சுந்தரனை யெந்நாளும்
பேணி வாழ்வாம். 15

### திருவாதவூரர் துதி

நரியை யெல்லாம் பரியாக்கி நதியடைத்த கண்ணுதலோன்
நளிர் பொற்பாதம்
பிரியமுடன் சிரத்தேற்றும் பேசாத வூமைதனைப்
பேசு வித்தும்
துரிய நிலை யுங்கடந்த திருவுருவங் கழுக்குன்றிற்
றோன்றக் கண்டும்
அரியசிவ னடியடைந்த வாதவூ ரடிகளடி
யணுகி வாழ்வாம். 16

### சண்டேசுரர் மற்றைய நாயன்மார்கள் துதி

தன்தந்தை தாளுடனே பிறவித்தாளையுந் தடிந்த
தனயர் தாளும்
முன்வந்த வேதநெறி சைவநெறி பத்திநெறி
முறை வழாமல்

அன்புந்தப் பணிபுரிந்தே சிந்தைதனை யரன்பதத்தி
லழுத்தி வாழ்ந்த
இன்பந்தம் மிடமாக்கொள் திருத்தொண்டர் அடிகளையு
மிறைஞ்சு வோமால். 17

## மெய்கண்டதேவர் துதி

அத்தனருள் சமயங்கள் பலப்பலவா யுலவிடினு
மவற்றுள் மேலாம்
உத்தமமா கியசைவ சித்தாந்தத் துண்மையினை
யுரைத்த கோவாம்
தத்துபுனல் தென்பெண்ணை நதிபாயும்வெண்ணெய்நல்லூர்
தன்னில் வைகும்
வித்தகமெய் கண்டார்தந் தாள்வணங்கி மேவியநம்
வினையை வெல்வாம். 18

## வைகுண்டவாசர் துணை

சங்கேந்து கரத்தானைச் சாண்டிலிய மகரிஷியின்
தவத்திற் காகத்
துங்கமுள வவதாரம் பத்தினையுங் காட்டியே
துயர்தீர்த் தானை
மங்குல்புரை நிறத்தானை சனகவல்லி மகிழ்ந்திருக்கும்
மார்பி னானைப்
பங்கயமென் பதத்தானை வைகுந்த வாசனையே
பணிந்து வாழ்வாம். 19

## சனகவல்லித் தாயார் துதி

செங்கமலத் திருப்பவளைச் செல்வமதின் தெய்வதத்தைச்
சிந்தை செய்த
துங்கசாண் டிலியருக்குத் துணைவருடன் காட்சிதந்தே
துயர்தீர்த் தாளை
மங்களஞ்செய் வைகுந்த வாசரது மார்பகத்தில்
வைகு வாளை
நங்கையாம் சனகவல்லி பதமிறைஞ்சிச் செல்வமுற்றே
நாளும் வாழ்வாம். 20



## சத்த மாதர்கள் துதி

அயிலேந்து கௌமாரி யாழிகொளும் நாரணிவெ
ளன்ன மீதில்
பயில்கின்ற அபிராமி பரசுடைமா கேசுவரி
பார கத்தை
எயிறினிடை யேதாங்கு வாராகி இந்த்ராணி
எல்லைக் காளி
இயலுடையிவ் வெழுமாதர் பாதாம்பு யங்களையு
மிறைஞ்சுவோமால் 21

## நவக்கிரகங்கள் துதி

ஆதித்தன் சோமனுடன் அங்கார கன்ராகு
ஆசான் மந்தன்
போதிக்கும் புதன்கேது புகரென்று நவக்கிரகப்
புணர்ப்பால் வந்து
பாதிக்கும் இடர்களெலாம் பறந்தோடி யின்பத்துட்
பதிந்து வாழச்
சோதித்தன் வடிவாய வவரடிகள் தமைநாளுந்
துதித்து வாழ்வாம். 22

## கலைமகள் துதி

வெண்கமலத் திருப்பவளைச் செந்தமிழின் தெய்வதத்தை
விளங்கு பாரில்
கண்ணுதல்தன் பெருங்கருணை பரவிடவே யருள்புரியுங்
கடைக்கண் ணாளைத்
தண்கவிதை பொழிகின்ற புலவருளம் விட்டகலாத்
தையல் தன்னை
யுண்ணினைந்தே யடிவணங்கி யுலவாத பேரின்ப
முற்று வாழ்வாம். 23

## செந்தமிழ்த் தெய்வத்துதி

அருளின்ப வுருவாகி யாரியமங் கையைக்கலந்தே
யவனி மீதில்
மருவிடவே துளுவுடனன் மலையாளங் கன்னடமும்
வடுகு மீன்று

பெருகியவம் மக்களெலாம் வளர்கின்ற பெற்றிகண்டே
பெருமை கொள்ளும்
அருமையுள கலைவளர்க்கும் செந்தமிழாந் தெய்வதத்தை
யகத்துட் கொள்வாம். 24

## வித்தியா குரு வணக்கம்

திருவெண்ணெய் நகர்மேவி ராசப்ப நாவலர்பால்
திறமை யாகப்
பெருமையுள தமிழ்பயின்றேன் பேரருள்கொண்
பேதை நெஞ்சாம் [டெம்போல்வார்
பருமையுள கமலமுகை மலரச்செய் பரிதிநிகர்
பனுவல் வல்லான்
தருகுணசுப் பிரமணிய குரவனிரு சரணமலர்
தலைமேற் கொள்வாம், 25

## ஞானகுரு வணக்கம்

கோவளக ராதீனத் தைந்தாம்பட் டம்பெற்றே
குருவாய்த் தோன்றி
நாவலிமை மிக்கோராய்ப் புலிசைவளர் மடாலயத்தில்
நாளும் வைகி
ஆவலுடன் தமிழ்ஞானம் அனைவருக்கும் பகிர்ந்தளித்த
அறிஞ ரான
பாவலராம் ஞானியார் அடிகளிரு தாள்வணங்கிப்
பவத்தை வெல்வாம். 26

## அவையடக்கம்

மலருடனே நார்கொள்வார் மாலையுடன் கலந்துள்ள
வகைமி னாலே
சலங்கொள்வார் பாலுடனே சார்ந்துளதால் அவைபோலத்
தமியேன் பாடல்
தலமேவு வெண்ணெய்நல்லூர்ச் சிவபெருமான் புகழ்கலந்த
தன்மை யாலே
புலமேவு பேரறிஞ ரேற்பரென மனந்துணிந்தே
புகல லுற்றேன். 27



காரணையில் உவர்நீரும் நன்னீராய்ப் பொழிவதனைக்
காண்ட லாலே
தாரணியிற் கல்விநலந் தானென்று மில்லாதேன்
றன்புன் சொல்லும்
சீரணிந்த புலவரவை சேர்ந்திடில்நன் றாமென்றே
செப்பலுற்றேன்
பேரணைந்த புலவோர்கள் மகிழ்ந்தேற்றே சிவனருளைப்
பெற்றுய் வாரால். 28

## நூல்வரலாறு

கண்ணுதலோன் நந்திதனக் கருள்புரிய நந்தியுமே
கருணை யோடு
எண்ணியமார்க் கண்டர்தமக் கினிதுரைக்க அவர்வியாதர்க்
கியம்ப வியாதர்
நண்ணியசூ தர்க்கோதச் சூதமுனி முனிவர்கட்கு
நயந் துரைத்த
வெண்ணெய் நல்லூர்ப் புராணமதை வெள்ளறிவால்
அடியேனும் விளம்பலுற்றேன். 29

## நூற்பயன்

வெண்ணெய்நல்லூர் அருட்டுறையில் மேவிவளர்
மேன்மை தன்னை [சிவக்கொழுந்தின்
உண்ணிறையும் அன்பினுடன் ஓதுகின்ற பேரறிஞர்
ஓதக் கேட்டோர்
பண்ணிறைந்த கவிகேட்டுப் பரிசளித்தோ ரிவர்களெலாம்
பாரிற் பன்னாள்
எண்ணரிய நலந்துய்த்தே யுலப்பிலாப் பேரின்ப
மெய்தி வாழ்வார். 30

## வாழ்த்து

மாமுகிலெங் கணும்பரவி வழுவாது மழைபொழிக
வளங்கள் மல்க
கோமுறையுங் குடியரசாய் முறைசெய்க குடிவளங்கள்
கொழித்து வாழ்க
காமுறவே பல்கலையும் நல்லறமும் காசினியிற்
கவினி யோங்க
பாமுறைகொள் செந்தமிழுஞ் சைவசம யமுமோங்கிப்
பரவ மாதோ. 31

### நெஞ்சோடு மகிழ்தல்

**வேறு**

புண்ணி யங்களென் செய்தனை நெஞ்சமே
  புணரிசூழ் புவிமீதில்
பண்ணின் மிக்கெழு பனுவல்செய் வல்லுநர்
  பற்பலர் வாழ்ந்திட்டும்
வெண்ணெய் மாநகர் அருட்டுறை வாணன்றன்
  விரிந்திடு புகழெல்லாம்
திண்மை யானநின் நாவினால் பாடுந்
  திருவருள் பெறுதற்கே. 32

பாயிரம் முற்றுப்பெற்றது.

ஆக செய்யுள் 32.

**முதலாவது**

## திருநாட்டுப் படலம்

**கலி விருத்தம்**

கங்கையை வேணியிற் கரந்த நாதனை
மங்கையைப் பாகத்தில் வைத்த வள்ளலைத்
துங்கமா மறையெலாந் தொடரும் பாதனை
அங்கையாற் றொழுதுமே யல்லல் நீக்குவாம். 1

மண்ணினின் றெழுதுக ளன்றி மற்றையோ
ருண்ணணுந் துகளிலா வொழுக்க மொன்றிய
கண்ணிய குடியினர் கலந்து வாழ்வது
நண்ணிய திருமுனைப் பாடி நாடரோ. 2

மறந்தரு தீநெறி மடியச் சைவமாம்
அறந்தனை வளர்த்திடு மரசும் நம்பியும்
பிறந்திடு பெருமைசேர் நாட்டின் பெற்றிமை
சிறந்திடு மறிவிலேன் எங்ஙன் செப்புகேன். 3

கூர்த்தநன் மதியிலே னெனினுங் கூன்பிறை
சேர்த்திடு வேணிய னருளைச் செப்பவாய்
ஆர்த்தியாய்த் துடித்தலா லனையன் ருள்தொழுந்
தீர்த்தநாட் டணிசில செப்ப லுற்றனன். 4

மேலவன் நீறணி மேனி யென்னவான்
நீலநீர்க் கடன்முகந் தேறி நீடுமை
கோலமார் வடிவெனக் குடில மெங்கணும்
ஏலவே நிறைந்ததால் இருண்ட வானமே. 5

எந்தைமுன் களிற்றினை யெய்து தோலுரித்
தந்தநல் லுரிவையை யணிந்த காட்சிபோல்
சிந்துவின் நீருண்டு சென்ற மேகங்கள்
நந்திமால் வரைதனை நண்ணிச் சூழ்ந்தவே. 6

மஞ்சுவான் கறுத்தலும் மடங்க லார்த்தலும்
மிஞ்சிமின் ஒளிர்தலும் மேகந் தூவலும்
வஞ்சினக் கோடைமேல் மாரி மேவியே
விஞ்சிடு பெருஞ்சமர் விளைத்தல் போன்றவால். 7

அரியணா ரியர்கொளி னற்பர் செல்வமும்
பெரியநல் லிசைகொடு பிறங்கு மாறுபோல்
உரியவா னுண்டநீர் உவரை நீக்கியே
பிரியமா யுலகுணப் பெய்த தெங்குமே. 8

மக்களு மாக்களும் மரங்கள் பூடுகள்
ஒக்கவே மகிழ்வுற வொளித்த லின்றியே
திக்கெலாஞ் செழித்திடத் திங்கண் மும்முறை
மிக்கவே வழங்கின விளங்கு வானமே. 9

காடுகள் கரம்புகள் கடிகொள் சோலைகள்
நாடுகள் குளங்களும் நன்செய் புன்செய்கள்
நீடுறு நதிகளும் நிறைத்த நீருட
லூடுறை யுயிரென வுலவிற் றெங்குமே. 10

வேதமே யோதினும் விளங்கு மெய்ப்பரம்
ஆதியாஞ் சிவனென வறிகி லாதவர்
பேதைகொ ளறிவெனப் பெய்த நீரெலாஞ்
சேதகஞ் சிவணியே தெளிவின் றுயதே. 11

வள்ளவாய்க் கமலத்தில் வண்டு பாண்செயும்
அள்ளலஞ் சேற்றிடை யாமை தூங்கிடும்
பள்ளநீர்ப் பணைதொறும் பணில முத்திடும்
கொள்ளைவான் பொதும்பரிற் குயில்கள் கூவுமால். 12

பெண்ணைமா நதியெனப் பெருகு நீருடன்
மண்ணுறு கெடிலமும் மணிமுத் தாறுமாம்
புண்ணிய நதியெனப் பொருந்தி நாட்டிடைப்
பண்ணைவாய் அமுதெனப் பரந்த தெங்குமே. 13

மக்களிற் பலர்க்குநன் மதிபு கட்டியே
தக்கபே றுறச் செய்யுங் குரவர் தன்மைபோல்
ஒக்கவே நீரினை யுழவர் கூடியோர்
பக்கமாய்த் திருப்பித்தம் வயலிற் பாய்ச்சுவார். 14



வயலினிற் பாய்ந்தநீர் வழிந்து மீண்டும்போய்ப்
புயலணை கடலிடைப் புகுதல் மேலையோர்
உயவழி யுரைக்கினு முணர்வி லாதவர்
மயல்தரு வழிச்செலுஞ் செயலை மானுமால். 15

செல்லுநீர் மள்ளர்கள் சிறைசெய் யோதையும்
அல்குநல் உழத்தியர் குரவை யாடலும்
தொல்விதை வித்துநர் தொனியுந் துன்னியே
மல்லல்வான் முழக்கொடு மாறு கொண்டவே. 16

மள்ளர்கள் வித்திய மாசில் தூவிதை
பள்ளநீர் வயலிடைப் படிந்து வாய்விடாத்
துள்ளியே முளைகளைத் தோன்றச் செய்தலால்
வெள்ளிய நாறுகள் விளைந்து நின்றவே. 17

அரனடிக் கன்புசெய் யன்பர் கட்கரன்
பரகதி யளித்திடும் பான்மை யென்னவே
தரமுணர் மள்ளர்கள் தருண மோர்ந்துடன்
பரவவே றிடத்தினிற் பதித்துப் போற்றுவார். 18

களைகளை பருவமுன் கண்டு மள்ளர்கள்
இளமயி லன்னவர் இனமுஞ் சேர்தர
அளியிறை தீயரை யழிக்குஞ் செய்கைபோல்
விளைவயற் களையெலாம் வெறுத்து நீக்குவார். 19

அம்புயங் களைந்திடு மரிவை மார்கரஞ்
செம்புனல் பெருகிட முட்கள் செய்திடும்
இம்பரி லிடர்செய்தார்க் கிடர்பின் செய்திடல்
பம்புநீ ருலகுள பான்மை யாகுமால். 20

தங்கள்தம் முறுப்பெனுந் தகைய வாகிய
பங்கய மாம்பலும் பறித்து நீக்கினர்
தங்கிளை யென்னினுஞ் சமரின் முன்னிடில்
அங்கவர் செகுத்திட லறம தாகுமால். 21

புலவியிற் பிரிந்திடு பூவை மார்களுந்
தலமதிற் குழுமியே தலைவர் தம்முடன்
புலமுள களையெலாம் போக்கி நின்றனர்
உலகிலொற் றுமையினு முயர்ந்த தியாவதே. 22

நெய்கொடு தீவிய நெருங்கு வார்குழல்
மைநிற முற்றுமே வளருந் தன்மைபோல்
கைகொடே யுழத்தியர் களைத்த வான்பயிர்
செய்யிடைப் பசுமையாய்ச் செழித்த தெங்குமே. 23

ஆர்வநீர் பாய்ச்சியே யன்பு வித்திடும்
ஏர்பெறு மன்பர்கட் கீச னின்னருள்
நேர்பெற விளைதல்போல் நிறைபைங் கூழெலாஞ்
சீர்கதிர் தோன்றிடச் சிறந்த வாயவே, 24

போதுறு களைகளைப் போக்க லுற்றபின்
தீதுறு பெரும்பவந் தீர நல்வினை
நீதமாய்ப் பயன்றரு நேர்மை யென்னவே
ஏதமில் பயிரெலாங் கதிர்க ளீன்றவே. 25

அறிஞர்க ளவையிடை யறிவி லோர்களும்
நெறிபடக் கூடியே நிமிர்ந்து நிற்றல்போல்
நிறைகதிர் முற்றியே நிற்குஞ் சாலியுள்
வறியபுன் பதடியும் வளர்ந்து நின்றவே. 26

சங்கையில் குமரர்முன் சார்ந்த கன்னியர்
மங்கைய ரானபின் மறுகி நாணல்போல்
தங்கிய விளமையில் நிமிர்ந்த சாலிகள்
பொங்கியே முதிர்ந்தபின் புடவி நோக்கின. 27

புல்லிய செருக்கொரீஇப் போதம் வாய்ந்தபின்
சொல்லினுக் கரசர்தந் தூய தாண்மிசைப்
பல்லவன் குழுவொடும் பணிந்த காட்சிபோல்
நெல்லெலாம் முதிர்ச்சியால் நிலத்திற் சாய்ந்தவே. 28

கற்றவ ரடக்கம்போல் கதிர்கள் தாழ்ந்தமை
யுற்றுமே கண்டனர் உழவர் யாவரும்
எற்றியே யரிந்தனர் இயமன் றூதுவர்
பற்றியே யுயிர்கொளும் பான்மை யென்னவே. 29

அரிந்தனர் சேர்த்தனர் அடுக்கித் தாம்பினால்
வரிந்தனர் சென்னியில் வைத்துக் கொண்டுபோய்
பரிந்துட னடித்தனர் களத்தின் பாங்கெலாம்
புரிந்தனர் போர்களாப் பொன்னின் மேருப்போல். 30



## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பிறப்பதும் வளர்ந்து மூப்புப் பெறுவது முயிர்கள் யாவும்
இறப்பது முலகில் நாளு மியற்கையா யிருத்தல் போலச்
சிறப்புடன் விளைத்துக் காத்துச் செழித்து முற் றியபைங் கூழை
அறுப்பதும் மள்ளர்க் குற்ற அனுபவ மாயிற் றன்றே. 31

சிற்றறி வுடைய மக்கள் செய்கின்ற சிறுபூ சைக்கும்
முற்றறி வுடைய வீசன் முழுப்பலன் அளிக்கு மாபோல்
உற்றுசெய் விதைத்த செந்நெல் ஒருமணி பன்னூ றாகப்
பிற்றைநா ளீந்த நோக்கிப் பெருமகிழ் வுற்றார் மாந்தர். 32

உலாவிடு கிரிகட் குற்ற சிறகரை யொழித்துப் பின்னர்
வலாரிதன் வார ணத்தால் வதைத்திடு வகையே மான
பலாலத்தின் படுகைமீது பகடுகொண் டுழக்கி மள்ளர்
குலாவியே வைக்கோல் வேறு நெல்வேறு குவைசெய் வாரால். 33

குற்றமுங் குணமும் வேறு பிரித்திடுங் கொள்கையார்போல்
பற்றியே துகளும் வையும் பகுத்திட வுன்னி மள்ளர்
உற்றெழு காலிற் றூற்றி யொருங்குவை யகன்ற பின்னர்
நெற்றிரள் முகந்து வேறாய் நிரந்திடப் பொலிகள் செய்தார். 34

அறநன்னூ லுரைத்த வண்ண மாற்றுவ பலவு மாற்றி
யிறைவனுக் காறி லொன்றை யீந்தபின் மற்றை நெல்லை
யுறவினர் பிதிரர் தெய்வம் விருந்தொடு தாமு முண்ண
நிறையவே கொடுபோய்த் தங்கள் குதிர்களில் நிரப்பி வைத்தார்.

## மருதம்

கள்ளைக் கடிந்து மள்ளர் கரும்பொன்னு லையிலிட் டாட்டல்
நன்னெறி யொழுக லாத நவையுடை மாந்தர் தம்மை
மன்னவ னாணையேற்றே மறலிதன் தூத ரானோர்
தன்னகர் கொடுசென் றுய்த்தே தண்டிக்குந் தகைமைத் தாமால்.

ஊறுசெய் பவர்க்கே யீயு முலோபர்தஞ் செய்கை யென்னக்
கூறுசெய் தாலை வாயிற் கொடுத்தபின் கன்ன லெல்லாம்
சாறுதந் திடவும் மள்ளர் அவற்றினைச் சாலிற் பெய்து
வீறுகொண் டடுப்பி லேற்றிக் காய்ச்சியே வெல்லஞ் செய்வார். 37

சோலைவாய்க் கதலி மாவும் வருக்கையுந் தோன்றி நின்றே
ஏலவே வருவோர்க் கெல்லாம் இன்கனி யுதவுந் தோற்றம்
சாலவே யறஞ்செய் கின்ற தன்மையர்க் குள்ள மூன்று
சீலமார் குணங்கள் தம்மைத் தெரிப்பன போன்ற வன்றே. 38

மங்குலை யளக்கக் காஞ்சி மதியினைக் கமுக ளக்கத்
தங்கிய மருதம் யாவும் தாவில்பல் கோள ளக்கத்
தெங்குகள் இளநீர் தாங்கிச் சிறந்தவான் முகடளக்க
எங்கணுஞ் சோலை சூழ்ந்தே யினன்வெயி லகற்று மாதோ. 39

அறநெறி யொழுகு வோரை யன்புடன் எதிர்கொண் டேத்தி
முறைமையி னிருத்தி யன்னம் முகனமர்ந் தன்பா லூட்டிப்
பிறையணி சடையான் பாதம் பிறழ்கிலா தொழுக்கம் பூண்ட
நிறைகுண முடைய மாந்தர் நிறைந்துள தந்நா டம்மா. 40

குமரருங் கோதை மாருங் குலவிமெய்ப் புளகம் போர்ப்ப
அமரரும் நாணக் காம வாரியி லழுந்தி யின்பம்
சமைவுற நுகர்ந்தே யில்லந் தருங்கடன் முறையி லாற்றி
உமையொரு பாகர்ப் போற்றி யுவந்துமே வாழ்வ ரெங்கும். 41

நெய்தல்

ஈகையில் லவர்செல் வம்போல் எவருக்கும் உதவி டாத
சாகர மொருபால் வைகச் சற்குண முடைய வள்ளல்
ஓகையோ டெவர்க்கும் நல்கும் உண்மைபோல் வருவோர் தங்கள்
தாகத்தைத் தீர்க்குங் கேணி தனித்தனி நிலவு மாங்கண். 42

பத்தியாங் கடலின் மூழ்கிப் பரமன்கண் டிகைநீ றிட்டே
உத்தம மறையு மோதி யுவந்தமெய்ப் பொருளார் போன்று
சத்தமார் கடலின் மூழ்கிச் சங்கொடு பவள மிப்பி
முத்துமே வாரி யின்பம் முற்றிய செல்வரோர்பால். 43

ஒப்புயர் வற்ற சைவ சித்தாந்தத் துண்மை யோர்ந்து
தப்புமைம் புலன டக்கித் தனிமனஞ் சிவன்பா லொன்றத்
திப்பிய சிவானந் தத்துள் திளைத்திடும் முத்தர் போன்றே
உப்புறை கடலி னுப்பண் சுறவின முறங்கு மோர்பால் 44

துப்பொடு தரளத்திப்பி குளிப்பவர் துழனி யோடும்
உப்பினை விளைத்துக் கூட்டு முமணர்க ளொலியு மந்த
வுப்பினை நுளைச்சி மார்கள் விற்றிடு மொலியுங் கூடிக்
கப்பியே கடலி னார்ப்பைக் கடந்துமேல் கலிக்கு மாதோ. 45



குறிஞ்சி

இரப்பவர் தங்கட் கியாதும் ஈயாமல் ஏகு மாறங்
குரப்பிடும் உலோபர் போன்றே வுயர்தரு கிரிமீ தேறி
நிரப்பற வேடர் தேன்கொள் நிலைமையில் வண்ட டர்த்தே
பரப்புடை யவர்கள் தம்மேற் பாய்ந்துமே துரத்து மாதோ. 46

நானிலம்

கொடிச்சியர் குறிஞ்சி யானைக் கொம்பினின் றெடுத்த முத்தும்
இடைச்சியர் முல்லையாவின் பல்லினின் றெடுத்த முத்தும்
கடைச்சியர் மருதந் தோன்றுங் கழையினின் றெடுத்த முத்தும்
கடற்பிறைக் கம்புள் முத்துங் களமெலா மொளிரு மாதோ. 47

செந்தினை பிரசம் பாகல் செழித்திடுங் குறிஞ்சி தன்னில்
மந்தையான் நெய்பால் வெண்ணெய் மல்கிடு முல்லை தன்னில்
பந்தஞ்செய் கரும்பும் நெல்லும் பரவிடும் மருதந் தன்னில்
அந்தமார் துகிரும் முத்தும் நெய்தல்தா மளிக்கு மன்றே. 48

திணை மயக்கம்

குன்றிடை வாழும் மஞ்ஞை குடத்தியர் சாயல் காட்டும்
துன்றுகாண் முல்லை குன்றின் தோகையர் பற்கள் காட்டும்
தொன்றுவான் மருதக் கஞ்சம் நுளைச்சியர் துண்டம் காட்டும்
நன்றுநீர்ப் பவளம் பானல் நங்கைய ரதரங் காட்டும். 49

வில்லியர் தேனைப் பானல் சாலிக்கு விற்பர் மிக்க
முல்லையர் நெய்பால் முந்நீர் முத்துக்கு விற்பர் முத்த
நெல்வயல் தன்னில் முல்லை மேதியும் நெடிது லாவும்
மெல்லியர் நடையைக் காண அன்னமு மேவு மாதோ. 50

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஆறுகள் தம்மில் வாளைகள் குதிக்கும்
அலைகளில் செம்பொனே கொழிக்கும்
சேறுகள் தம்மில் மேதிகள் முழக்கும்
செய்களில் நீலங்கள் முகிழ்க்கும்
நாறுகள் தம்மை வளர்த்திடும் பூந்தேன்
நாடதை வளர்த்திடுஞ் செங்கோல்
சாறுகள் தம்மை வளர்த்திடும் வீதி
தமிழினை வளர்த்திடும் மன்றம். 51

ஊரெலாஞ் சிவால யங்களே மிளிரும்
உரையெலாந் தமிழ்மண மொளிரும்
நீரெலாம் புனித தீர்த்தமாய் விளங்கும்
நெறியெலாஞ் சைவமே துலங்கும்
பேரெலாம் சிவத்தின் நாமமே கமழும்
பெட்பெலாம் அடியர்பால் திகழும்
சீரெலாம் விளங்குந் திருமுனைப் பாடிச்
செந்தமிழ் நாட்டிடை யம்மா. 52

பதிநிலை யதனை யாய்வதும் பசுக்கள்
பலன்பெறு நிலையையும் பாசம்
பொதிநிலை யுதனை மாய்வதும் ஏனைப்
புறநெறி யாய்வதும் பொருள்சேர்
விதிநிலை விலக்கு நிலையையும் இன்ப
மெய்ப்பொருள் நிலையையும் ஆய்ந்து
கதிநிலை யதனை விளக்குவ வான
கழகங்கள் எங்கணும் மிளிரும். 53

அறத்தினைப் பொருளை யின்பத்தை வீட்டை
யடைவகை யனைத்தையும் ஆய்ந்து
புறத்தினில் மனத்தைச் செலுத்திடா நீசன்
பூசனை புரிவதும் அடியார்
திறத்தினில் வழுவா தவர்களுக் குதவி
செய்வதும் சிவன்றன்பால் பத்தி
மறத்தலில் லாத மக்களே குழுமி
வாழ்வதவ் வளங்கொள்நா டம்மா. 54

கலைகளை யுணரும் அறிவினால் கேள்வி
கசடறக் கேட்டுணர் பயனால்
தலைமைபெற் றுள்ள மறைகளுஞ் சடங்குந்
தவறிலா துணர்ந்து செய் செயலால்
மலைவிலா தெவர்க்கும் பொருள்நனி யுணர்த்தும்
வன்மையால் வாதுசெய் திறத்தால்
புலமைபெற் றுள்ள அறிஞர்கள் பல்லோர்
பொலிவது மந்தநன் னாடு. 55

கோளரிக் கூட்டம் போல்பவர் குமரர்
குமரர்கள் கூட்டம்போல் கடலின்
நீளமார் அலைகள் தோன்றிடும் நீரின்
நிரையெனச் சோலைகள் நிறையும்



தூளமார் சோலை யெனும்பெண்கள் சுருள்கள்
சுருள்கள்போல் மேகங்கள் தோன்றும்
காளமே கம்போல் கரிகள் நின் றுலாவும்
கவின்பெறும் அந்தநாட் டிடையே. 56

மங்கையர் முகம்போல் வான்சசி தோன்றும்
வான்சசி போல்பவர் மகளிர்
அங்கவர் துடைபோல் அரம்பைகள் வளரும்
அரம்பையர் போல்பவர் மகளிர்
நங்கையர் விழிபோல் மீன்கயத் தொளிரும்
நாகமீன் போல்பவர் நல்லார்
துங்கவே ழத்தின் கோடவர் சுவர்க்கம்
சுவர்க்கம்போல் நகரெலாந் தோன்றும். 57

## தலங்கள்

அந்தகற் செற்ற கோவலும் புரத்தை
யழித்திடும் அதிகையும் அப்பர்
சிந்துவின் கரைவந் தேறிய புலிசை
தீயுருக் கிரியதா மருணை
சுந்தரர் பொன்னாற் றிடுமுது குன்றம்
சூரியன் பூசைசெய் காட்டூர்
கந்தன்வாழ் மயிலம் ஆகிய தலங்கள்
கவின்பெற விளங்குமந் நாட்டில். 58

மாணிமுன் தவஞ்செய் குழியதும் விடத்தின்
மருளகல் நந்திமங் கலமும்
பேணிய வதிட்டர் குடியதும் எருக்கும்
பிருங்கிமுன் னீச்சுரம் ஆமூர்
காணியில் தினைகாண் திருத்தினை நகரும்
கைக்குறி பெறுபெண்ணா கடமும்
வேணியர் முத்துச் சிவிகைதந் தருளுந்
துறையதும் விளங்குமந் நாட்டில். 59

சுந்தர ருதித்த நாவலூர் வடுகூர்
சுகருமே பணியிடை யாறும்
அந்தண னாகி யாவணங் காட்டும்
அருட்டுறை அறையணி நல்லூர்

செந்தமிழ் முனிவன் பணிதுறை யூரும்
தியாகையுங் கூடலை யாற்றூர்
வந்திடு சனகர் நெல்வெண்ணெய் மாத்தூர்
வளம்பெறும் அந்தநன் னாட்டில். 60

பூமகள் கேள்வன் இனன் மகனுடனே
பொருந்திய நட்புறு நாடு
வீமனும் புருடா மிருகமும் முன்னாள்
வேத்தவை புகுந்தவந் நாளில்
ஏமன் றன் தனயன் நீதியே வழங்கி
யிசைதனைக் கொண்ட நன் னாடு
வாமனன் றனக்கு மூவுல கதனை
வழங்கிய நாடுமஃ தாமால். 61

அத்தகு நாட்டின் சிறப்பினிற் சிறிதே
யறைந்தனம் அந்நடு நாட்டிற்
பித்தனென் றுரைத்த சுந்தர ருடனே
பெருவழக் காடியாட் கொண்ட
வித்தக னாகும் அருட்டுறை நாதன்
விளங்கிடு வெண்ணெய்நல் லூரின்
உத்தமச் சிறப்பை யுமாபதி யருளால்
அறிந்தவா சிறிதுரைத் திடுவாம். 62

திருநாட்டுப்படலம் முற்றுப்பெற்றது.

ஆ௳ செய்யுள் 94.

## இரண்டாவது

## திருநகரப் படலம்

### கலிநிலைத்துறை

தம்மை யேநினைந் தன்புசெய் தவத்தினர் தமக்கே
யிம்மைப் போகமும் ஈறிலா இன்பமும் ஈயும்
அம்மை பாகனை யருட்டுறை யண்ணலை வணங்கி
எம்மை யுஞ்சிவ போகமே யெய்திவாழ் குவமால். 1

கண்ண கன்றிடு முலகமாங் காரிகை மார்பில்
வண்ணஞ் செய்திடு மதாணிபோல் மகதநா டொளிரும்
நண்ணும் அந்தம தாணியில் நடுவொளிர் மணிபோல்
வெண்ணெய் மாநகர் விளங்கியே தோன்றுவ தாமால். 2

ஈறி லாதமெய்ப் போகம்வீ டெனுமிரண் டினையும்
மாறி லாதருள் வெண்ணெய்நன் மாநகர் தனக்கே
ஏறு போகமொன் றேயருள் இமையவ ருலகும்
கூறல் ஒக்குமோ இணையெனக் குவலய மதிலே. 3

திருவின் ஆக்கத்தால் தேசினால் திகழ்ந்திடு கின்ற
உருவின் மாண்பினால் ஒழுக்கத்தால் உரைத்திட வொண்ணா
அருமை தோன்றலால் அறிவினால் அளப்பரும் அருள்செய்
பெருமை மேவலால் தன்னைத்தான் நிகர்ப்பதப் பேரூர். 4

வாணி கேள்வனும் வாரிச மங்கைமார் பகனும்
வேணி மேன்மதி மிலைச்சிய வேதநா யகனைப்
பேணி யேத்தியே யுறைதலால் பிரமன்வா ழுலகும்
காணுங் குந்தமும் கயிலையும் கடுக்குமத் தலமே. 5

இளமைச் செவ்வியில் முருகனும் இறைவரிற் சிவனும்
கிளருஞ் செல்வத்திற் குபேரனும் கிரிகளில் மேரும்
முளரி பன்மலர் களிலுமே முதன்மையா வதுபோல்
வளமை சேர்வெண்ணெய் மாநகர் முதன்மையாம் வைப்புள். 6

ஆர ணம்பகர் பிரமனும் அச்சுதன் தானுஞ்
சேர வேதினம் பூசைசெய் செல்வன்வாழ் கின்ற
தோர ணம்பயில் வெண்ணெயைத் தொழுமவர் செல்வம்
நேரப் பெற்றுமே யின்பத்தில் நெடிதுநாள் வாழ்வார். 7

## புறநகர்ச் சோலை

நன்றி யுன்னிச்செய் நல்லவ ரென்னவே நன்னீர்
துன்றி யுண்டுமே வளர்ந்திடு சோலைவாய் வண்டு
சென்று கிண்டலால் மலர்பொழி தேன்வழிந் தோடி
என்றும் வாவிபாய் பொதும்பர்கள் எங்கணும் நிறையும். 8

## அகழி

அம்மை முன்னரே தவம்புரிந் தருளடைந் துளதால்
இம்மை யாமும்போய்த் தவம்புரிந் திறையருள் பெறலே
செம்மை யென்றுனிக் கங்கையுஞ் சென்றுசேர் செயல்போல்
எம்மை யுங்கவிந் துள்ளதால் எயிற்புறத் தகழி. 9

## மதில்

பங்க யாசனன் எகினமாய்ப் பறந்துவான் சென்றும்
மங்கை பாகன்றன் திருமுடி காண்கிலன் வந்தான்
இங்கி யாமினி யம்முடி காண்பமென் றெழல்போல்
மங்குல் மேலுஞ்சென் றுயர்ந்தன மாநகர் மதிலே. 10

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வெண்சுதை தீற்றப் பெற்று விளங்கிடுந் தேசி னாலுங்
கண்கவர் மிடற்றில் மேகங் கவிந்திட இளநி லாவும்
நண்ணிமேற் செல்ல லானும் நம்பன்றன் வடிவே போல
எண்ணில்மா டங்கள் சூழ்ந்தே யிலங்குமந் நகரம் மாதோ. 11

## கோபுரம்

சிவதரு மங்கண் முற்றிச் சேர்சுத்த தத்து வத்தின்
துவநிலை புவனந் தோறுந் தோமறு போதந் துய்ப்போர்
பவனருள் பெறவி றங்கும் படியமை மேரு வென்ன
நிவந்தெழு கோபு ரங்கள் நிமிர்ந்துசேண் தாவு மாதோ. 12

மன்னிய வெண்ணெய் நல்லூர் மாநகர் வளப்பங் காண்பான்
முன்னமே விரிஞ்ச னேத்தி முகம்நான்கு திசைக்கும் பெற்றான்
அன்னனந் துதித்துக் கொள்வான் அரியும்வந் தடைந்தா
னென்ன
மின்னொளிர் கோபு ரங்கண் மேன்முகில் தவழும் மாதோ. 13



## வீதி

கொடியொடு தோர ணங்கள் குலவிமேல் விளங்க லானும்
இடையிடை செம்பொற் கும்ப மெங்கணும் நிறைத லானும்
புடையெலா மரம்பை பூகம் நாட்டிய பொலிவி னாலும்
விடையவ னருள்போற் றண்மை விளங்கிடும் வீதி மாதோ. 14

## யானை

காதலிற் சிக்கி மாழ்குங் காமுக ரானோர் மற்றோர்
மேதக வுரைக்குஞ் சொல்லை மீறியே செல்லல் போன்று
மீதமர் பாகர் காட்டும் வழிதனை மீறி யேகும்
தீதிலாக் குஞ்ச ரங்கள் தெருவிடைச் செல்லு மாதோ. 15

## குதிரை

தோற்றமார் செம்பொற் றேரிற் றுலங்கவே பூட்டி யிர்த்துக்
காற்றினுங் கடிது செல்லுங் கவனவாம் பரிதன் வேக
ஆற்றலிற் பவனன் காற்பங் களவின னென்ன வோர்ந்தே
சாற்றினர் போலு மாலோ கால்எனச் சமீர ணற்கே. 16

பாட்டெலாஞ் சிவன்பா லன்பு பதியச்செய் பாட லேயாம்
நாட்டிய மெல்லா மீசன் புரிந்திட்ட நடன மேயாம்
கேட்டிடு சரிதை யாவு மவன்புகழ் கிளத்த லேயாம்
கூட்டங்க ளெல்லாந் தொண்டு புரிந்திடுங் கூட்ட மேயாம். 17

## அந்தணர் வீதி

பண்ணமை மறைகள் தேர்ந்தோர் பலப்பல வேள்வி செய்வோர்
அண்ணலா ரிலிங்க பூசை யணுக்கரா யிருந்து செய்வோர்
எண்ணரியே பன்னீ ராயி ரவரென வெவருங் கூற
நண்ணிவா ழந்த ணாளர் வீதியின் நலங்க ளோர்பால். 18

## அரசர் வீதி

பலபல நீதி யோர்ந்து பகையெலாங் கட்ட றுத்து
நிலமிசைச் செங்கோ லோச்சி நெருங்குமைந் துயர கற்றி
வலமுற விற்போ ராற்றி வரிசையின் வழாது வாழும்
தலமதிற் காவல் பூண்ட தரணிப ரிருக்கை யோர்பால். 19

### வணிகர் வீதி

முன்னைய நாளிற் செய்த நல்வினை முதிர்ந்தே யீசன்
தன்னரு ளாணை யுந்தத் தான்வந்து பயத்தல் மான
மன்னிய வளங்கள் யாவும் வருபகல் சேர்த்து வைத்துப்
பின்னை நாள் வணிக ரீயும் பெருநெடுந் தெருவு மோர் பால். 20

### வேளாளர் வீதி

இருவிசும் புளமின் கோள்கள் இழிந்துகீழ் வீழா வண்ணம்
துருவனே தாங்கி நிற்குந் துணையென வளத்தி னாலே
வருபெரும் பொருளை யெல்லாம் பகுத்துமே வறிஞர்க் கீயும்
பெருவள முடைய வேளாண் வீதியும் பிறங்கு மோர்பால். 21

### பரத்தையர் வீதி

அடியவர் புரியும் அன்பின் அளவின தாக ஈசன்
படிமிசை யின்ப நல்கும் பான்மைபோல் பரிவு கொண்டே
அடைவுறு குமர ரீந்த செம்பொன்னி னளவே யின்பங்
கொடியிடைக் கணிகை மார்கள் கொடுத்திடுந் தெருவு மோர்பால்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எண்ணினு ளடங்காப் பவம்புரிந் தோரு
 மிந்நக ரடைந்துமே வாழ்ந்து
புண்ணியஞ் சிறிது புரியினு மதுதான்
 கோடியாப் புவனியோர் வியப்ப
நண்ணியே யின்ப நல்கலால் தேவர்
 நாடியே தம்பதம் விடுத்து
வெண்ணெய்மா நகரில் வாழ்ந்திடு மிதனின்
 மேன்மையை விளம்புத லெளிதோ. 23

### தருமம் 32

ஆதுலர் நமக்குச் சாலையுஞ் சோலை
 யாவின்வா யுறையுமா வுரிஞ்சும்
ஓதுவார்க் குணவு நாவிதர் வண்ணார்
 ஒண்டொடி போகமும் வாவி
தீதில்நோய் மருந்து தின்பண்டம் நல்கல்
 திருமடம் விலங்கினுக் குணவு
காதினுக் கோலை கண்மருந் தையம்
 கன்னிகா தானம்கண் ணாடி. 24



பகரறு சமயத் தவர்களுக் குண்டி
 படுதுயர் காத்திடல் பகடு
மகப்பெறு வித்தல் வளர்த்தல்பால் வார்த்தல்
 வறியவர் பிணஞ்சுடல் சுண்ணம்
மிகுதலைக் கெண்ணெய் தூரியஞ் சோறு
 விலையுயிர் காத்தல்நீர்ப் பந்தல்
இகழ்சிறைச் சோறெண் ணான்குமே யிந்த
 நகரிடை மனையற மீயும். 25

### தானம் 16

அன்னநற் றனம் வினைவொடு வெள்ளி
 அடிமைகா தைலமா டெள்ளு
கன்னிகை பூமி தேர்பரி யானை
 கலைபணி கபிலைபொன் னில்லம்
இன்னவாம் ஈரெண் தானம் யாவையுமே
 யிந்நகர் தன்னிலே யினிய
அன்னமிட் டுண்ணும் புண்ணியந் தனக்கு
 நிகரென வருமறை யறையும். 26

### ஆடவர் கடன் 9

வருவிருந்தினரை எதிர்கொளல் ஏற்றல்
 வருகென வின்மொழி பகர்தல்
பெருமிதந் தோன்ற நோக்கிடல் வியந்து
 பேசுதல் மகிழ்வன புரிதல்
அருகுற விருத்தல் முகமனோ டளாவல்
 அவர்பிரிந் திடிலுடன் சென்று
பிரிவிலா விடைகொண் டிடுதலொன் பதுமே
 பிறங்குமந் நகருளோர் செயலாம். 27

### மகளிர் கடன் 12

அட்டிலும் புகுதல் சமைத்திடல் ஊட்டல்
 அன்புடன் விருந்தெதிர் கொள்ளல்
மட்டிலா மகிழ்ச்சி யுடன்மகப் பெறுதல்
 மடமச்சம் நாணமும் கொள்ளல்
கிட்டியே கணவன் துயின்றபின் துயிலல்
 கிளருமுன் எழுந்திடல் வணங்கல்
ஒட்டியே இந்தப் பன்னிரு செயலு
 முடையவ ரந்நகர் மகளிர். 28

திருநகரப்படலம் முற்றுப்பெற்றது.

ஆக செய்யுள் 122.

## மூன்றுவது

# தலவிசேடப் படலம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அவனிவண் என்று கூறிச் சுட்டுதற் கரிய தாகி
எவனுமே நிறைந்த சோதிப் பிழம்புமா யிதய நந் தன்னுள்
தவமுறை காண்டற் கொத்த தனிப்பெரும் பொருளே யாகிச்
சிவனெனு நாமங் கொண்ட பிரானடி சென்னி சேர்ப்பாம். 1

ஒருமுத லாகு மீசன் இருகழல் ஒன்றி மூன்று
கரணங்க ளார நான்கு மறைவழி கசிந்து நோற்றுத்
திருகுமைம் புலன்க டிந்தே யறுதொழில் தினமும் ஆற்றும்
அரியமா தவர்கள் பல்லோர் அன்புடன் குழுமி னூரால். 2

பரம்பொருள் தந்த வேதப் பயில்கின்ற செய்ய வாயான்
விரைமலர்த் தாமந் தாழ வீற்றிருந் தருளு கின்ற
புரமதாம் மனுவை திக்குப் போந்துமே முனிவ ராஞேர்
பிரமனைக் கண்டு போற்றி நின்றிவை பேசலுற்றூர். 3

இனியமா தவங்கள் செய்தே யிருப்பதற் கேற்ற தான
தனியிடங் கிடைக்கி லாது தவிக்கின்ற தமியேங் கட்குக்
கனிமொழி வாணி கேள்வ! கருணை கூர்ந் தென்றும் நோன்பில்
நனி நலம் பயப்ப தான தலமொன்று நல்கென் றூரால். 4

அருந்தவ முனிவர்க் குற்ற பரிபவ மயனு மோர்ந்தே
கருணையாற் குசையொன் றேந்தி வட்டமாய்க் கடிதிற் செய்து
தரைதனில் விடுத்தே யிது தங்கிடு மிடமுங் கட்குப்
பொருந்திய இடமா மென்றே முனிவரைப் போக விட்டான். 5

துன்றிய வருக்கை வாழை தூயமா மருதம் தாரு
என்றபல் தருக்கள் சூழ்ந்த இமகிரிச் சாரல் நேமி
நின்றதால் முனிவர் சென்று நிறைதவம் புரிய லாஞர்
அன்றுதொட் டதனை யாரும் நைமிச அடவி யென்பார். 6

அத்தரு மடவி தன்னில் அரன்றனை யாரா திக்க
மெத்தவே யெழுந்த பூர்வ மீமாஞ்சை விளக்கும் வண்ணம்
சுத்தமூ வேழு வேள்வி சுரர்பசி தணப்பச் செய்யும்
உத்தம சவுனர் கூடி யுவந்துமே வாழ்வ தாஞர். 7



நலத்தினுன் மிகுதி வாய்ந்த நைமிச கானந் தன்னில்
நிலத்தர்செய் புண்ணி யத்தின் பேறென நிறைந்த நோன்பாற்
புலத்தினைச் செயித்த சவுன காதியர் போந்து வாழுந்
தலத்திடைச் சூதன் என்னும் தவமுனி குறுகி னுஞல். 8

புனிதமா தவர்கள் சூதன் பொன்னடி வணங்கி யேத்திக்
கனிவுடைப் பெரியோய் யாங்கள் கதிபெறு மார்க்கந் தன்னை
இனிதருள் புரிக வென்ன இருடியும் மகிழ்வு கொண்டு
தனிமுதல் சிந்தை செய்தே இனையன சாற்ற லுற்ருன். 9

இடைவெளி யிலாம லெங்கும் நிறைந்திடு மீசன் றன்னைக்
கடையறி வுடைய மக்கள் காண்கில ராத லாலே
அடைவுடன் தலங்கள் தம்மில் அம்மையோ டமர்வா னந்த
இடமறிந் தேத்தி ஞேர்கள் இன்பமே பெற்றுய் வாரால். 10

அத்தகு தலங்கள் தம்மில் அரன்மகிழ்ந் திருக்கத் தக்க
உத்தமத் தலந்தான் யாதிங் குரைத்தருள் செய்க வென்று
நத்தியே முனிவர் வேண்ட நன்றெனச் சூதன் தானும்
சத்துவ குணத்தீர் கேண்மின் என்றிவை சாற்ற லுற்ருன். 11

பூமிசைப் பரத கண்டம் பொருந்துநா வலந்தி வுள்ளே
தோமறு தோகைக் குன்றும் தொன்மைசேர் குன்றி னுள்ளும்
சோமசே கரன்றன் வீரஞ் சொரியிரு தலத்து நாப்பண்
சேமமாய் விளங்கும் வெண்ணெய்த் திருநக ரென்றென்
றுண்டால். 12

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வெண்ணய்மா நகரந் தனக்கிணை யாக
விளம்பிடு மேன்மைசேர் தலமும்
பெண்ணைமா நதிபோல் பவமெலா மகற்றிப்
பிறங்கிடு தீர்த்தமு மின்பம்
தண்ணளி யுடனே வலியவந் தியுந்
தயாபரன் றன்னையும் போல
எண்ணுறு புவனம் மூன்றினு மில்லை
யென்பது சரதமே யாமால். 13

அருட்டுறை யென்றே வுரைத்திடக் கேட்டோர்
அகிலத்திற் செல்வமே பெறுவர்
அருட்டுறை தன்னை நினைத்தவர் கல்வி
யறிவுடன் மேன்மையு முறுவர்.

அருட்டுறை தன்னில் வதிந்தவ ரின்பம்
அடைகுவர் அவ்விடை வதியும்
அருட்டுறை நாதன் திருவடி தொழுவோர்
அருளுடன் வீடுமெய் துவரால். 14

அகிலமுந் துதிக்கும் ஆட்கொண்ட நாதன்
அமர்ந்திடுந் திருத்தல மதனில்
மகிழ்வுட னறிஞர் மறைபயில் சாலை
மாதவம் புரிந்திடு மடங்கள்
சுகமுடன் அடியார் வதியுமா ளிகைகள்
தூய்மைய வாயிவை யாவும்
தகையுட னமைத்தோர் இன்பத்தில் மூழ்கித்
தரணிப ராகிவாழ் குவரால். 15

அத்தகு தலத்தில் நந்தன வனமும்
தடாகமும் அமைத்துவைத் தவர்கள்
சித்தமே மகிழத் திருப்பணி புரிவோர்
சிவனடி யவர்க்குத விடுவோர்
சத்திர மமைத்தே யறம்வளர்த் திடுவோர்
சகலரும் பிணியணு காது
நித்திய மான சிவபத முற்றே
நிறைந்தவின் பத்தினைத் துய்ப்பார். 16

பிறந்திட ஆரூர் இறந்திடக் காசி
பேணியே தெரிசிக்கத் தில்லை
மறந்திடா தெண்ணின் அருணையும் முத்தி
வழங்கிடு மென்பதே வழக்காம்
துறந்திவை யின்றி வைதவன் றனையுந்
தொண்டுசெய் கென்னவாட் கொள்ளும்
சிறந்திடு வெண்ணெய் நகரதன் பெருமை
செப்புதற் கெளிதுகொல் தெரிக்கின். 17

பல்வகைத் தலத்தில் வைகிய பலனும்
பல்வகைத் தானஞ்செய் பலனும்
பலவகைத் தீர்த்த மாடிய பலனும்
பரமனைப் பூசைசெய் பலனும்
பல்வகை யாகஞ் செய்திடு பலனும்
பல்வகைப் பணிசெயும் பலனும்
பல்வகை யாக நல்கிடும் வெண்ணெய்ப்
பதியினில் ஒருகணம் வதியின். 18



வெண்ணெய்வைத் ததனுளம்பிகை யிருந்து
வேண்டியே தவம்புரிந்திட்ட
வெண்ணெய்மா நகரிற் பிறப்பினும் வினையால்
இறப்பினும் விரும்பியத் தலத்தில்
உண்மையா யுறினும் ஒருகண மேனும்
உறையினும் உமாபதி தன்னை
எண்ணினும் முத்தி யீந்திடும் அதனுக்
கிணைசொல வொருதல முளதோ. 19

ஆடகொள்ளு நாதன் ஆலயம் வலஞ்செய்
அடிகளே அடிகளாம் அரனை
வேட்புடன் கண்டு தெரிசனஞ் செய்த
விழிகளே விழிகளாம் விமலன்
கோட்புறு சரிதம் கேட்டிடுகின்ற
கேள்வியே செவிகளாம் குழகன்
தாட்பணிகின்ற வுடலமே யுலகில்
தவஞ்செய்த வுடலம தாமால். 20

அப்பரம்பொருளை யரகரா சம்போ
ஆரணு மங்கைபங் காளா
திப்பிய ரூபா சிவசிவாவென்றே
செப்பிடு நாவதே நாவாம்
செப்பமார் மலரால் அருச்சனை புரியுங்
கரமதே திப்பிய கரமாம்
அப்பெரு மலரை மோந்திடு மூக்கே
அணிசெய்மூக் கென்பரால் அறவோர். 21

அத்தலத்துள்ள சராசர மனைத்தும்
அரன்வடி வாகுமா தலினால்
அத்தல மதனிற் பிறந்திடு பிறப்பே
யரியதென் றருமறை பகரும்
அத்தலஞ் சென்று தங்கினோர் பாவ
மகன்றிடும் அறநெறி யுடனே
அத்தலத் திறந்தோர் அளவிலா இன்புற்
றரனுல கடைந்துவாழ் குவரால். 22

அம்பிகை முன்னர் வெண்ணெயாற் கோட்டை
யமைத்து மேயதனினுள் ளிருந்து
சம்புவைத் துதித்த காரணங் கொண்டு
தருவெண்ணெய்ப் பதியென்பர் தக்கோர்

இம்பரில் வேதம் மூங்கிலின் வடிவாய்
இருந்துமே யேத்திய வதனால்
தம்பமார் வேணு வனமென வதனைச்
சாற்றுவர் தரணிமீ தினிலே. 23

வந்துமே விண்டு வணங்கிய வதனால்
வைகுந்த புரியெனப் பகர்வர்
உந்திவாழ் வேதாத் துதித்ததால் வேதா
புரியென உரைத்திடு வார்கள்
கந்தன்முன் பணிந்த காரண மதனால்
சண்முக புரியென்பர் கற்றோர்
சுந்தரர் தம்மை யாட்கொண்ட செயலால்
ஆட்கொண்ட புரமெனச் சொல்வார். 24

முன்னைநாள் விசயன் துதித்ததால் விசய
புரியென மொழிகுவ ரதனைப்
பின்னைநாள் கம்பன் வணங்கிய வதனால்
கம்பமாபுரி யெனப் பிறங்கும்
நன்னய மெய்கண் டார்பணிந் ததனால்
மெய்கண்ட புரியென நவில்வர்
இன்னணம் பலபேர் கொண்டவத் தலத்தின்
மகிமையார் இயம்பிட வல்லார். 25

### கலி நிலைத்துறை

பிரம னிந்திரன் அரிமுதற் பிறரெலாம் போந்து
பரவி மேம்படு திறத்தது பாருல கதனிற்
கருணை யோருரு வாகிய கடவுள்வீற் றிருக்கும்
பெருமை வாய்ந்தது வெண்ணெயம் பெரும்பதி யாமால். 26

செல்லும் பாதையிற் றங்கினும் செல்வத்தின் பொருட்டும்
அல்ல தெத்தொழின் முறைமையா லத்தல முறினும்
நல்ல வெண்ணெய்மா நகரென நவிலினு மவர்கள்
அல்லல் வெம்பவ மகன்றிட வீடடை குவரால். 27



உலகம் யாவையும் அழியினும் உலப்பிலா தென்றும்
இலகு கின்றதும் அடைபவர் எவர்க்குமே முத்தி
நிலையெ னத்தரு வெண்ணெய்மா நகரினை நிகர்க்கும்
தலமும் போலொரு சிவத்தலம் தரணியி லிலையால். 28

எத்து ணைப்பெரும் பவந்தனை யிழைத்தவ ரெனினும்
நத்தி யத்தல மடைபவர் நற்கதி பெறுவார்
அத்த லத்திடை வேதங்கள் பூசித்தே யரனைச்
சித்தி பெற்றிடு செயலினைச் செப்புவம் கேளீர். 29

தலவிசேடப் படலம் முற்றுப்பெற்றது.

ஆக செய்யுள் 151

**நான்காவது**

## வேணுவனப் படலம்

மூன்று கூடிய முப்பதிற் றெனுந்தொகை முடிய
ஆனற பஃறிறத் தமரரும் வணங்கிட வவர்க்குச்
சான்ற வின்பமுந் தலைமையுந் தந்துடனிற்கும்
ஏன்ற வின்னருள் முக்கணற் பணிந்தினி தியல்வாம் 1

தூய வெள்ளிமால் வரைமிசைச் சூரியர் கோடி
மேய பான்மைபோல் ஒளிசெய வீற்றிருந் தருளும்
கோயி லிற்புகுந் தன்புடன் கோதில்வே தங்கள்
நாய கன்னடி யேத்தியே நவிலலுற் றனவால். 2

கால காலனே சங்கரா கங்கைவே ணியனே
மூல காரண முக்கண முழுமுதற் பொருளே
சூல பாணியே சுந்தரா தோகைபங் காளா
நீல கண்டனே நின்மலா நின்பதம் போற்றி. 3

அன்று மாலுடன் அயனுமுன் அடிமுடி காணர்
இன்றும் நின்னிலை யுணர்ந்திலா தேங்கியே யெளியோம்
ஒன்ற நின்னிடைப் போந்தனம் உமையொரு பாகா
என்றும் நின்றனைப் பிரிகிலா திருக்கவெண் ணினமால். 4

பிறப்பி லாப்பெருந் தெய்வமே யெம்மிடைப் பிறந்து
கறப்பிலாதுல கத்தவர் கண்டுகண் களிக்குஞ்
சிறப்பைப் பெற்றிட விழைந்தனந் தேவரீர் கருணை
யுறப்ப ணித்தருள் கெனவர முவந்துவேண் டினவால். 5

மறைகள் இவ்வணம் வேண்டிட மங்கைபங் காளன்
நிறைம கிழ்ச்சிகொண் டன்பினீர் நீங்களெல் லிரும்
தறையி லோரிடந் தங்கியே தவம்புரி குவிரேல்
உறையு மவ்விடைக் குறுகியா முமக்கருள் புரிவோம். 6

உண்மை யன்பர்கள் எவையெவை விழையினு முவந்து
வண்மை யோடவை யளித்தல்நம் வாஞ்சையா தலினல்
திண்மை வாய்ந்துள திகிரியாய்ச் சென்றுநீர் நோற்பின்
எண்மை யாகநாம் வருகுவம் எனவுரைத் தனனல். 7



முக்க ணெம்பிரான் மொழிந்தவா சகஞ்சிரத் தேற்றுத்
தெக்க ணத்துள மத்திய மண்டலஞ் சேர்ந்து
நக்கன் விற்பெயர் பெண்ணைமா நதியின்தென் பாங்கர்
ஒக்க வைகியே மாதவம் உவந்துசெய் தனவே. 8

வேணு வாகியே தவம்புரி வேதங்கள் நாப்பண்
தாணு வாகிய சிவபிரான் தழலுரு வாகப்
பேணித் தோன்றலுஞ் சுருதிகள் பெரிதுளம் மகிழ்ந்தே
காணு மீசன்றன் கழலடி பணிந்திவை கழறும். 9

**அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்**

தற்பரா போற்றி போற்றி சங்கரி பாகா போற்றி
சிற்பரா போற்றி போற்றி சின்மயப் பொருளே போற்றி
கற்பக மெனமுன் நிற்கும் கருணைவா ரிதியே போற்றி
அற்புத வடிவே போற்றி யமலனே போற்றி போற்றி. 10

ஈசனே போற்றி யன்பர்க் கெளியனே போற்றி யெங்கும்
நேசமாய் நிறைந்து நிற்கும் நின்மலா போற்றி ஞான
தேசிகா போற்றி யெங்கள் செய்தவம் பலிக்கும் வண்ணம்
பூசனைக் கிரங்கி வந்த புண்ணியா போற்றி போற்றி. 11

அருவமாய் நிறைந்து நிற்கும் அருட்பெருஞ் சோதி யெங்கட்
குருவமாய்க் காட்சி நல்க உலகமீ திறங்கி வந்து
தருவடி வான வெங்க ளகடுசெய் தவம்போல் வந்தீர்
பெருந்தவ மெமைப்போ லிந்தப் பேருல கிழைத்த துண்டோ. 12

மூங்கிலாய்த் தவஞ்செய் யெங்கள் வயிற்றினின் முத்துப் போல
ஈங்கெழுந் தருளி யின்ப மீந்ததால் மகிழ்ச்சி கொண்டோம்
ஓங்கிய விலிங்க மாக வுருவுகொண் டிங்கன் வைகின்
ஏங்கிய வெங்க ளெண்ணம் ஈடேறு மென்ற மாதோ. 13

அன்றியுந் தாங்க ளாடு மானந்த நடனங் காணத்
துன்றிய வவாவெங் கட்குத் தோன்றிய தாத லாலே
மன்றிடைப் போந்தி யாங்கள் மகிழ்ந்திட நடன மாடி
என்றுமிங் கிருந்து காட்சி யீந்திட வேண்டி னேமால். 14

அத்தகு வரங்கள் தம்மை யளித்திட வேண்டு மென்றே
மெத்தவும் தாழ்ந்து வேண்டும் வேதங்கள் மகிழும் வண்ணம்
அத்தனுங் கருணை கூர்ந்தே யளித்தனம் வரங்க ளிந்த
உத்தம தலமெ மக்கும் உகந்ததே யாகு மென்றான். 15

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சத்துசித் தானந் தப்பொரு ளாகத்
தான்விளங் குன்னிடந் தங்கி
இத்தலம் போக்கும் வரவுமுற் றிடுமென்
றியாங்கள்நன் கறிகுவ மல்லால்
சுத்தநற் சிவமே நின்னருட் பெருமை
சூனிய வாதிக ளெங்ஙன்
நத்தியே யுணர்வார் நாங்கள்செய் தவமே
நற்றவ மாயின தாமால். 16

பார்முதற் குடிலை யீறதாய் விளங்கும்
பரந்தபல் பொருளுமாய் நின்று
சீர்வடி வாதி யாம்பல குணங்கள்
ஆகியே சேதனந் தன்னால்
சார்தரு கருமம் ஆகியுஞ் சாமா
னியஞ்சிறப் பாதியாய் நிறைந்தும்
ஓர்உருப் பெயரு மின்றியே யோங்குஞ்
சின்மயத் தொருவனே போற்றி. 17

எம்பொருட் டிங்கன் எழுந்தருள் புரிந்தாய்
ஈந்தனை வரங்களு மெந்தாய்
செம்பொருட் டுணிவே சிவபெரு மானே
சிவலிங்க வடிவமா யென்றும்
இம்பரித் தலத்தில் வேய்களாய் யாங்க
ளிருக்கவும் எங்கடம் நடுவுள்
பிம்பம தாகத் தேவரீ ரிருந்து
பிறங்கவும் கருணைசெய் திடுதிர். 18

இன்னணங் கருணை புரிந்திடில் தங்கட்
கெளியரே மீந்திடுங் கைம்மா
றின்னதென் றுணரோம் ஈசநின் னருளின்
திறத்தினை யெங்கன முணர்வோம்
பின்னரெம் மன்றில் நடனமும் புரிந்து
பேரருள் நல்கிட வேண்டும்
என்னவே மறைக ளியம்பிடப் பெருமா
னிலிங்கமா யங்கிருந் தனனால். 19



மணந்தரு தைல மான்றரு தயிர்பால்
மதுநிறை முக்கனி நெய்தேன்
வணமிகுங் கரும்பு பச்சைக்கர்ப் பூரம்
வாசமார் புனுகுகத் தூரி
கணமிகு விரைகோ ரோசனை ஞாழல்
கண்டுசர்க் கரையுட னிளநீர்
குணமிகு சாந்தக் குழம்புசவ் வாதுங்
குடங்கொடு மஞ்சன மாட்டி. 20

நிறைந்தவொற் றுடை சாத்தியே வெண்ணீ
றிட்டுப்பட் டாடைகள் சாத்திக்
குறைவிலாச் செம்பொன் மணியணி பூட்டிக்
கொங்குறை மலர்த்தொடை சாத்தி
நறைமிகு தூபந் தீபமுங் காட்டி
நறுநெய்யோ தனம்பல வைத்துக்
கறைமிடற் றண்ணல் தன்னையே மறைகள்
கனிவுடன் பூசைசெய் தனவால். 21

அன்புடன் பூசை புரிந்தபின் மறைகள்
அரனடி பணிந்துபின் னெழுந்து
மின்னொளிர் சோதி யுருவமாய் ஒன்றாய்
வேறொரு தொடர்பின்றி யாண்பெண்
என்னுமக் குறிக ளின்றியா தார
மின்றிவே தனைவிகா ரங்கள்
மன்னிடாப் பரம வத்துவே யென்று
மிவ்வுரு மன்னிவாழ் குவிரே. 22

ஏவரும் வந்துன் னிணையடி வணங்க
விவ்வுரு ஏற்றதா தலினால்
மேவியிவ் வுருவாய் இங்கண்வீற் றிருக்கின்
மேதினி வாழ்குநர் பலரும்
ஆவலோ டணுகி யருச்சனை புரிந்தே
யாவன பெறுகுவ ரெங்கள்
தேவையும் பூர்த்தி யுற்றிடு மென்றே
தெய்வமா மறைகள்கூ றினவால். 23

இவ்வரம் முன்ன ரீந்தன மன்றே
இவ்விட மிருந்தென்று நீங்கோம்
எவ்வரம் வேண்டி ஏவர்கள் வரினும்
இசைவுட னவ்வர மீவோம்

செவ்விய மறைகா ளுங்களுக் காகத்
தோன்றிட்ட இவ்வுரு என்றும்
ஒவ்வியே பெற்று வாழ்குவ மென்றே
உரைத்தனன் உயர்பரம் பொருளே. 24

ஆரணங்களுக்கு வரமளித் தருளி
அமைவடி வாகிய வவற்றுள்
காரண மான விலிங்கமா யிருந்து
கருணையோர் வடிவெனும் வண்ணம்
தாரணி போற்ற அருள்புரிந் திருந்தார்
தண்ணருள் பொழியுமா முகிலும்
பூரண ளுகி யெங்கணும் நிறைந்தே
போதமாய் விளங்கிடும் பெருமான். 25

கோச்சகக் கலிப்பா

அவ்வண்ணம் பன்னூருண் டகன்றதன்பின் னப்பெருமான்
திவ்விய நற் றிருமேனி தெரிந்திடா வகைமூங்கில்
கவ்வியிட மண்மூடிக் கழைத்திடராய் விளங்கியதால்
திவ்வியவப் பெருமானைத் தெரிந்துகொள்வோர் எவருமிலை, 26

பண்டுசெய்த தவப்பயனல் பசுப்பால்விற் போனொருவன்
அண்டியந்தத் திடர்வழியாய் அனைவருஞ்செல் வதையறிந்தே
மண்டிடுபாற் குடமெடுத்தவ் வழிவரவோர் வரைதடுத்தே
கொண்டுவந்த பாற்குடத்தைக் குப்புறவே கவிழ்த்ததுவே. 27

தலையிருந்த பாற்குடத்தைத் தடுத்துவீழ்த் தியதான
இலைநிறைந்த மூங்கிலினை யிருதுண்டாத் தறித்தெறிந்து
விலைபகர மறுநாளுஞ் சுமந்துவர வேய்வளர்ந்தே
கலையாலப் பாற்குடத்தை முன்னுள்போல் கவிழ்த்ததுவே. 28

பின்னுளுங் கொடுவாளாற் பிளந்ததனை வீழ்த்திய பின்
முன்னுள்போற் செல்லுதலும் முளைதடுத்துக் கவிழ்த்திடலாற்
பன்னுளுந் தடை செய்யும் பாதபத்தின் வளர்ச்சிதனக்
கென்னேகா ரணமென்றே யெதிர்ப்பட்டா ரிடம்புகன்ருன். 29

அன்னவர்களுரைப்படியே யடியோடும் பெயர்த்தெறிய
துன்னியவா யுதங்களுடன் சூழ்ந்ததனை யகழுங்கால்
சென்னிநின்றுங் குருதிவரச் சிவபெருமான் திருவுருவம்
முன்னின்று காட்சிதர முடிவணங்கித் துதித்தெழுந்தான். 30



என்பெருமான் திருவுருவம் இருப்பதனை யுணராதே
துன்பஞ்செய் தேனென்றே துடிதுடித்து நகர்புகுந்து
தன்பிழையை மொழிந்திட்டான் தக்கோர்கள் பலர்கூடி
யன்புடையார்க் கமுதாகும் அரன்வடிவைத் தெரிசித்தார். 31

மண்வெட்டி வடுவுடனே வயங்குகின்ற பெருமாற்குத்
தண்புனன்மஞ் சனமாட்டித் தனியாடை பணி பூட்டி
உண்சுவைபக் கணங்களுடன் ஒதனமுந் தாம்படைத்துக்
கண்கொள்ளாக் காட்சிதனைக் கண்டுதெரி சித்தார்கள். 32

அப்பெருநா டாள்கின்ற அரசிளங்கோ வும்போந்து
செப்பவொண மகிழ்வுடனே சிவபெருமான் எழுந்தருள
எப்புறமும் மதிலெடுத்தே எழிலுறுமா லயம்வகுத்துத்
திப்பியநற் பெருமாற்குத் தினம்பூசை செயச்செய்தான். 33

ஆண்டொருபாண் டியன்வந்தே யபிடேகம் புரிவதற்குப்
பாண்டியன்றன் குளமெனத்தென் பாலிலொரு குளமெடுத்தே
யாண்டவனுக் கபிடேகித் தரியவரம் பெற்றிட்டான்
காண்டகுமே னிப்பெருமான் கருணையுட னிருந்தனுல். 34

ஆயபன்னூ ருண்டுகள்பின் னங்குவந்த விரட்டையர்கள்
நாயகன்றன் முடிவடுவைக் கண்டுமுனம் நடந்ததனை
வேயீன்ற முத்தரெனும் வெண்பாவாற் றுதிசெய்தே
தாயனையா ரருள்பெற்ற தகைமையுல கறிந்திடுமால். 35

வேணுவனப் படலம் முற்றுப் பெற்றது.

ஆக செய்யுள் 186

**ஐந்தாவது**

# அருட்டுறைப் படலம்

**கலி விருத்தம்**

எண்ணியே தீமைசெய் யிருடி மார்கட்குந்
தண்ணளி புரிந்திடு தயாப ரன்றனைக்
கண்கண்மூன் றுடையதோர் கருணை வாரியை
யுண்ணினைந் தேத்தியே யுவந்து வாழ்குவாம். 1

நற்றுறை பயில்கிலார் நாக ராயினும்
முற்றுணர் தவம்புரி முனிவ ராயினும்
பற்றிய அறிவினைப் பாழிற் போக்கியே
குற்றமே நிலையெனக் கொண்டு வாழ்வரால். 2

பாரிடைப் பலதருப் பல்கித் தோன்றிடுந்
தாருகா வனமெனத் தழைத்த கானிடைச்
சீரைசுற் றியவராய்த் தேவி மாரொடும்
ஆரிய முனிவர ரனேகர் வாழ்ந்தனர். 3

கடவுள்பால் பத்தியுங் கருணை யும்மிலார்
கெடுமனக் கிரியையாற் கீர்த்தி யுற்றிடல்
திடமென வுன்னிய தீய நெஞ்சினர்
தடம்நிறை தாருகா வனத்துத் தாபதர். 4

முன்னவ னாகிய முக்கண் மூர்த்திபால்
துன்னிய பகைமையுந் தொடர வேகொடு
உன்னியே யாபிசா ரவோம வேள்வியால்
மன்னிய பரமனை மாய்க்க வெண்ணினர். 5

எள்ளுமவ் வேள்வியை யியற்றுங் காலையில்
துள்ளுமவ் வெரியிடைத் தோற்றம் வாய்ந்துள
வள்ளுகிர்ப் புலியொன்று வந்த தாலதை
நள்ளியே யீசனை நலிகென் றேவினார். 6

சீற்றமாய் வருபுலி சினத்தைக் கண்டனன்
ஆற்றலா லதைக்கிழித் ததனை யாடையா
ஏற்றன னுலகங்க ளெவையுங் கூடியே
போற்றிடுஞ் சிவனெனும் பூதநாதனே. 7



முனிவரென் றுரைசெய்யம் முழும கார்கள்பின்
துனியுறு மம்மக மியற்றித் தோன்றிய
வினைபுரி சூலத்தை விடுக்க மேலவன்
தனிக்கரத் ததைப்படை யாகத் தாங்கினான். 8

பின்னரும் மகத்தினிற் பிறந்த மான்றனை
யின்னல்செய் கெனவிட இடக்க ரத்தினில்
முன்னவ னேற்றலும் முனிவு கொண்டுமே
பன்னகம் விடவவை பணிக ளாயவே. 9

பணியெலாம் பணிகளாய்ப் பரமற் காகவே
தணிவிலாச் சினமுடன் தருக்கிப் பூதங்கள்
அணியணி யாய்விட வவற்றை யையனும்
பணிசெயும் படைகளாப் பாங்கிற் கொண்டனன். 10

பகைத்திடு முனிவர்கள் பதைத்துப் பின்னரும்
நகைத்திடு வெண்டலை நம்பன் மேல்விட
தகைத்துமே யதனையுந் தலையிற் சேர்த்தனன்
திகைத்துமே பின்னருந் தீமை யுன்னுவார். 11

கொடியமந் திரங்களே கூடித் தோன்றிய
துடியினை விடவது தோகை பாகனின்
கடிமலர்க் கரத்தினிற் கறங்கி நிற்கவும்
துடிதுடித் திருடியர் துன்பஞ் சூழ்குவார். 12

மீண்டுமவ் வெரியிடை வெகுண்டு தோன்றிய
காண்டகு முயலகன் றனைக்க னன்றெரி
மூண்டிடு தீயையும் முடுக்க வன்னவை
ஆண்டகை பதங்கரத் தடக்கி வைத்தனன். 13

கோபங்கொண் முனிவரர் கொதித்துப் பின்னருஞ்
சாபங்க ளீந்தனர் அவையுஞ் சார்கில
சோபைதீர் நாணமுஞ் சூழ நீங்கிடாப்
பாபமும் பழியுமே படிய நின்றனர். 14

கோபமே சாதுவைக் கொடிய னாக்கிடும்
கோபமே பிழைசெயத் தூண்டு கோலு மாம்
கோபமே கொலைசெயக் கொழுகொம் பாதலால்
கோபமே யுலகினிற் கொடிய தென்பவே. 15

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உலகெலாம் ஒழிக்கும் முக்கண் ணொருவனை யொழிக்க வென்றே
பலபல முயற்சி செய்தும் பலித்திடா தொழிந்த தாலே
சலந்தனை யறவே விட்டுச் சங்கர னருளற் கேற்ற
தலமெதென் றறிந்து வெண்ணைத் தலமதை நாடி னாரால். 16

சிற்பர னாகி யெங்கும் நிறைந்திடுஞ் சிவனைக் கொல்ல
அற்பராம் முனிவர் செய்த அடாததுற் செயலை யெல்லாம்
பொற்புடன் காண்ப தற்குப் பொருதவ னென்ன மேலை
வெற்பினை முகஞ்சி வக்க வெயிலவ னடைந்தா னன்றே. 17

வெண்ணெய்நல் லூரைத் தேடி விரைவுடன் வந்த டைந்த
பண்ணவர் குழாங்கள் பானுப் படருமுன் னெழுந்தி ருந்தே
பெண்ணைமா நதிநீ ராடிப் பிறங்கிட நீறு பூசித்
தண்ணிய நீரிறைத்துச் சந்தியுந் தாம்செய் தாரால். 18

இந்திர திசையை நோக்கி யிருந்துகா யத்ரி தன்னைச்
சிந்தையாற் செபித்துப் பஞ்ச பூதங்க ளொன்று ளொன்றாய்
உந்துற வொடுக்கி யாவி பிரமரந் தரத்தொ டுக்கி
பந்தக வுடற்றொ டக்கைப் பவனபீ சத்து ணக்கி. 19

வன்னிபீ சத்தால் தீய்த்து வாரிபீ சத்தா லாட்டி
மன்னிய மண்பீ சத்தால் வகுத்துமே திரட்டிச் சத்தி
துன்னிய பீசத் தாலே தொடக்கற வுயிரை வைத்து
உன்னிய விலிங்க பூசை யுவப்புடன் புரிய லானார். 20

ஆதாரம் ஆறி னுள்ளும் அமர்ந்திடு கணேச ராதி
வேதாவும் விண்டு ருத்ரன் விளங்கிடு மயேச னோடு
போதாருஞ் சதாசி வத்தைப் புருவமத் தியிலி ருத்தி
நாதாந்த வெளியைக் காற்றால் நடத்தியே யோகு செய்தார். 21

இங்ஙனம் பன்னாள் யோக மியற்றிப்பின் வேணுக் காட்டுள்
தங்கியே யிருக்கும் லிங்க தயாபர னுருவைக் கண்டு
பொங்கிய ஆனந் தத்தாற் புளகமெய் பொடிப்ப வேகி
யெங்கணும் நிறைந்த நின்னை யிவ்விடைக் காணப் பெற்றோம். 22

அரியநின் னிலையோ ராம லாணவ மிகுதி யாலே
புரிந்தவெம் தீமை தம்மைப் பொறுத்தருள் புரிக வென்னாப்
பிரியமா யபிடே கித்துப் பிணைமலர்த் தொடையல் சாத்தி
எரியிடு தூபங் காட்டி யிணையடி வணங்கி னாரால். 23



தலைக்கொலை புரிய வென்றே தனிவேள்வி புரிந்த அந்த
முனிவரர் தம்பா லுள்ள முனிவுதீர்ந் திரக்க மெய்தி
வினைவழி நீங்கள் செய்த விரகினைப் பொறுத்தோ முங்கள்
மனைவிமா ருடன்வ திந்தே மற்றெமை யடைகு வீரால். 24

என்றிறை கூறும் வாய்மை கேட்டுமே யிருடி மார்கள்
நின்றிரு சரணம் போற்றி நீசரேம் பிழைபொ றுத்த
குன்றிடாக் கருணை தன்னைக் குவலய முணரும் வண்ணம்
துன்றியிங் கிருந்தே யன்பர் துயர்தமை யகற்று வீரால். 25

மருட்டுறை புகுந்தி யாங்கள் மமதையாற் புரிந்த வற்றைப்
பொருட்டெனக் கொண்டி டாது பொறுத்தருள் புரிந்த தாலே
அருட்டுறை யெனும்பே ரிந்த ஆலயந் தனக்குப் பூவில்
சிருட்டியுள் ளளவும் நின்று சிறப்பிக்க வேண்டு மென்றார். 26

பொறுமையை யிழந்து நாங்கள் தவமெலாம் போக விட்டோம்
சிறுமைசெய் யெமக்கு மன்பு செய்திட்ட கருணை கண்டோம்
குறுகுமெம் மெண்ணம் மாறி குணமுட னரிய ஞானம்
பெறுவதற் கருள்செய் கென்றே பின்னரும் வேண்டி நின்றார். 27

அருளுரு வாய வையன் அருந்தவர் தம்மை நோக்கி
ஒருமைசேர் முனிவீர் நீங்கள் உவந்துமே கேட்ட வண்ணம்
அரியவித் தலத்திற் குப்பேர் அருட்டுறை யெனவ ழங்கும்
தெருளினைப் பெற்று நீங்கள் செகத்திடை வாழ்கு வீரால். 28

இருவினைப் புணர்ப்பி னாலே யின்பதுன் பங்கள் வந்து
மருவிடின் அவைகள் வந்த வகையினை யுணர்கி லாது
ஒருவனால் விளைந்த வென்றே யுன்னுதல் தீதாம் நீங்கள்
துருவியவ் வினைகள் வந்து தொடர்ந்திடா தொழித்தல்
வேண்டும். 29

இறையவ ரீது ரைத்தே யிலிங்கத்துள் கரந்த பின்னை
மறைமுனி மார்க ளெல்லாம் மகிழ்வுட னீச னார்க்குக்
குறைவறப் பூசை செய்து கூறிய மொழிவ ழாமல்
நிறைமன முடைய ராகி நெடிதுநாள் வாழ்ந்தார் மன்னோ. 30

பெரும்பிழை புரிந்தோர் மாட்டும் பேரருள் புரிந்தே யீசன்
கிருபைசெய் ததனால் க்ருபா புரியெனக் கிரீசர் பேரும்
அருள்புரி தளித னக்கே யருட்டுறை யென்னும் பேரும்
பெருமையாய் வழங்கும் பேறும் பெற்றதித் தலந்தான் மாதோ. 31

அருட்டுறைப் படலம் முற்றுப் பெற்றது.

ஆக செய்யுள் 217.

## ஆறுவது

# அம்மை யருந்தவப் படலம்

### கலிநிலைத் துறை

ஆவி நாயகன் அம்பிகை நாயகன் அளகைத்
தேவி ஞயகன் திரிலோக நாயகன் திங்கள்
மேவு நாயகன் மேலவர் நாயகன் வெண்ணை
பாவு நாயகன் பதமல ரனுதினம் பணிவாம். 1

கடந்து சென்றவோர் கற்பத்திற் கடவுளர் வலியால்
இடைந்து சென்றனர் அவுணர்கள் என்பதை யுணர்ந்தே
படர்ந்த துன்பத்தால் திதியுமே யுளம்பதை பதைத்து
மடம்நி றைந்ததன் மகள்தனை யழைத்திது வழுத்தும். 2

தான வர்குழாந் தமையெலாந் தேவர்கள் தடிந்து
ஊன மாக்கினர் அவர்களை யொறுத்திடும் வண்ணம்
மான முள்ளதோர் மகன்றரு கென்றலும் மகளாம்
தான வேச்சுரி கேட்டுமே தவம்புரிந் தனளால். 3

அன்னை சொற்படி தவம்புரி யவுணர்மா மகள்முன்
அன்ன ஷர்திவந் தனுகிட வவன்பதம் பணிந்தே
தன்னின் மேலிலாத் தனயனைத் தந்தரு ளென்ருள்
அன்ன தாகவென் றறைந்துமே யயன்மறைந் தனனல். 4

தான வேச்சுரி மகிடமாய்த் தவம்புரிந் ததனல்
ஆன னம்மது மகிடத்தின் உருவமா யமைய
மான முற்றவோர் மைந்தனை யளித்தன ளவனும்
மோன மாய்த்தவ மியற்றியே மொய்ம்புபெற் றனனே. 5

மேதி மாமுகன் வரத்தினல் மிகச்செருக் குற்று
மேதி னிக்கெலாந் துயர்தனை விளைத்திட லானன்
மாதி ரம்மெலாங் கலங்கிட வானவர் வெருவி
ஆதி யாகிய சத்திபால் அறைந்தன ரன்றே. 6

அம்மை யும்மவர் துன்பங்க ளகற்றுவான் கருதி
தம்மை யேநிகர் சண்டிகை தன்முக நோக்கி
வெம்மை செய்திடு மகிடனை விரைவினி லழித்தே
எம்மை யுஞ்சுகந் தருகென யாமளை யெழுந்தாள். 7



மாயை யாலவன் பற்பல வல்லபம் புரிந்து
சீயம் போலவும் மதகரி போலவும் சினந்தே
தாயி டத்தினிற் போர்செயச் சாமுண்டி தருக்கி
பேய சூலத்தாற் சிரசினை மிதித்தழித் தனளால். 8

விண்கு ளிர்ந்தது மகிடனும் வெய்யவ னழிவால்
கண்கு ளிர்ந்தன களிப்புறு முயிர்கள்தம் கவினல்
பண்கு ளிர்ந்தன செவிகளிற் பாடல்கேட் டிடலால்
மண்கு ளிர்ந்தது மாற்றவ ரிலாமையின் மாதோ. 9

பார கம்மெலாம் மகிழ்ந்தபின் பைரவி கொண்ட
கோர ரூபத்தை மாற்றிட வேண்டியே குறித்து
தாரம் மிக்கெழ அம்மையும் நயந்தவர்க் கிரங்கும்
வேரல் மிக்குள தலத்தினை மேவினள் மாதோ. 10

துன்பு செய்தவத் துட்டனைத் தொலைத்ததன் பின்னர்
இன்ப மேயுல கந்தனக் கீந்தருள் புரிவான்
அன்பு மேயவெம் மம்மையங் கடைந்தருள் செயலை
முன்பு ணர்ந்துமே சுரரெலாம் மொய்த்துவந் தனரால். 11

ஆன்ற வேதங்கள் தவஞ்செய்தே யரன்றனைத் தம்பால்
ஈன்ற தாகிய அருட்டுறை என்னுமத் தலத்தில்
தோன்று தென்றிசை வேம்பின்கீழ் சூலியெம் மன்னை
ஊன்றி நின்றதை யும்பர்க ளுணர்ந்தன ரன்றே. 12

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உருத்திரமே மிகுத்திடலால் ஓங்குசினம் மாருமல்
உருவம் மாறிக்
* கருத்திடுமெம் மம்மைதுனி தணிவிக்கும் கருத்தினெடு
கடவு ளோர்கள்
பருத்தபசு தரும்பாலும் இளநீர்சந் தனத்தோடு
பனிநீர் கொண்டும்
அருத்தியுடன் குடங்குடமாய்க் குளிர்ந்திடவே யபிடேக
மதுசெய் தாரால். 13

---

* 'கறுத்திடும்' என்பது எதுகை நோக்கி, 'கருத்திடும்' என நின்றது.

மண்ணிலுள கரும்பிரதம் கனிவகைகள் தனிரசமும்
மலையின் தேனும்
எண்ணளவி லடங்காமல் அபிடேகம் புரிந்திட்டார்
இதனை லெல்லாம்
தண்மையுறு ததுகண்டு நதியதனைக் கடைந்ததனிற்
றனித்தெ டுத்த
வெண்ணெயினால் மதிலெழுப்பி விந்தைதனை யுள்ளிருத்தி
வேண்டி னரால். 14

மாதங்கி கௌமாரி மகிடனுரங் கிழித்திட்ட
மாமுக் கண்ணி
வேதங்க ளேத்துகின்ற வேதாளி சாமுண்டி
விளங்கு நீலி
ஏதங்க ளணுகாமல் எளியோரைக் காத்திடுகென்
றிறைஞ்சக் கண்டே
நாதங்கண் முடிவான நாயகியாள் சினந்தவிர்ந்தே
நவில லுற்றாள். 15

அன்புடைய வுங்களுடை அபிடேக பலத்தாலே
யங்க மெல்லாம்
இன்பமய மாகியது சலந்தவிர்ந்தே மகிழ்கொண்டோம்
இனிமே லுங்கள்
பொன்னுலக வாழ்க்கையதும் பூவுலக வாழ்க்கையதும்
பூரிப் பெய்தும்
பன்னாளும் வாழ்ந்திருப்பீர் பயமின்றி யெனவரங்கள்
பாலித் தாளால். 16

ஆரணிபால் வரம்பெற்றே யமரரெலாம் அகன்றதன்பின்
அம்மை தானும்
தாரணியில் நீலியெனுந் தன்பெயரை மாற்றிடவே
தவஞ்செய் கிற்பாள்
சீரணியுஞ் சேடியர்தம் முகநோக்கித் தடாகமொன்று
செழிக்கக் கண்டு
பூரணனைப் பூசைசெயப் பொருள்களெலாம் அமைக்கவெனப்
புகன்றிட் டாளால். 17

அம்முறையே சேடியர்கள் அமைத்ததற்பின் அம்பிகையும்
அருநீர்ப் புக்குச்
செம்மையுற நீராடித் தேகமெலாந் திருநீறு
செழிக்கப் பூசி



எம்மையினும் அருள்பெருகச் சிவலிங்கத் திருவுருவிற்
கெண்ணெய்க் காப்பிட்
டம்மைமஞ் சனமாட்டி யான்பால்வெண் டயிர்கொண்டே
யபிடே கித்து. 18

நற்கந்தத் திரவியங்கள் கனிவகைகள் தமைப்பெய்து
நன்னீர் கொண்டு
பொற்கலசத் தாலாட்டி யாடையா பரணங்கள்
பொருந்தச் சாத்திப்
பற்பலவாம் ஓதனமும் பண்ணியமும் முன்வைத்துப்
படைத்துப் பின்னர்ச்
சிற்பரனை மனத்திருத்திச் செந்தணலுள் நின்றுதவஞ்
செய்ய லானாள். 19

நவநீதக் கோட்டையினுள் நங்கைபுரி தவங்கண்டு
நம்பன் நேர்வந்
துவமிக்க வொண்ணாத வுன்தவத்திற் கிரங்கினோம்
உனக்கு நேர்ந்த
கவலைதனை யுரையென்னக் கௌரியுமே யடிவணங்கிக்
கருணை வள்ளால்
உவரிபுடை சூழுலகில் மகிடனைக்கொன் றிட்டபழி
யொழிய வேண்டும். 20

இப்பெயரும் இவ்வுருவும் எனக்குமிக அருவருப்பா
யிருப்ப தாலே
திப்பியநின் திருவருளால் அவைமாற்றிச் சிறந்ததொரு
திவ்ய நாமம்
செப்பிடுநல் லுருவமுமே தந்தருள வேண்டுமெனச்
சிவபி ரானும்
அப்படிநின் விருப்பமெனில் அளித்திடுவோம் வருந்தலென
அபய மீந்தான். 21

மங்கலமா கியபெயரை விரும்பினை நீ யாகையினால்
மகித லத்துள்
மங்களாம் பிகையென்றே வானவரும் புகன்றிடுவர்
மற்று நீயும்
மங்கைவடி வொடுநம்பால் மகிழ்ந்திருப்பாய் மகிடற்கொல்
பாவ நீங்கி
மங்கைநா யகியென்றே யழைக்கவரம் பாலித்தோம்
மகிழ்வோ டென்றார். 22

வெண்ணெயெயில் உள்ளிருந்தே பூசைசெய்த சிறப்பதனால்
விளங்கு கின்ற
வெண்ணெய்மா காளியெனும் பெயர்மாறி வேற்கண்ணி
யென்றும் மற்றும்
வெண்ணெய்நா யகியென்றும் பெயர்பெற்று விபுதரெலாம்
விரும்பி யேத்த
வெண்ணெய்மா நகரினிலெம் மிடப்பாகத் திருந்தென்றும்
விளங்கு வாயால். 23

நீலியெனும் பெயருடன்நீ யகழ்ந்திட்ட காரணத்தால்
நிலவு கின்ற
நீலியாள் தீர்த்தமெனு மதுதன்னில் நீராடி
நிதமும் நம்மைச்
சாலவே யருச்சிப்போர் சகலபிணி களுமகலச்
சம்பத் தோடு
ஞாலமதில் பன்னெடுநாள் வாழ்ந்திருந்தே நமதடியும்
நண்ணு வாரால். 24

என்றமொழி யினிதுரைத்தே யெம்பெருமாட் டியையழைத்தே
யிடப்பா கத்தில்
ஒன்றமகிழ் வுடனிருத்தி யுலகமெலாந் தொழுதேத்த
வும்பர் வாழ்த்த
மன்றல்புரிந் தடியவருக் கருள்சுரந்தே யினிதிருந்தான்
மதியத் தோடு
கொன்றைநதி யறுகணியுங் குமரவேள் தாதைமகிழ்
கூர்ந்து தானே. 25

அம்மை யருந்தவப்படலம் முற்றுப்பெற்றது.

ஆக செய்யுள் 242

ஏழாவது

## தருமதேவதை தவஞ்செய் படலம்

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அருவமுமாய் உருவமுமாய் அருவுருவ மாகி
யண்டபிண்ட சராசரங்க ளனைத்தினுளும் நிறைந்து
மருவுபரம் பொருளாகி மனம்வாக்குக் கெட்டா
மலமகன்ற பேரொளியாய் மன்னுகின்ற நிலையாய்ச்
சருவவுயிர்க் குணர்வாகிச் சத்துசித்தா னந்தத்
தனிப்பொருளாய்க் குணங்குறிகள் தான்சிறிது மின்றிப்
பொருவுமொரு பொருளில்லாப் பூரணமாய் விளங்கும்
போதாந்தப் பெரும்பொருளைப் போற்றுநர்புண் ணியரே.1

இறப்பினொடு பிறப்பில்லா தெங்கணுந்தான் நிறைந்தே
இருக்கின்ற பரம்பொருளே யீசனெனப் படுமால்
சிறப்புடைய அச்சிவனின் றிருவருளே சத்து
செகம்படைத்துக் காத்தழிக்கச் சிவனருளி னாலே
பெறப்படுவோர் பிரமன்மால் உருத்திரரே யாவர்
பேணியவர் புரிதொழிலும் முத்தொழிலாய்ப் பிறங்கும்
திறப்படுமிச் செயல்களெலாந் திருவிளையாட் டென்பர்
தீர்விலவை யனைத்துமறத் திருநடனம் புரிவர். 2

தேவர்களும் மூவர்களும் சீவர்களு மழியும்
செகமுடிவு பெறுங்காலந் தெரிந்தறத்தின் தெய்வம்
ஆவலுடன் தெய்வீக அருளுருவாய்த் தோன்றி
அன்புருவாய் எழுந்தருளும் ஆதிபரம் பொருளே
வேவலுறு செகத்துடனே யெளியேனும் வெந்து
வீடுவனோ வெனவெண்ணி விம்மலுறு கின்றேன்
காவலனே யெனைக்காத்துக் கடைக்கணித்தல் வேண்டும்
கருணையனே யெனச்சிவன்பால் கண்டுபகர்ந் ததுவே. 3

கயிலையினிற் சத்தியுடன் கலந்துமகிழ்ந் திருக்கும்
கண்ணுதலெம் பெருமானும் கருணையுடன் நோக்கிப்
பயிலுமுன்றன் மொழிகேட்டோம் பத்தியுடன் நீயும்
படியின்மிசை வேதங்கள் தவஞ்செய்தே பயந்த

துயரொழிக்கும் வேய்வனமாய்த் துலங்குமருட் டுறையில்
　　தூய்மையுட னெமதுருவைத் துதித்திடுவை யாயின்
குயின்மொழியம் பிகையுடனே கூடியெழுந் தருளிக் [டிடவே.
　　குறைமுடிப்போம் எனமொழிந்தார் அறம்மகிழ்கொண்

அத்தரும தெய்வதமும் அரன்மொழிகேட் டுள்ளம்
　　ஆனந்த பரவசமாய் அகிலமதிற் புக்கு
மத்தியமண் டலத்துள்ள மகிமைபெறு தலமாம்
　　வளம்பெருகு வெண்ணெயெனும் மாநகரஞ் சென்று
நித்தியமுஞ் சிவனுருவைச் சேவித்து நின்று
　　நியமங்கள் தவருமல் அபிடேகஞ் செய்து
பத்தியுடன் வாசமிகு பத்திரபுட் பத்தால்
　　பரிவுடனர்ச் சனைபுரிந்தே பணிந்துதுதித் ததுவே. 5

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அரகரா போற்றி போற்றி அருட்பெருங் கடலே போற்றி
மரகத மேனி யம்மை மகிழ்நனே போற்றி போற்றி
உரககங் கணனே போற்றி யோங்காரப் பொருளே போற்றி
பரகதி யளிக்க நின்ற பரமனே போற்றி போற்றி. 6

போதனே போற்றி போற்றி புண்ணியப் பொருளே போற்றி
வேதனே போற்றி போற்றி விண்ணவர் தலைவா போற்றி
சீதமா மதியஞ் சூடுஞ் செல்வனே போற்றி போற்றி
தீதறுத் தெனையாட் கொள்வாய் சிவபரம் பொருளே போற்றி. 7

என்றுமே துதித்துத் தன்ம தேவதை யிடப மாகி
நின்றிடச் சிவபி ரானும் நேர்வந்து நிற்றல் கண்டு
ஒன்றிடு பிரள யத்தும் ஊர்தியாய் எளியேற் கொண்டு
பொன்றிடா வண்ணங் காத்தல் கடனெனப் போற்றிற் றம்மா. 8

அவ்வுரை கேட்டெம் மையன் அகமகிழ்ந் துனது வேட்கை
செவ்விய தாகும் நின்னைச் சேர்தரு மூர்த்தி யாக
ஒவ்வியே கொள்வேம் நிற்கிங் கூழியி லழிவேயில்லை
திவ்யநம் கொடியிலும்நீ திகழ்ந்திடச் செய்வோம் என்ருர். 9

ஊர்தியா யிருப்பாய் நம்தம் கொடியிலும் உயர்ந்தி ருப்பாய்
ஏர்திக ழால யத்தி னெதிரிலு மிருப்பா யன்றிச்
சீர்திகழ் மதிலின் மீதும் சிறப்புடன் வீற்றி ருப்பாய்
பார்தனில் என்று முன்னைப் பாதுகாத் திருப்ப மன்றே. 10



நம்பெரு நடனந் தன்னை நங்கையி னேடு நீயும்
எம்மையு மிருந்து காண்பாய் இரவுக்கு முன்ன தான
செம்மைசேர் பிரதோ டத்தில் நின்னையும் சேர்த்து நம்மை
இம்மையில் வணங்கி னேர்கள் இறவாத வின்பந் துய்ப்பார். 11

இன்னவாம் வரங்கள் ஈந்தே ஈசன்ரு னிடபந் தன்னை
நன்னர்வா கனமாக் கொண்டு நங்கையோ டினிதி ருந்தான்
பன்னிடு மிறைவன் றந்த வரம் பெற்றுப் பரிவி னேடு
தன்னிக ரில்லா வின்பிற் றருமமு மிருந்த தன்றே, 12

ஆன்வடி வாகித் தன்ம மரன்பூசை செய்து பெற்ற
மேன்மை கொள் வரத்தி னலே மேதினி யதனிற் கோக்கள்
வான்சிறப் படைந்த மக்கள் வரும்பால்நெய் ததியுங் கொண்டு
கோன் பூசை யாற்றி ஆவைக் கொண்டாடி வளர்த்தா ரன்றே. 13

மாதமும் மாரி பெய்து வளர்ந்திடு புற்பூ டெல்லாம்
மேதிக ளுண்ண லாலே மிகுமடி பால்சு ரந்தும்
ஏதமென் றவற்றின் பாலை யெவருமே தீண்டா ராஞர்
ஆதலா லவைக ளெல்லாம் அருந்துய ரடைந்த வன்றே. 14

சிட்டர்தங் குலத்தில் வந்தோர் சிறப்பினை யடைவ ரென்றும்
துட்டர்தங் குலத்தில் வந்தோர் துன்பமே யுறுவ ரென்றும்
ஒட்டியே யுலகங் கூறும் உண்மைபோல் மகிட னும்பல்
திட்டமாய் வந்த மேதிக் குலமெலாஞ் செல்ல லுற்ற. 15

கார்நிற எருமை எல்லாம் கன்றினுக் களித்துப் பின்னர்
பீர்மிக மடிப ருக்கப் பீழைகொண் டுழன்று நீக்கும்
நேர்வழி யறிகி லாது நிமலன்பா லிடபஞ் செய்த
சீர்பெறு தவம்போல் தாமுஞ் செயவெண்ணி முனைந்த
வன்றே. 16

மேதிக ளொன்ருே டொன்று மிடைந்துமே கூட்ட மாக
வேதமாம் மூங்கிற் காட்டுள் விளங்கிடு விமலன் றன்னை
ஆதரம் பெருகச் சூழ்ந்தே அரகரா வென்று கூறிக்
காதல்செய் யுண்டி நீக்கிக் கண்மூடி யிருந்த வன்றே. 17

உண்ணீரு முட்கொள் ளாம லொருங்குசேர் காரா வெல்லாம்
கண்ணுதல் தனை நி னைந்தே கடுந்தவம் புரிய லான
எண்ணியிவ் வாறு செய்யுந் தவத்தினுக் கிரங்கி வந்து
பெண்ணொரு பாகன் ரூனும் பேரருட் காட்சி தந்தான். 18

மாசிலா மணியே போற்றி மங்கைபங் காளா போற்றி
தேசிகா போற்றி போற்றி திரிபுர மெரித்தாய் போற்றி
பாசவல் வினைய றுக்கும் பரமவாச் சியனே போற்றி
ஈசனே போற்றி போற்றி யெம்துயர் களைவாய் போற்றி. 19

பிறப்பினிற் றேனு வென்னும் பெரும்பெய ரொன்றே பெற்றும்
சிறப்பினிற் பசுக்க ளொப்பச் சிறிதுமே கருதக் காணோம்
அறப்பெருங் கடலே தாங்க ளறியாத தொன்று முண்டோ
கறப்புச்செய் தெங்கள் பால்நெய் காசினிக் குதவல்
வேண்டும். 20

அருமையாய்ப் பசுவின் பாலே யனைத்திற்கு மாகு மென்றும்
எருமைப்பால் எதற்கும் வேண்டா வென்றற்கு மேதுக் காணோம்
ஒருமையா மெங்கட் குள்ளே வுயர்வுதாழ் வுற்ற தென்னே
பெருமையா வதைவி ளக்கிப் பேரருள் புரிதல் வேண்டும். 21

என்றென்று கதறி நிற்கு மெருமைகட் கிரங்கி யீசன்
கன்றிடீர் முன்னர் மேதிக் கண்டக ளொருவன் றோன்றித்
துன்றியிவ் வுலகுக் கெல்லாந் துயர்தமை யிழைப்ப தானுன்
அன்றவன் புரிந்த தீமை யளவிடற் கரிய தம்மா. 22

அத்தகு கொடுமை தன்னை யகற்றிட வேண்டி யாமும்
பத்திரை தனைவி டுத்தப் பதகனை யழித்தொ ழித்தோம்
ஓத்தவவ் விளத்தில் வந்த வுங்கள்பால் தயிர்நெய் யெல்லாம்
உத்தம மன்றென் றெண்ணி ஒதுக்கியே வைக்க லானோம். 23

கொடியவஞ் சனைகள் செய்து கொலைகள வியற்றி நாளும்
படியில்பே ரறிஞர் உள்ளம் பதறிடத் தீங்கி ழைப்போர்
துடிதுடித் தழிவர் பின்னும் சூழ்ந்தவப் பழிதொடர்ந்தக்
குடிவழி வந்தோர்க் கெல்லாம் கொடுந்துய ரிழைக்கு மன்றே. 24

பழிபிறங் காத மக்கள் பயந்தவர் வழிவந் தோர்கள்
எழுபிறப் பளவுமின்ப மெய்துதல் சரத மேபோல்
பழிவழி யொழுகி நின்ற பதகர்தங் குலத்து வந்தோர்
எழுபிறப் பளவுந் துன்ப மெய்துதல் இயற்கை யாமே. 25

அப்பழி நும்மை யெல்லா மடர்த்ததா லனேக நாளாய்
இப்பழிக் காளாய் நின்றீ ரின்றெமை யடைந்த தாலே
துப்புர வாகவந்தப் பழியினைத் துடைத்தொ ழித் தோம்
ஒப்புர வுடனே யின்ப முங்களுக் கினியுண் டாமால். 26



அறவழி முறையே நம்தம் ஆணையைச் செலுத்து கின்ற
மறலிதன் னூர்தி யாகி மகிழ்வுடன் வாழ்ந்தி ருப்பீர்
ஒறுவுதந் திடலால் நீங்கள் உதவிடு தயிர்பால் நெய்யும்
பெறுவழி மக்கள் பெற்றுப் பிரியமா யுண்ணக் காண்பீர். 27

இப்பெருந் தலத்திற் போந்தும் எம்மைவேண் டியுமே நீங்கள்
தப்பிலாத் தவம்பு ரிந்து வரம்பெற்ற தன்மை யாலே
ஓப்பிலா வித்த லத்தில் தயிர்நெய்பால் மிகவு மோங்கி
எப்போதும் குறைவி லாம லிருக்கவும் வரமீந் திட்டோம். 28

ஆகையா லுங்கள் பால்நெய் யனைத்தையும் மக்கள் பெற்று
ஓகையோ டுல்குக் கெல்லா முதவிடு வார்க ளாக
வாகையோ டுங்கள் வாழ்வு வளம்பெறு மென்று கூறித்
தோகைபா கனும்லிங் கத்துள் தொல்லுருக் கரந்தா னன்றே. 29

அந்தநல் வரம்போல் வெண்ணை அகலுள்வாழ் எருமைக்
[ கூட்டம்
மந்தைமந் தையதாய்ப் பல்க வளந்தரு தயிர்பால் நெய்யும்
எந்தெந்த ஊர்க்குஞ் செல்ல யாவரும் விரும்பி யுண்ணச்
சந்ததி குறையா வண்ணந் தாமும் வாழ்ந் திருந்த மாதோ. 30

தருமதேவதை தவஞ்சேய் படலம் முற்றுப்பெற்றது.

ஆக செய்யுள் 272

எட்டாவது

# திருநடனப் படலம்

### கலி விருத்தம்

உலகினி லெவையுளு முறைவ தாகியும்
பலபல சமயஞ்சொல் பரம தாகியும்
புலமுடை யவரெலாம் போற்றுந் தெய்வமாம்
மலைமகள் கேள்வனை மனத்தி ருத்துவாம். 1

பாமகள் கேள்வனும் பதுமை கேள்வனுந்
தாமவ ரவர்களுந் தனித்துக் கூடியே
நேமமா யரன்புரி நிருத்த னந்தனை
ஏமமாய்க் கண்ணுற வெண்ண லாயினர். 2

வேதங்கண் முன்னரே விரும்பி யீசனைக்
காதல்செய் கான்முளை யாகக் கண்டபின்
நாதனார் நடனமும் நன்கு காணவே
போதிய வரந்தனைப் போற்றிப் பெற்றுள. 3

அத்தகு வேதங்கண் மீதெம் மையனும்
நிர்த்தனஞ் செய்திட நேர்வ னாதலால்
இத்தகு ததியினில் யாமும் வேண்டிடில்
அத்தனு மதற்கிசைந் தருள்சு ரக்குமால். 4

என்றெணி யிருவரு மிறைவற் காண்குறத்
துன்றிய வுவகைமுன் தூண்டக் கைலையாங்
குன்றினை யணுகியே கொன்றை சூடிதன்
வன்றிறல் சேவடி வணங்கி யேத்துவார். 5

பாரொடு குடிலையிற் பல்கித் தோன்றிய
சீருறு பொருள்களாய்ச் செறிந்து நின்றனை
ஏர்பெறு தவத்தினா லன்றி யேனையோர்
நேர்பெறக் காண்டலும் நேர்வ தாகுமோ. 6

சச்சிதா னந்தமாய்த் தயங்கு முன்னிடம்
இச்சகம் தோன்றியே யியலு மென்பதும்
துச்சமாய் நின்றனாற் றொலையு மென்பதும்
நிச்சமா யுணர்வரோ நீணி லத்துளார். 7

அண்டர்நா யகநின தாட லின்றெனின்
எண்டிசைப் புவனமு மியங்க வல்லவோ
கொண்டவை யசைத்திடு கோலக் கூத்தினைக்
கண்டுகண் களிப்புறக் காதல் கொண்டனம். 8

ஆதலால் தேவரீர் ஆடல் காணவே
மாதயை செய்கென வணங்கி வேண்டிடு
வேதனை முராரியை விழியி னோக்குருக்
காதலோ டீசனுங் கழறன் மேயினான். 9

மறையெலாம் வேண்டலால் அவற்றின் மன்றினில்
முறைநடம் புரிவதாய் முடிவு செய்துளோம்
நிறைவுடன் வெண்ணைக்கு நீங்கள் போந்திடில்
கறையிலாத் திருநடங் காண லாமென்றார். 10

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மாது பாக னின்ன வாய்மை மனம கிழ்ந்து ரைத்தபின்
சீத ரன்வி ரிஞ்ச னோடு சேர்ந்து வெண்ணெய் மாநகர்
காத லோடு புக்கு நின்று கங்கை வேணி யன்னுடைப்
பாத பங்க யங்க ளைப்ப ராவ லாயி னாரரோ. 11

ஆனை மாமு கத்த னோடு மாறு மாமு கத்தனும்
வான நாதன் தேவர் மோனர் மற்ற பல்க ணங்களும்
கான பல்லி யங்க றங்க கௌரி யோடு நந்திமேல்
ஞான போதன் வெண்ணை தன்னை நாடி வந்து நண்ணினான் 12

மந்தி ரங்கண் மேனி யான மாது பாகன் வந்தனன்
ஐந்தெ ழுத்தின் மூல மான ஐயன் தானும் வந்தனன்
பந்தம் நீக்கி யின்பம் நல்கு பால நேத்ரன் வந்தனன்
அந்தி வண்ணன் வந்த ளன்என் னார்வச் சின்ன மார்த்தவே. 13

வெள்ளி வெற்பில் வீற்றி ருக்கும் வேத நாதன் வந்தனன்
கொள்ளை கொள்ள வீட ளிக்குங் கோதை பாகன் வந்தனன்
வள்ள லீசற் காணு மாறு வந்து சேரு மென்னவே
நள்ளு சின்ன வோசை கேட்டோர் நாடிவந்து கூடினர். 14

தத்து வங்க டந்து நின்ற தாணு வான மூர்த்தியே
சத்து சித்து மின்ப மாகித் தான்வி ளங்கு சோதியே
சித்த மொன்றி நாட்டி யங்கள் செய்க தேவ வென்னவே
பத்தர் வேண்ட ஈசன் னானும் பார்வ ணங்கி மகிழவே. 15

வேத மோடும் ஆக மம்வி ரிந்த சாகை யங்கங்கள்
ஆத ரம்மீ மாஞ்சை யாதி யால மைந்த மன்றினில்
போத வீசன் மேவி வந்து பொற்ப தம்முன் தூக்கியே
நாத கீத வோசை மிஞ்ச நாடி யாட லாயினார். 16

வாம பாதந் தூக்கி யேவ லப்ப தத்தை யூன்றியே
சேம மாயி டக்கை பாதஞ் சேர வேகு றுக்குறத்
தாமம் பக்கம் மேவி யத்தந் தானி லங்கத் தாபதர்
சாம வேதம் பாடச் சம்பு தாண்ட வம்பு ரிந்தனன். 17

மாயை யைத்து டிக்கை நீக்க வன்னி கன்ம மாய்த்திடத்
தோயும் பாதந் தான்ம லத்தைத் தோன்றி டாத முக்கிடத்
தாய பாதம் சீவன் தான்அ ருள்த லத்திற் றங்கிடத்
தூய தாய பாத மின்பம் துய்க்க வைக்குந் தோற்றமே. 18

தோற்ற மேது டிக்கை காட்டத் தூய்வ லக்கை காத்தலும்
மாற்றல் வன்னி யுந்தெ ரிக்க மாநி லத்தி லூன்றுதாள்
ஏற்ற மாய்ம றைத்தல் தூக்கி யேய்ந்த தாள்அ ருள்கையைச்
சாற்ற லென்ன ஆடல்செய்து தான்வி ளக்கி னாரோ. 19

மாய முக்கு ணங்க டந்து வாய்ச்சொல் நெஞ்சுக் கெட்டிடா
நேய வைந்தொ ழிற்கும் வித்தாய் நின்று ஞான பூரணத்
தூய வானந் தத்தி னோடு தோயு மின்ப ரூபமாய்
மேய தாண்ட வம்பு ரிந்த மேன்மை யென்ன மேன்மையே. 20

ஞான தாண்ட வங்கு யிற்று நாத னற்பு தத்தினை
மீன நோக்கி கண்க ளிக்க வேதன் விண்டு காணவும்
மோனர் தேவர் மக்கள் கூடி மொய்த்து வேத மோதவும்
வானர் புட்ப மீதி றைக்க வள்ள லாடி னாரோ. 21

காணக் காண ஆவல் தூண்டிக் கண்களிக்கச் செய்திடும்
வேணி நாத னாடல் தன்னை விண்ணில் மண்ணில் உள்ளபேர்
பேணிக் கண்டி றப்பொ ழித்துப் பேரின் பத்தை யெய்தினார்
வேணு பூசை செய்த தான வெண்ணை மாத லத்திலே. 22

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பரதநூ லுரைக்கும் மேலா மிலக்கணப் பகுதி யோடு
மருவுவாச் சியபே தத்தின் வகைகளும் விளங்க ஐயன்
கரங்கண்கால் உறுப்பி னாலே காட்டிய நடனந் தன்னைப்
பிரமன்மால் முதலோர் கண்டே பெரும்பயன் பெற்றா ரன்றே. 23



கருணையூற் றெடுத்துப் பாயுங் கண்களுங் கங்கை திங்கள்
விரவியே கொன்றை நாறும் வேணியும் புன்சி ரிப்பும்
மருவிய முகமும் கையில் மான்மழுத் துடிக றங்க
திருநடம் புரியா நின்ற தேவர்கட் கரிய தேவை. 24

இடையினிற் புலித்தோ லாடை யிலங்கிடக் கரத்திற் காதில்
விடமுடை நாகந் தூங்க விபூதியுள் விளங்கித் தோன்றும்
அடற்சோதி மயமாய்த் தோன்று மானந்த வடிவந் தன்னைக்
கடற்புவி கண்டோ ரெல்லாங் கண்பெற்ற பேறு பெற்றார். 25

சோமசே கரனை விண்டு துதித்துமே யடிவ ணங்கி
வாமன னாகி யான்செய் வஞ்சகச் செய்கை யாலே
தாமவெம் முலகம் நீங்கிப் பாதலந் தன்னிற் சென்றங்
கேமமா யிருப்ப தான வரந்தனை ஏற்றங் குள்ளோம். 26

அப்பெரும் பாவம் நீங்கிப் பரந்தாம மடையும் வண்ணம்
ஒப்பியே யருள்செய் கென்றே யுரைத்திட வன்பா லீசன்
திப்பிய கருணை யாலே திருமுகம் நோக்கி யின்றே
செப்பிய பவமொ ழித்தே வைகுந்தஞ் சென்று வாழ்வீர். 27

கனலியும் நீரும் ஒன்றாய்க் கலந்துவாழ்ந் திருத்தல் போன்று
மனைவியே யாகி யென்பால் மகிழ்ந்துநீ யிருப்ப தோரார்
கனைகட லுலகத் துள்ளோர் காழ்ப்பொடு பலவு ரைப்பார்
அனையவர் மருட்கை நீங்க அகன்றிடா தருகில் நிற்பாய். 28

பிலத்தினி னின்று நீங்கிப் பேருல கடைந்த பின்றைச்
சலத்துறு சனக வல்லி யாகிய தைய லோடெம்
வலத்தினில் நாளும் வைகி வைகுந்த நாத னென்றே
சொலத்தகும் வண்ணம் அன்பர் துயர்நீக்கி வாழ்கு வீரால். 29

அவ்வரம் பெற்ற மாயன் ஆனந்தத் திருக்கூத் தென்றும்
இவ்விடை நிகழ்த்த வேண்டு மென்றுநல் வரமும் பெற்று
சவ்விநற் றிசையில் வைகிச் சாண்டில்யர் வேண்டும் பத்து
திவ்யதம் தோற்றக் காட்சி தெரிசிக்கும் வண்ணம் நின்றான். 30

பிரமனும் பிரான்ற னக்குப் பெருவிழா நடத்திக் காணும்
வரம்பெற்று மீன மாதம் வளர்பிறை யாரல் நாளில்
குரம்சுற் றிக் கொடியை யேற்றிக் குறைவிலா மறைக ளோதி
விரவிய வைந்தாம் நாளில் விடைமீது காட்சி நல்க. 31

ஏழாம்நாள் மணஞ்செய் வித்து எலிநாளில் திருத்தே ரேற்றிப்
பாழிசேர் பத்தாம் நாளில் பரமற்குத் தீர்த்த வாரி
வாழவே புரிந்து ஐய னிடப்புறம் வதிவ தானான்
ஆழிசூ மூலகோர் ப்ரமன் விழாவென வதைச்சொல் வாரால். 32

திருநடனப் படலம் முற்றுப் பெற்றது.

ஆ. செய்யுள் 304

ஒன்பதாவது

## அறுமுகச் செவ்வேள் அருள்பெறு படலம்

கலி நிலைத் துறை

தொன்மை யாகிய குடிலையுந் தோன்றுமைம் பொருளும்
தன்மை வேதங்கள் யாவையுந் தந்திரம் பலவும்
பன்மை யாகிய கலைகளும் பகரவற் றுணர்வாய்
மூன்மை யாகியே விளங்கிடு மூர்த்தியைப் பணிவாம். 1

மாயை யீன்றிடு சூரனால் வானவர் பலரும்
தோயுந் துன்பத்தால் வருந்தியே துணையிலா மையினால்
நேய மோடரன் முன்னின்று முறையிட நிமலன்
தீயு மிழ்ந்திடு விழிநின் றுந் தெறித்தன பொறிகள். 2

அந்த வான்பொறி யாறையு மனிலந்தீ யேந்தி
வந்து சரவணத் துய்த்திட வவைமக வாக
அந்த மானவச் சேய்களை யம்மையொன் றுக்கிக்
கந்த னென்னப்பேர் புனைந்தனள் கருணைமீக் கூர. 3

அமரர் தம்துயர் நீக்கிட ஆறுமா முகமும்
சமரஞ் செய்திடு பன்னிரு தோள்களுந் தயங்கக்
குமர நாயகன் விளங்கிடு கோலத்தைக் கண்டு
விமல மாகிய விண்ணவர் மிகமகிழ்ந் தனரால். 4

காலின் மீதிவர்ந் திடுதலுங் கரியின்மேற் செலலுங்
கோல வாம்பரி செலுத்தலுங் கொண்டன்மேற் செலலும்
வால யாளிமீ தெழுதலும் வையமேற் செலலும்
சால வேயவை யாடலாஞ் சண்முகன் றனக்கே. 5

இட்ட மாகப்பல் கிரிகளை யெடுத்துவிண் ணெறிவன்
கிட்டி யேவுடுத் திரள்களைக் கிரியின்மேற் படுப்பன்
அட்ட மாகரி கள்தமை யங்கையா லேந்தி
முட்ட விட்டுமே மகிழ்கொள்வன் முருகனெம் பெருமான். 6

எல்லை யில்லதோர் பொருள்களா யிருந்தருள் புரிவன்
வல்லை யாருமே காணொணா வடிவுகொண் டிடுவன்
தொல்லை யீசன்போற் றோன்றுவன் துரியமே னிலையில்
எல்லி போலொளி வீசியே யிருந்திடு வானால். 7

அன்ன வாறுநம் மறுமுக னாடல்செய் நாளில்
துன்னி நாரதன் வேள்வியில் தோன்றிய தகர்செய்
இன்னல் கேட்டதை யடக்கியே ஏறும்வா கனமாய்
உன்னி யேற்றுமே யுலகினுக் குவகையீந் தனரால். 8

அரிய தாகிய குடிலையை யறிகிலா வயனைத்
தெரிய நீக்கியே சிறையிட்டுச் சிருட்டியாந் தொழிலைப்
புரிய வீசனும் கூறலாற் புரிவதை விடுத்துப்
பிரிய தந்தைபா லிருந்தனன் பிறங்குவேன் முருகன். 9

தான வர்புரி கொடுமையைத் தாங்கொணா தமரர்
மீன நோக்கிதன் நாதன்பால் விரைந்துமே வந்து
ஈன மாகிய வவர்செய லியம்பிட வீசன்
வான வர்துயர் நீக்குவம் வருந்தல்நீர் என்றான். 10

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அன்னையின் மடிமீ திருந்துமே கொஞ்சி
யானந்த மூட்டிடு கின்ற
தன்னிளஞ் சிறுவ னாகிய முருகன்
தன்முகம் நோக்கியே பரமன்
பொன்னுல குள்ளோர் வருந்திடும் வண்ணம்
புன்கண்செய் சூரனா தியரைத்
துன்னியே யங்கண் துணையுடன் சென்று
தொலைத்துமீள் கெனப்பணித் தனரால். 11

அத்தன தாணை யின்படி யெங்க
ளாறுமா முகப்பெருந் தகையும்
ஒத்தநற் றுணைவ ராகிய லக்கத்
தொன் பதின் மரும்புடை சூழக்
கத்தனைக் கவுரி தன்னுடன் வணங்கிக்
கனிவுடன் விடையது பெற்றே
உத்தம நாளிற் பல்லிய முழங்க
உறழ்வுசெய் திடவெழுந் தனரால். 12

சந்திர மௌலி பதினொரு ருத்ரர்
தங்களைப் படைகளாய்ச் சமைத்து
மைந்தன்கை யளித்தே வரங்களு மளித்தார்
வானவர் கள்புடை சூழ



இந்திரன் றனையும் உக்கிரன் சண்டன்
எனுங்கண நாதர்கள் தமையுங்
கந்தனெம் பெருமாற் குடன்துணை யாகக்
கடுஞ்சமர்க் கனுப்பிவைத் தனரால். 13

பொன்பொலி யிரதம் மருத்துமுன் செலுத்தப்
புங்கவர் படையுடன் சூழ
சின்னங்க ளார்ப்பக் குமரநா யகனுஞ்
செறுநரை யழித்திடற் காக
வுன்னியே யெழுந்து வழிக்கொள லானார்
ஒழிந்தன சூரர்தங் கொடுமை
என்னவே யார வாரஞ்செய் தனரால்
ஏங்கிய வானவர் தொகையே. 14

போந்திடு வழியில் தாரகன் வதியுங்
கிரவுஞ்சப் பொருப்பினை யடைந்தார்
ஏந்தலை நோக்கி நாரதன் பணிந்தே
யிங்குள தாரகன் றனக்குக்
கேந்திர மான கிரவுஞ்ச கிரியும்
கேடிலா வவனையு மழித்துச்
சேந்தனே பின்னர்ச் செல்லுதல் தானே
சிறந்ததா மென்றுசெப் பினனால். 15

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

என்று நாரதர் கூறிட வீச னார்தரு மிளவலும்
நன்று நன்றென மகிழ்வுடன் நாடி யேநவ வீரருள்
துன்று வீரவா கென்றிடுந் துணைவன் றன்முக நோக்குறாச்
சென்று தாரகா சூரனைச் சிதைத்து வாவெனச் செப்பினான். 16

வீர வாகுவுந் துணைவரும் வீறு கொண்டுடன் சென்றுமே
தார காசுரன் றன்னுடன் தாக்கி நின்றுபோர் தாம்செய்தார்
தீர மாகவே யிவர்கள்செய் செருவி னுக்குடைந் தோடியே
கோர மாங்கிர வுஞ்சமாங் குன்றினுட் புகுந் தானரோ. 17

கட்டி யேகொணர் வோமெனக் கருத்தில் வீரவா குன்னியே
ஓட்டி நின்றிடு படையுடன் ஓடி யப்பெரு வோங்கலுள்
கிட்டி யுட்புகுந் திடுதலுங் கிரியும் வருவழி மூடியே
எட்டி யெங்கணுஞ் சென்றிட இடமி லாவகை செய்ததே. 18

எங்குத் தேடியுந் தாரக னிருந்த சூழலை யோர்ந்திலர்
அங்கு நின்றுமே மீண்டிட அணைந்த வாயிலுங் காண்கிலர்
தங்கு வீரர்கள் அனைவரும் தாரகன்புரி புணர்ப்பினால்
மங்கி நல்லுணர் வற்றுமே மயங்கி யேவிழுந் தாரரோ. 19

வெற்றி பெற்றவச் சேனைகள் வீழ்ந்தொ ழிந்தன வென்றுமே
யுற்ற தாரகன் விரைந்தெழு முவகை கண்டுமே யும்பர்கோன்
சுற்று கிரியினுள் வீரர்கள் சோர்ந்து வீழ்ந்ததை முருகன்பால்
சற்றுந் தாமத மின்றியே சார்ந்து மேமுறை யிட்டனன். 20

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அன்புடனே யிந்திரனு மறைந்தமொழி யதனை
யாறுமுகப் பெருந்தகையு மார்வமுடன் கேட்டுத்
தன்னுடனே போந்திட்ட தம்பியராம் வீரர்
தாரகன்றன் மாயையினாற் றான்மயங்கி நிற்கும்
இன்னலினை யொழித்திடவே யெண்ணிரதம் கொணர்க
வென்றுரைத்து வந்தவுடன் இரதமிசை யேறி
மன்னியவன் வதிகின்ற மலையினையும் மாயா
புரியினையும் வளைத்தவனை மாய்த்திடவந் தனரே. 21

எம்பெருமான் றனைக்கண்டு தாரகனு மெள்ளி
யிளஞ்சிறுவ நீயோவென் னுடனெதிர்க்க வல்லாய்
பம்பிவந்த படைகளெலாம் படுதோல்வி யுற்ற
பாலகனே யெதிர்நிற்றல் பரிதாபம் ஏகாய்
இம்பரிடை யெனமொழியு மிழிவுரைகள் கேளா
விணைவிழிகள் மிகச்சிவக்க ஏவொன்றை வாங்கிச்
சிம்புளென நிற்கின்ற தாரகன்மேற் செலுத்தச்
சிவன்கணையா லக்கணையைச் சிதறிடச்செய் தனனே. 22

நெடுநேர மவனுடனே நின்றுசமர் புரிதல்
நேரியதன் றெனநினைத்தே நிமலனருள் புதல்வன்
வடிவேலை யெடுத்தவன்றன் வலியசிர மதனை
வாங்கியபின் கிரவுஞ்ச மாமலையை யுடனே
பொடியாகச் செய்ததனுள் புலனிழந்தோர் மயக்கம்
போக்கிவர விடுகவெனப் போக்கிடவும் வடிவேல்
தடையின்றிச் சென்றந்தத் தாரகனை யழித்தே
தம்பியரை விடுவித்துத் தனிக்கரஞ் சார்ந் ததுவே. 23



நீதமுட னறுமுகவன் நிசிசரன்வீழ்ந் ததன்பின்
நீங்கியதை வழிக்கொண்டு நிமலனெழுந் தருளும்
காதலுறு தலங்களெலாங் கண்டுகண்டு வணங்கிக்
கனிவுடைய சோதரராம் காவலர்கள் சூழப்
போதலுறு வழியினிலே புனையாகி வேதம்
புராதனனை யின்றெடுத்த புண்ணியநற் றலமாம்
வேதவன மெனமொழியும் வெண்ணெய்நல்லூர் தங்கி
வித்தகனை வழிபட்டே விரும்பித்துதித் தனரே. 24

ஆறுமுகப் பெருந்தகையு மத்தனடி யதனை
யருச்சித்தே துதிக்கின்ற அருமையினை நோக்கி
வேறுபடு சமயமெலாம் வியாபித்தே நிற்கும்
விடையவனும் மனமகிழ்ந்தே வேண்டுவரம் யாது
கூறுகவென் றேவினவக் குமரனுமே மகிழ்ந்து
கொற்றமருள் படையொன்று கொடுத்தருள்வ தோடே
ஊறுசெயுஞ் சூரர்களை யொழித்திடுதற் கேற்ற
உபாயமுள தேலதையு முரைத்தருள்க வென்றான். 25

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அம்மொழி யதனைக் கேட்டே யானந்த வடிவமான
செம்மலும் மகிழ்வு கொண்டே சேந்தனை நோக்கிச் சூரன்
வெம்மைசேர் மாய மெல்லாம் விலகிடு வரமு மீந்தோம்
அம்மையை வேண்டிச் சத்தி வேலையு மடைவா யென்றான். 26

என்றிடு வாய்மை கேட்டே யெழிலுடைச் செவ்வேள் தானும்
தன்திருத் தாய்தன் தாளில் தாழ்ந்துமே சூரர் தம்மைச்
சென்றுமே செயிக்கத் தங்கள் திருக்கரத் திலங்குஞ் சத்தி
வென்றிவேல் தன்னைத் தந்து விருதுறச் செய்வீ ரென்றான். 27

செல்வன்சொல் லமுதச் சொல்லைத் தேவியு மகிழ்ந்து கேட்டுப்
புல்லிய சூரர் மாயப் புனிதமாஞ் சத்தி வேலை
வல்லைநீ வெற்றி பெற்று வருகுக வென்றே வாழ்த்தி
கல்வியின் மிகுந்த செவ்வேள் கரத்தினி லளித்தா ளன்றே. 28

மங்கைநா யகியும் மைந்தன் மகிழ்ந்திடத் தந்த சத்திற்
துங்கமாம் வேலை யேற்றுச் சூழ்மதில் மகேந்த்ரஞ் சென்று
அங்கவன் தனைய ழிக்க வசுரனுஞ் சூரன் றானுந்
தங்கிடு மயிலுங் கோழி தானுமாய் வந்தா னன்றே. 29

கோழியைக் கொடிய தாக்கி மயிலைவா கனமாக் கொண்டு
பாழிலே வருந்து வானோர் பட்டிடு வருத்தம் நீக்கி
வாழவே வைத்துத் தெய்வ யானையை மணந்து பின்னர்க்
கூழிடு மேனல் காத்த குறமகள் தனைவி ரும்பி. 30

வனவேடர் வடிவங் கொண்டு வள்ளிநா யகியை வேட்டு
மனமகிழ் வுறவே யந்த மாதரா ரிருவ ரோடு
புனையணி வெண்ணைப் போந்து புராதனன் றன்னைக் கண்டு
கனைகழல் வணங்கி வெற்றி தன்னையுங் கழறி னாரால். 31

அத்தனு மம்மை தானு மதுகேட்டு மகிழ்ச்சி கொண்டார்
உத்தம தேவர் வேண்ட உமையருள் செல்வன் றானுஞ்
சித்திர மயின்மீ தேறித் திருநடம் புரிய லானார்
அத்தகு நடனங் கண்டோர் ஆனந்த முற்றா ரன்றே. 32

இத்தகு மகிழ்ச்சி யென்று மிருந்திடத் தக்க தாகச்
சித்தம்வைத் தித்த லத்திற் சிறந்தவிந் நடனந் தன்னை
நித்தமும் புரிந்தே யன்பர் நினைந்திடு வரமு மீந்தே
யத்தனே காக்க வென்றா ரடிபணிந் தமர ரானோர். 33

வானவ ரிடுக்கண் தீர்த்த வள்ளலும் மகிழ்ந்தே யிந்தத்
தானத்தில் மயிலின் மீதே தாண்டவம் புரிந்து நிற்போம்
ஈனமே யணுகா தன்பர்க் கின்னருள் சொரிவோ மென்றான்
ஞானமே வடிவ மான நாயகச் செவ்வேள் மாதோ. 34

அன்றுதொட் டின்று காறும் அருட்டுறை யால யத்துள்
குன்றெறிந் திட்ட செவ்வேள் குறைவிலா தன்பர்க் கெல்லாம்
நன்றுற வருள்பு ரிந்தே நடனமும் புரியா நின்றான்
சென்றங்குப் பணிந்தோர் இன்பஞ் செறிந்திட வாழ்கின்றாரால். 35

அறுமுகச்சேவ்வேள் அருள்பெறு படலம் முற்றுப்பெற்றது.

ஆக செய்யுள் 339.

பத்தாவது

## விசயன் வேண்டுறு படலம்

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

புகல்கின்ற பஞ்ச பூதங்க ளல்ல
பொறியல்ல புலனு மல்ல
பகர்கின்ற வாறு சமயங்க ளல்ல
பல்வேறு பொருளு மல்ல
நுகர்கின்ற வின்ப மதுவல்ல வென்று
நுவல்கின்ற வேத மதுவும்
மகவென்று பெற்ற பொருள்தன்னை யேத்தி
மனமாசு போக்கி மகிழ்வாம். 1

திருவிந்த்ர பிரத்த நகரின்கண் வேந்தர்
திறைகொண்டு வந்து பணியத்
தருகின்ற தருமன் முதல்பாண்டு மைந்தர்
தனியாட்சி செய்து வருநாள்
செருவொன்று வேடர் நிரைகொண்டு செல்லச்
செயலின்றி தேகம் வெருவத்
தெருநின்றோர் முனிவன் இடுகின்ற முறையைச்
செவிகொண்டு பார்த்தன் வெகுளா. 2

நினதானி னிரையைக் கொடுசென்ற வேடர்
நிவகங்கள் நேடி வதியும்
வனமூடு சென்று வதைசெய்து மீட்டு
வருவேன் வருந்த லெனவே
தனிவாய்மை கூறிச் சதனத்துட் புக்குச்
சரமோடு தனுவு மேற்றுப்
பினைமீளு போதில் பாஞ்சாலி தருமன்
பிரியாது வைகல் கண்டான். 3

நிரைகொள்ளச் சென்ற காண்டீபன் புளினர்
நிறைகின்ற கான மூடு
விரைவோடு சென்று முனைநின்று வேடர்
வெருண்டோட வாளி சிதறி

நிரைமீட்டுத் தந்து மறையோனைப் போக்கி
நினையாது செய்த பிழையின்
புரைநீக்க வுன்னிப் புலவோரை யண்மிச்
செயலைப் புகன்ற னனரோ. 4

முன்னாளில் நீவிர் முடிவாகக் கொண்ட
முறைபோல வொருவ ருடனே
மின்னாளி ருக்க மற்றோர்கள் காணல்
மிகுபாவ மாகு மதனால்
இன்னேத லங்கள் பலசென்றி றைஞ்சி
யெழுபாவ முற்று நீக்கிப்
பின்னேவந் துறுதல் நலமாகு மென்று
பெரியோர்கள் பேசி னரரோ. 5

அறிவோர்கள் கூறும் உரைகேட்டுக் கிரீடி
யந்நாடு விட்டு நீங்கி
உறியோடு வெண்ணெ யுட்கொண்ட மாய
னுடன்போத தலங்க ளுள்ள
நெறியூடு சென்று நீராடி யீசன்
நிலைபெற்ற தலங்க ளுள்ளே
செறிவான மூங்கில் வனமூ டிருக்கும்
திருவெண்ணை நாதர்ப் பணிவான். 6

எழுகின்ற ஆவல் மிகவுந்த வீசன்
இமவான்ம டப்பி டியுடன்
வழுவாமல் வைகுந் திருக்கோயில் தன்னை
வலம்வந்து விசய னெரிமுன்
மெழுகாக வுள்ளம் மிகநைந்து வாட
விடைப்பாகன் திருவ டிகளைத்
தொழுதே யெழுந்து தொடர்பாவ நீங்கத்
துதிசெய்து நின்ற னனரோ. 7

### கலி விருத்தம்

கருணாகர பரமேசுர கருணாகரி கொழுநா
அருளேயொரு வடிவாகிய அமலாவொளிர் விமலா
தெருளாகிய மறைதேடிடு தேவாதியர் தேவா
பொருளாகிய நினையேதொழப் புகுவேற்கருள் புரிவாய். 8



எனவேதுதி மகவான்மகன் எழின்மாமுகங் கணியா
முனநீபுரி பவம்யாததை மொழிவாயென வினவ
வனமாலிதன் விழைதோழனும் மகதேவமு னொருநாள்
இளமீனுறச் சிலைதேடியில் விடமேபுகுந் தனனால். 9

அதுவேளையில் மூத்தோன்மனை யவளோடிருந் ததனை
எதிர்நோக்கின னதனாற்பவ மெனையேயடைந் துளதால்
விதுசேகர வதுநீர்வுறு விதநேடிநின் சரணங்
கதியேயென நனிதாழ்ந்தனன் கருணாகர வெனவே. 10

அருள்தாரக வடிவாயுறை யழன்மேனியன் மகிழ்வாய்
இருள்சேர்பவ மதைநீக்கினம் இனிமேல்துய ரிலையால்
மருள்சேர்தரு பகைநீங்கிடும் வருசேரலர் குலமும்
கருவோடழி வுறுவார்சயம் கடிதேயடை குவிரால். 11

எவண்சேரினு மவணீசய மெளிதேபெறு குவதாய்
நவமாகிய மனையாளுடன் நனிவாழ்குவை மகிழ்வாய்
நுவல்மாநில முழுதாளுவிர் நுகர்மாவிறல் விசயன்
இவனேயெனு முரையோங்கிட விசையீந்தனங் கொளுவாய். 12

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எல்லையில் அருளோ டிருந்திடு பரமன்
இறைஞ்சிடு மருச்சுனன் றனக்கு
வில்லினில் விசயன் இவனெனும் பெயரே
மேதினி யெங்கணும் வழங்கும்
தொல்லைசெய் பவங்க ளனைத்துமே தொலையும்
தூநெறி வழியர சாண்டு
மல்லன்மா ஞால மதனில்வாழ் வுறுவீர்
என்றிடு வரமுமீந் தனனால். 13

என்றருட் டுறையில் எழுந்தருள் வள்ளல்
இயம்பிடு வாய்மையைக் கேட்டுத்
துன்றிய வுவகை மிக்கெழ மகிழ்ந்து
சுரேசன்மா மதலையு மீசன்
தன்றிரு வடியில் வீழ்ந்துமே வணங்கித்
தயாவினைப் பன்முறை யேத்தி
மன்றுறு மணிக்கு மஞ்சன மாட்டி
மகிழ்ந்துபின் னருமிவை பகர்வான். 14

எங்களை வருக்கு மின்றுநாள் வரையில்
இருணிலம் புகாவகை யிருக்கத்
துங்கநன் மைந்த ரிலாமையி னலே
சோர்வுமே மிகவடைந் துள்ளோம்
சங்கர சம்போ சதாசிவா நீல
கண்டனே சாருவ பௌமா
தங்கிய எங்கள் குறைதனை நீக்கித்
தண்ணருள் புரிகவென் றிரந்தாள். 15

எனுமுரை கேட்ட வெம்பெரு மானும்
இந்திரன் மதலையை நோக்கி
மனுமுறை தவறு தாண்டிடும் நீங்கள்
மகிழ்வுற மக்களைப் பெறுவீர்
தனுவினில் வல்ல நின்றனக் கின்னும்
தக்கநன் மனைவியர் வாய்ப்பர்
பினுமவர் பாலும் புதல்வர்கள் பிறப்பர்
பேதுறே லெனவர மீந்தான். 16

சிவனருள் பெற்ற விசயனும் சின்னாள்
சிறப்புறு மத்தல மதனில்
நவநவ மான திருப்பணி புரிந்து
நாடியே மதுரைசென் றடைந்து
கவர்வுறு மெழில்சேர் சித்திராங் கதையைக்
கடிமணம் பூண்டுபின் மீண்டுந்
துவரைசென் றுங்குஞ் சுபத்திரை மணந்து
தொன்னகர் தனையடைந் தனனால். 17

இந்திரப் பிரத்த மாநக ரதனி
லிருந்துமே யாட்சிசெய் நாளில்
சுந்தர வதன மனைவியர் தாமும்
சுதர்களைப் பயந்தமை கேட்டு
மைந்தர்கள் பிறந்த மகிழ்ச்சிகொண் டாடி
மாநிதி யனைவர்க்கும் வழங்கி
இந்துசே கரன்றன் அருளினைத் துதித்தே
ஏவரும் அடிதொழ விருந்தான். 18

அருட்டுறை நாதன் அருளினல் மைந்தர்
அடைந்தன மென்றவண் போந்து
தெருட்டரு மவர்தந் திருவடி தொழுது
தென்புற நிருதிமூ லையினில்



பொருட்கொடு வாவி யொன்றெடுத் தந்தப்
புனிதநன் னீரினு லாட்டி
இருட்கடுக் கண்டத் திறைவனை யேத்தி
யின்னணம் மீட்டும் வேண்டுவனல். 19

இப்பெரு நகரில் நின்னைவேண் டிடுவோர்
இணையிலாப் புத்திரப் பேறு
தப்பிலா தடைய அருள்செய வேண்டுந்
தாணுவே யெனத்துதித் திட்டான்
திப்பிய வடிவாம் சிவனுமே யவற்குத்
திருவருள் சுரந்துமே யளித்தான்
அப்பெரு வரம்பெற் றருச்சுனன் மீண்டும்
ஆட்சிசெய் நகரடைந் தனனல். 20

விசயன் வேண்டுறு படலம் முற்றுப்பெற்றது.

ஆ செய்யுள் 359

**பதினொன்றாவது**

# வீதிகோத்திரர் வீடு பெற்ற படலம்

**கலி நிலைத்துறை**

போகமு மாகிப் போகியு மாகிப் புரையில்லா
யோகியு மாகி யோகியர் பகரும் பொருளாகி
ஏகமு மாகித் தத்துவ மறைக்கு மெட்டாத
தோகைம ணாளன் றொடுகழல் பணிந்தே துயர்தீர்ப்பாம். 1

பனிமதிச் சடையோன் திருவரு ளாலே பவமெல்லாம்
நனியுகு மென்றே மிகவுரை செய்தீர் நாயேங்கள்
இனிதுணர் வண்ணம் இயம்புக பெரும வென்றேத்தும்
முனிவர்கள் கேட்பச் சூதன்ம கிழ்ந்தே மொழிகிற் பான். 2

உத்தர திசையில் உசிரமென் றோது முயர் நாட்டில்
சித்திரா நதிசெல் காமபு ரத்திற் சிறப்புற்ற
உத்தம வீதி கோத்திர மறையோ னுயர்வேள்வி
நித்தமு மாற்றி நிருமலன் பூசை நேர்வானால். 3

கோடையி லோர்நாள் கோவினை யவிசாக் கொடுக்கின்ற
நீடிய அதிராத் திரமெனும் யாகம் நிகழ்போதில்
நாடிய நீவிர் புரிதரு வேள்வி நவை யுற்றே
பீடைய தாயிற் றெனவச ரீரி பேசிற்றால். 4

கண்ணுவர் பிருகு தேவலர் முதலோர் கனலின்முன்
பண்ணிய யாகப் பசுகரு வோடு பலியான
வண்ண முணர்ந்தே யப்பவம் நீக்கும் வகைதேடிக்
கண்ணிய பைலர்க் கவுசிகி நதிபால் கண்ணுற்றார். 5

முந்திய வீதி கோத்திர முனிவன் முகநோக்கி
வந்துள செய்தி யாதென பைலர் வழுத்தல்கேட்
டெந்தைபி ரானே யெளியன்செய் யாகத் திடராலே
நொந்திவ ணுற்றே னுய்வகை வேண்டும் நுவல்கென்றான். 6

அப்பிழை யாதென் றறிஞன் வினவ அருளாளா
திப்பிய வவிசிற் சினைப்பசு வென்றே தெரியாமல்
தப்பித மாக வேள்விசெய் பாவந்தனை நீக்கல்
[illegible] 7



கபிலையின் கருவைச் சிதைத்துள பாவங் கடிதுற்றால்
வபுவினை முன்னர்த் தூய்மைசெய் திட்டு வழுவாமல்
அபரமே துவிராற் கிருதெனும் யாக மது செய்தால்
சபதியில் பாவம் அகலுறு மென்றான் சார்பில்லான். 8

அம்முறை யருள்க வென்றலும் பைலர் அருள்கொண்டே
செம்மைய தாகச் செப்பிட லானார் சிவன்வேணி
தம்மிடை நின்று நந்தியின் சாபந் தனைநீக்க
இம்பர்வில் வழியில் வந்தது பெண்ணை யெழிலாறு. 9

அப்பெரு நதியின் பெருமையை யெவர்தா மறைகிற்பார்
எப்பவ முந்தீர் கங்கையு மிதனுக் கிணையாகா
ஒப்பிடு பெண்ணை நதியிடை யொருநாள் ஓழிபாவம்
செப்பிடு கங்கை நதியிடைச் சிலநாள் செலத்தீரும். 10

**அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்**

நந்திமீ துறுத லானும் நாரம்மேல் தாங்க லானும்
அந்திவா னிறத்தி னாலும் அரும்பெண்ணை யார்த லானும்
வந்தவர் மலத்தை நீக்கி வான்பதம் அருள லானும்
எந்தையாஞ் சிவனை யொக்கும் இரும்புனல் பெண்ணை யாறு. 11

மருதிடைத் தவழ்ந்து சென்று மாதர்கள் துகில்க வர்ந்து
தருமிசைச் சங்க மேந்திச் சனமெதிர் கொள்ளச் சென்று
வருபவர் தம்மைக் காத்து வளர்புவி யளக்கு நீரால்
திருமறு மார்பன் போன்று திகழ்வது திரைநீர்ப் பெண்ணை. 12

வனசமீ துறைத லாலும் வான்மறை யுடைமை யாலும்
வனையுடற் கிடம தாகி வாரியைச் சேர்த லாலும்
பினமகம் புரித லாலும் பிரமமாய் விளங்க லாலும்
அனமிவர் நான்மு கத்தோ னனையது பெண்ணை யாறு. 13

அண்ணல்சேர் பெண்ணை யாற்றை யண்மியே புவியின் மாந்தர்
கண்ணினால் ஒருகாற் காணின் கண்டிடு பலத்தி னாலே
எண்ணிலா வேள்வி யாற்றி யிருந்தவம் புரிந்த தான
புண்ணியம் வாய்க்கப் பெற்றுப் புகழையும் அடைவர் மாதோ. 14

நன்றுணர் விருப்பி னானை நணுகியே நன்னீர்ப் பெண்ணைச்
சென்றுநீ ராடு வீரேல் சேர்தரும் புண்ணி யங்கள்
என்றுரை செய்த பேரும் இருவினை நீங்கப் பெற்று
வென்றிசேர் இன்பந் துய்த்து விளங்குவர் புவியின் மீதே. 15

பாதகம் பலபுரிந்த பாவிய ரெனினும் பெண்ணைத்
தீதறு தீர்த்தந் தன்னிற் றினமொன்றின் மூழ்கு வாரேல்
ஏதமார் நிரயத் தாழார் இன்பமே துய்ப்ப தான
மேதகு வீடு பெற்றே மேன்மையு மடைவர் தாமே. 16

பொன்னினை விரும்பி னோர்கள் பூமியை விரும்பி னோர்கள்
கன்னியை விரும்பி னோர்கள் கதியினை விரும்பி னோர்கள்
இன்னவாம் விருப்ப முற்றோர் யாவரே யெனினும் பெண்ணை
தன்னிலே மூழ்கு வோர்க்குத் தாமேவந் தடையும் மாதோ. 17

பாரினில் பழிகள் பாவம் பண்ணினோர் பவத்தைத் தீர்க்கும்
கோரிய பலன்கள் கிட்டும் குறைவிலாச் செல்வம் பொங்கும்
வீரியம் கீர்த்தி மல்கும் வீடுபேற் றினையும் நல்கும்
வாரியுட் புகுதும் பெண்ணை வான்புனல் மூழ்கி னோர்க்கே. 18

பரன்சடை நின்றி றங்கிப் பாவங்க ளனைத்தும் போக்கும்
வரன்மிகு பெண்ணை யாறு வான்கங்கை தனினும் மேலாந்
தரமிக வுடைய தென்றே தபோதனர் சாற்ற லாலே
கிரமமாய் அதனின் மூழ்கிக் கிட்டிய பவந்து டைப்பீர். 19

அன்னவாம் நீருட் கொள்வோர் அரும்பிணி யனைத்தும் நீங்கும்
மன்னிநீ ராடு வோர்தம் வருபவம் மாயுந் தீரந்
தன்னிலே வைகு வோர்கள் தரித்திரம் நில்லா தோடும்
என்னலால் ஆங்கண் எய்தி இட்டிசெய் தின்பந் துய்ப்பீர். 20

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நதிக்கரையும் நதியுள்ளும் மலசலங்கள் கழித்தல்
நதியினுளே தானிறங்கிக் குதம்குய்யம் கழுவல்
நதிநீருள் வாயலம்பிக் கொப்புளித்தே யுமிழ்தல்
நதியதனில் நிருவாண மாக நீராடல்
மதியாமல் இவைபோன்ற பாதகங்கள் புரிவோர்
வறுமையுற்றுத் தீநரகில் வதிவார்க ளென்றே
பதிநூல்கள் முறையிடலால் பரிந்தவற்றை யுணர்ந்தே
பக்குவமாய் நீராடும் முறைபகர்வேன் கேண்மின். 21

புலரவைந்து நாழிகைமுன் னெழுந்துபுறம் போந்து
பொதுநலனுக் குதவாத தனியிடத்திற் சென்று
மலசலங்கள் தமைக்கழித்துக் குண்டிகைநன் னீரால்
மறைவிருந்து கால்கைகள் சுத்திசெய்த பின்னர்



நிலத்திலுலர் மண்ணெடுத்துப் பல தடவை தேய்த்து
நீர்கொண்டு கழுவியபின் தனியிடந்திலிருந்து
உலர்மாவின் இலைகொண்டு தந்தசுத்திசெய்தே
உதகத்தால் கொப்புளித்து முகங்கழுவல் வேண்டும். 22

அதன்பின்னர் நதியருகில் அணுகிநதி நோக்கி
அரனுடைய திருமுடிநின் றவதரித்த தாயே
மதனுடனே யனைவருக்கும் மங்களஞ்செய் கின்ற
மாதாவே வருணன்றன் மனையாகுந் தேவி
உதயஞ்செய் யாதித்தன் புறவிருளைப் போக்கி
யொளிதரல்போல் உயிர்கள்செய் பாவமெலாம் அகற்றி
இதம்புரியும் எம்மம்மே யாங்கள்செய்பா வமுமே
இப்பொழுதே நீக்கியருள் புரிந்திடுதல் வேண்டும். 23

என்றுரைத்தே அர்க்கியமும் ஈந்திட்ட பின்னும்
இருநிலத்தில் நந்திமலை யிடத்திருந்தே யிறங்கிச்
சென்றுகடல் தனையடையும் பிநாகினியாஞ் செல்வீ
சேர்ந்ததொழு நோய்தனையுந் தீர்க்கின்ற தேவி
நின்றுன்னைத் துதிசெய்யும் அன்புடையோர் தமக்கு
நித்தியமங் களமருளும் நிறைந்தகுணத் தாயே
இன்றுமெமர் பவங்களைதல் வேண்டுமெனக் கூறி
இறங்கித்தர்ப் பணம்புரிந்தே நீராடல் வேண்டும். 24

அரைதனிலே யிரண்டுடைகள் அணிந்துகொளல் வேண்டும்
அரனுமந் தனைத்துதித்தே அறலுச்சித் தெளித்துத்
திரைநீர்தான் வரும்வழியே திரும்பி நின்று கையால்
தீர்த்தமதைத் தானள்ளி யாசமனஞ் செய்து
இரைநீரில் மூச்சடக்கிப் பலகாலும் மூழ்கி
எழுந்துடலைச் சுத்திசெய்தே யீரவுடை யகற்றிக்
கரைமீதிற் றனமர்ந்து திருநீறு பூசிக்
கண்மூடிச் செபஞ்செய்து கடன்முடித்தல் வேண்டும். 25

இவ்வாறி யாகத்தில் உடனிருந்தோ ருடனே
யிணைந்துமே நீராடிச்செபம் முடித்த பின்னர்க்
கவ்வாறு நாழிகைமேல் பன்னிருநா ழிகையுள்
கருதுதுவி ராற்கிருது எனும்யாக மதனைத்
துவ்வாத உடுதம்மை மூன்றாகப் பிரித்துத்
தொடங்குகையிற் சார்த்திகையை முதலாகக் கொண்டு
செவ்வையுறத் தீர்த்தமலை திருக்கோவ லூரும் 26
செப்பிடுபூ ராடம்வரை வேள்விசெயல் வேண்டும்.

அப்பாலும் வேணுவன மானவருட் டுறையு
ளமர்ந்தேறும் யாகமதை யாற்றிடுவீ ராகில்
தப்பாமல் சிவபெருமான் தான்வெளியிற் றோன்றித்
தகைமையுடன் நும்குறைகள் தாம்கேட்டே யுணர்ந்து
கப்பியநும் பவமதனைக் கடிதினிலே யகற்றிக்
கருதியநும் வேள்விப் பயன் தன்னையுநன் கருள்வன்
இப்பொழுதே புரியுமென ஏவினரப் படியே
எரிவளர்ப்போர் தாம்கூடி யிட்டிசெய நேர்ந்தார். 27

அன்புடைய வீதிகோத் திரரென்னும் முனிவர்
அருளுடனே பைலர்மொழி யதைச்சிர சாவேற்று
மன்பதைகட் கருள்புரியுந் தென்பெண்ணை யாறு
வரும்வழியில் தீர்த்தமலை வான்பதியின் வைகி
இன்பதுவி ராற்கிருது என்னும்யா கத்தை
இசைத்தவிதி தவறுமல் கார்த்திகைநாள் தொடங்கி
நன்முறையில் ஒன்பதுநாள் பூசுரர்க ளுடனே
நடத்தியதைத் தான்முடித்து நனிமகிழ்கொண் டனரே.

பின்னருமப் பெண்ணை நதி பெருகுவழி வந்து
பிறங்குகின்ற திருக்கோவல் நகரினிடைத் தங்கி
உன்னியநல் லுத்திர நாள் தனிற்றொடங்கிப் பைலர்
உரைத்தமொழி தவறுமல் அந்தணர்க ளுடனே
பன்னுகின்ற பூராட நாள்வரையில் யாகம்
பாங்குபெற வேநடத்திப் பூர்த்தியுற்ற பின்னர்த்
தன்னிகரில் லாமூங்கில் வனமென்ன வுரைக்கும்
தகைமைபெறும் அருட்டுறையைத் தானடைந்தா ரன்றே.

அப்பெரிய திருத்தலத்தில் பெண்ணை நதிக் கரையில்
அமர்ந்திருந்தே யாகத்தை யுத்ராட நாளில்
விப்பிரர்கள் சூழ்தரவே வீதிகோத் திரரும்
விதிதவறு வணந்தொடங்கி நடத்திவர லானார்
செப்புமகந் தொடங்கியே செய்யமறு தினமாம்
திருவோண நாளதனில் சிவபெருமான் தானும்
ஒப்புமையில் இளவயதாய் ஒளிசெய்தழல் நடுவுள்
உமையுடனே தோன்றிடக்கண் டுருகித்துதிசெய்வார். 30



### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பார்தரும் அறிவி னாலும் பசுஞான மதனி னாலுந்
தேர்தரற் கரிய தாகித் திகழ்பரம் பொருளே போற்றி
வார்குழல் மங்கை பங்கா வருந்து மென்றுயரந் தீர்ப்பான் 31
நேர்வரு தயாள போற்றி நின்மலா போற்றி போற்றி.

அண்டங்கள் தமையு மேழென் றறைதரு முயிர்கள் யாவும்
பிண்டமாம் பொருள்கள் எல்லாம் அளித்தருள் பெரும போற்றி
பண்டுள குடிலை யான பரமனே நின்னைக் காண்பான் 32
மண்டனிற் றவம்பு ரிந்த மாதவ ரெண்ணி லாதார்.

அவர்களுள் யாங்கள் செய்த அறத்தின துருவே யென்ன
இவணெழுந் தருளப் பெற்ற கருணையை யியம்பப் போமோ
சிவபரம் பொருளே யாங்கள் செய்பவம் நீக்கி யெங்கள் 33
தவமது பலிக்க இன்பம் தந்திட வேண்டு மென்றார்.

அத்தகு மொழியைக் கேட்ட பரமனும் ஆர்வம் பொங்கப்
பத்திமை யுடையீர் உம்மைப் பற்றிய பவமொ ழித்தோம்
இத்தகு தலத்தி லெம்மைத் துதித்ததால் இன்னும் வேண்டும்
உத்தம வரந்தான் யாதோ உரைத்திடல் வேண்டு மென்றார். 34

அவ்வுரை கேட்டு வீதி கோத்திரர் அன்பு பொங்கக்
கௌவையும் ஒழித்தோம் தங்கள் கருணையின் திறமுமோர்ந்தோம்
திவ்விய தேவ ரீரைத் தெரிசிக்கும் பேறும் பெற்றோம் 35
ஒவ்விநும் அருள்ம ருத வுரமதும் வேண்டு மென்றார்.

மண்ணிடை யுள்ளோர்க் கெல்லாம் மங்களம் புரிவோ னுயும்
நண்ணிடும் எண்கு ணங்கொள் நாயக னுயு முள்ள
புண்ணியன் மகிழ்ந்து வீதி கோத்திரர் புகன்ற தோர்ந்து 36
பண்ணென வாய்தி றந்தே யிவையிவை பகர லானான்.

என்றன்பால் பத்தி குன்று வரமது மீந்தோம் நீவிர்
குன்றிடாப் பத்தி யால்நம் குரைகழ லடைவீர் திண்ணம்
நன்றென வறிந்து பெண்ணை நதிநீரை யுட்கொண் டோர்கள் 37
சென்றுபின் தாய்வ யிற்றிற் செனித்திடார் சரதம் தானே.

இப்பெண்ணை நதியின் பாங்கர் இருந்தத னாலும் நீரில்
தப்பாது மூழ்கி யுள்ளும் தான்கொண்ட தன்மை யாலும்
முப்போதும் நம்மை வேண்டி வேள்விசெய் முதிர்ச்சி யாலும் 38
இப்பேறு நீவிர் பெற்றே யெம்மையுங் காணப் பெற்றீர்.

திருவோண மென்னு மிந்தத் திப்பிய நாளிற் றேன்றிக்
கருணையோ டுமக்க ளித்த காட்சியை நினைவு கூரத்
திருவோண நல்லூர் என்னுந் திருப்பேருந் திகழ்வ தாக
அருளோடித் தலத்திற் கிட்டோம் என்னவே யறைந்து பின்னும்.

இன்ன நாள் யாவ ரேனும் எமைக்குறித் தித்த லத்தைத்
துன்னியே பெண்ணை யாடித் துதிசெய்து வணங்கு வாரேல்
மன்னியிவ் வுலகி லுள்ள இன்பெலாம் மகிழ்ந்தே துய்த்துப்
பின்னரெம் முலகஞ் சேரும் பெருமையும் பெறுகு வாரால். 40

இத்தலத் தணுகிப் பத்தி செய்பவர்க் கெல்லாம் இட்ட
சித்திக ளினிது கூடும் சிதைந்திடும் பாவ மெல்லாம்
உத்தம ராகி வாழ்ந்தே உயர்வீடும் அடைவ ரென்றே
அத்தனு முரைத்தே யங்கி யதனுளே ஐக்ய மானுர். 41

ஈதுமுன் னிகழ்ந்த தாகும் இக்கதை யதனைக் கேட்போர்
தீதிலாச் செல்வம் கீர்த்தி திகழ்மகப் பேறும் பெற்று
ஓதுநற் கதியுஞ் சேர்வர் என்றுமே யுவந்து ஞானச்
சூதனு முரைக்க நீத்தோர் சூழ்ந்துமே கேட்டா ரன்றே. 42

வீதிகோத்திரர் வீடுபெற்ற படலம் முற்றுப்பெற்றது.

ஆ. செய்யுள் 401



ஸ்ரீ சுந்தரர்

பன்னிரண்டாவது

# ஆலாலசுந்தரரை ஆட்கொண்ட படலம்

கொச்சகக் கலிப்பா

ஓங்காரத் தனிவடிவாய் உயிர்க்குயிராய் ஒளிர்வதனைப்
பாங்குபெற வெங்கெங்கும் பரந்துநின்ற பரம்பொருளைத்
தேங்குபர மானந்தச் சிவமென்னுந் தெள்ளமுதை
நீங்காத அன்பினுடன் நின்றேத்தி வணங்குவமால். 1

யாருயிர்கள் தமக்கெல்லாம் பதியாகி விளங்குகின்ற
பேரருள்சேர் சிவபெருமான் எழுந்தருளும் பெருமையதாய்
ஒரும்பொன் மேனியின்மேல் திருவெண்ணீ றொளிர்வதென
ஆரிமய மால்வரைமே லமைந்துளது கயிலைமலை. 2

புண்ணியத்தின் வடிவாகிப் புவனமெனுங் கொடிமீதே
நண்ணுகின்ற தலங்களெனுந் தளிரின்மேல் நனிமலர்ந்தே
வெண்ணிறப்பூ வெனத்தோன்றி மேதினிமா திற்கணியாய்க்
கண்ணிறைந்த காட்சியென விளங்குவது கயிலைமலை. 3

அச்சுதன்றன் பாற்கடலும் அலரவன்றன் வாகனமும்
உச்சவயி ராவதமும் உயர்வானி லொளிர்மதியும்
துச்சமெனப் பகர்வண்ணம் சொல்வெண்மை நிறைந்தெவரும்
மெச்சுவணம் விளங்குவது மேன்மைபெறு கயிலைமலை. 4

சார்ந்தார்க்குச் சாரூப்யந் தருஞ்சிவன்றன் றண்ணளிபோல்
சேர்ந்தாரை வெண்ணிறமாச் செய்திடலா லம்மலையில்
பேர்ந்தோடும் நீரருவி வெண்ணிறமாய்ப் பிறங்குவதால்
நேர்ந்தமுதோ பாலொழுக்கோ வெனவெண்ணு நீர்மையதால். 5

நான்மறையின் பேரொலியும் நாகர்துந் துபியொலியும்
வான்மருவு கின்னரர்கள் வருடுகின்ற யாழொலியும்
மேன்மையுள முனிகணங்கள் விளம்புகின்ற துதியொலியுந்
தான்கலந்தே வரையொலியுள் தலைமயங்கும் அம்மலைக்கண். 6

அத்தகுமா மலைச்சிகரத் தாதவர்கள் பலகோடி
யொத்துகதிர் விடுவதென வொளிர்மணிமா மண்டபத்தில்
அத்திமுகன் முருகனுமே யருகிருப்ப அரியணைமேல்
தத்தைமொழி யுமையுடனே தனிமுதல்வன் வீற்றிருந்தான். 7

கின்னரர்கள் கிம்புருடர் கிளர்கருட கந்தருவர்
பன்னுசித்தர் விஞ்சையரும் பண்ணவர்கள் குழாங்களுமே
மன்னரனைத் தெரிசிப்பான் மருங்குசூழ்த் தெதிரிருப்ப
உன்னுநந்தி வேத்திரங்கொண் டொழுங்குறவே செய்
குவனால். 8

பூதகணம் வேதாளம் புனிதமுள சிவகணங்கள்
ஆதியபல் கணஞ்சூழ்ந்தே யஞ்சலிசெய் தருகிருந்து
வேதமொழி வாய்பகர விழிபுளக நீரரும்ப
மாதொருபா தியன்றன்னை வழிபாடு செய்திருப்ப. 9

பழகிடுதன் னேவலுக்கோர் பணியாளன் பெறவிரும்பி
அழகுருவாஞ் சிவபெருமான் ஆடியில்தன் முகநோக்கி
யழகேவா வெனவழைப்ப யதுதிரண்டே யுருவாகிக்
குழகன்முன் வரவவருங் கொண்டேற்றே மகிழ்வுற்றார். 10

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சுந்தர வடிவாய்த் தோன்றிய வந்தத்
தோன்றலைச் சுந்தரா வென்றே
யெந்தையு மழைத்துப் பணிசெய விடுத்தான்
ஏந்தலும் ஏவல்செய் திருந்தான்
சிந்துவைக் கடைந்த தேவர்கள் வெருவச்
சினந்தெழும் ஆலகா லத்தை
யந்திவண் ணன்பால் கொடுவர லாலே
யாலால சுந்தர னானான். 11

அதுதெரிந் தம்மை யாடியை நோக்கி
யழகினை யிருமுறை யழைக்க
விதுநிகர் முகத்து மங்கைமா ரிருவர்
தோன்றியே வெளிப்பட லானார்
மதன்மிகு மவர்க்கே யநிந்திதை யென்றும்
கமலினி யெனவும்பேர் வழங்கி
விதிமுறை தமக்குப் பணிசெய விடுத்தாள்
வேதமும் அறிகிலா விமலை. 12

அத்தன்றன் பணியிற் குறைவிலா வண்ணம்
ஆலால சுந்தரன் புரியச்
சத்திதன் பணியி லநிந்திதை யோடு
கமலினி தானுமே சார்ந்து



நித்தமும் பணிசெய் திருந்திடு நாளில்
நிலமகள் செய்தமா தவமும்
உத்தம நடுநா டிழைத்த புண்ணியமு
மொருங்குசேர் நாளதோ வுணரேம். 13

ஒருதினங் காலைச் சுந்தரர் தாமும்
உமாபதி பூசனை புரியத்
தருவடர் நந்த வனந்தனுட் புகுந்து
தண்மலர் கொய்திடுகாலை
திருவினின் மிக்க வெழிலுடை மாதர்
இருவர்கள் தேவிபூ சைக்கு
மருமலர் கொய்தல் கண்டனர் வியந்தே
மனத்தினுள் இன்னவெண் ணுவரால். 14

வானுறு புயலுங் கங்குலும் அறலும்
வண்டொடு பசியசை வலமுங்
கானுறு கடுக்கைக் காய்களு மீந்தின்
கனிகளு முவமையா குவவோ
மீனுறழ் தடங்கண் மங்கைமார் தங்கண்
மேனியை யழகுறச் செய்யும்
தேனிமி ரலங்கல் சூடியே தகரஞ்
செறிந்திடு கூந்தலின் தெளிவே. 15

இங்குறு மகளிர் நுதலினுக் கிணைநா
மிலையெனு முண்மையை யுணர்ந்தே
திங்களங் குழவி வானிடை முகிலுள்
மறைந்துமே திரியலா யதுவோ
மங்கையர் புருவ வளைவினுக் குடைந்தே
மாகமே லிந்திர தனுவும்
கங்குன்மாலையினுங் காலையுந் தோன்றிக்
கரைந்திட லாயதோ வுணரேம். 16

வண்ணமா வடுவோ கயலதோ கணையோ
வாளதோ வரியளி தானோ
திண்ணிய வயிலோ காவியோ பிணையோ
தெறலுறு மறலியோ வறியேம்
விண்ணவர்க் கமுத மளித்தபாற் கடலுள்
விடம்பொருந் தியதென விளங்கிக்
கண்ணுறு கின்ற காளையர் மனத்தைக்
கவர்வுறுங் கண்களின் கவினே. 17

இம்மட மகளா ரெழில்தரு முகத்திற்
கிணையதா இந்துவை யுரைப்பின்
அம்மதி தானுந் தேய்வுறும் வளரு
மாதலா லதுசிறப் பன்றால்
செம்மைசேர் கமல மலரெனி லதுவுஞ்
சிதைவுறு நீர்மையா தலினால்
தம்மையே நிகர்க்கும் முகத்தினுக் குவமை
தருவது மடமையே யாமால். 18

இன்னண மாகப் பற்பல வெண்ணி
யிருந்துழி மாதரார் தாமும்
வன்னியாய் நிற்குஞ் சுந்தர ரழகை
வரிவிழி யாற்கண்டு மகிழ்ந்தார்
பன்னுவ தென்னே கண்களே கண்டு
பரிந்துற வாடியே மையல்
பின்னிட நின்று காலந்தாழ்த் ததற்பின்
பிஞ்ஞகன் திருமுனர்ச் சென்றார். 19

உரியகா லத்தின் பின்னர்வந் துறலாற்
சுந்தரர் ஒளிர்முகங் குன்றித்
திரிபுறல் நோக்கித் திரிபுராந் தகனும்
நகைசெய்து தெரிவையர் தம்பால்
பிரியம்வைத் ததனாற் புவிமிசைச் சென்று
பெண்களை மணந்துமே பின்னர்
வருகெனப் பணிக்கத் தவற்றினை யுணர்ந்தே
சுந்தரர் வணங்கியீ துரைப்பார். 20

பிறைமுடி தரித்த பிஞ்ஞகா போற்றி
பிரணவ சொரூபனே போற்றி
மறைமுடி நடஞ்செய் மகிபனே போற்றி
மானிட மேந்தினோய் போற்றி
கறைமிட றுடைய கண்ணுதால் போற்றி
காலனைக் கடிந்தவ போற்றி
இறையவ போற்றி யீசனே போற்றி
என்பிழைக் கிரங்குவாய் போற்றி. 21

கற்பகந் தன்னை யடைந்திடு பேதை
காஞ்சிரம் விரும்புதல் போலத்
தற்பர நின்றன் திருவடி யுற்றுந்
தமியனேன் மயல்கொளல் தகுமோ



சிற்பர வதுநின் றிருவருட் செயலோ
தேர்ந்திலேன் சிறியனேன் றன்னை
அற்பமென் றகற்றில் அடியனேன் பிரிந்தே
அவனியில் எங்ஙனம் வாழ்கேன். 22

தாயினை விட்டுப் பிரிந்துமே கலங்கித்
தவித்திடுங் கன்றது போலும்
தோயம்விட் டகன்ற மீனது போலும்
தொல்லுயிர் பிரியுடல் போலும்
மாயமே நிறைந்த புவியிடைப் புகுந்து
வாழவோ மனமிசை கில்லேன்
தீயவென் பிழையைப் பொறுத்தருள் புரியுந்
தேவர்கள் தேவனே என்றார். 25

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அஞ்சல்நீ நம்பி மக்கள் அறியாமை வெள்ளத் தாழ்ந்து
துஞ்சியே பிறப்போர் தம்மைத் துணையெனக் கொண்டு தீமை
மிஞ்சவே புரிந்து மீளா நரகினில் வீழு கின்றார்
பஞ்சையா மவர்கள் தம்மைப் பாதுகாத் திடுதல் வேண்டும். 24

ஆதலால் நின்னை நாமே யனுப்பிட வுள்ளங் கொண்டோம்
காதலால் நீயு மந்தக் கன்னியர் தமைக்கண் ணுற்றாய்
பூதல மதனிற் சென்று பூவையர் மயலிற் சிக்கிப்
போதம திழக்கா வண்ணம் போந்துனை யாளாக் கொள்வோம்.

என்றனக் குற்ற தோழன் எனுமுண்மை யெவருந் தேற
உன்றனக் குதவி செய்வோம் உலகினோர்க் குண்மை ஞானஞ்
சென்றுநீ யுபதே சித்தே தெளிந்தபின் சேர நம்பால்
அன்றுனை யழைத்துக் கொள்வோம் ஐயுறே லென்றா ணண்ணல்.

அத்தகு வாய்மை தன்னை யழகனும் மகிழ்ந்து கேட்டுத்
தத்துவங் கடந்த செய்ய தாமரைத் தாளி றைஞ்சி
வித்தக வடிவே தாங்கள் விதித்திட்ட விரதங் காப்பான்
எத்திசைச் செல்வ தென்ன வெண்குணத் தவனி யம்பும். 27

மாதலந் தன்னிற் புக்கு மகிமைசேர் நாவ லூரில்
ஆதரத் துடனே நம்மை யனுதினம் வழிபா டாற்றுங்
கோதிலாச் சடைய னேடுங் குலவிசை ஞானி தன்பால்
காதல்செய் மகவாய்த் தோன்றிக் கடமையை யாற்று கென்றார். 28

அப்பணி சிரமேற் றாங்கிச் சுந்தர ரகன்ற பின்னர்த்
துப்புறழ் வாயர் வந்து துணையடி வணங்கி நிற்ப
இப்பிழை நுங்களுக்கு மேய்ந்துள தாத லாலே
செப்பிய வண்ணாஞ் செல்வீர் நீங்களு மென்றாள் செல்வி. 29

இமயமீன் றிட்ட பாவை யியம்பிய வாய்மை கேளாக்
கமையுடன் கன்னி மார்கள் கைகுவித் திறைஞ்சி யம்மே
எமையுமவ் வாறு தாங்கள் ஏற்றருள் புரிவீ ரென்றே
அமைவுடன் வேண்டி நீங்கி யகிலம தடைந்தா ரன்றே. 30

கோச்சகக் கலிப்பா

செந்தமிழுந் திருவுமுறை திருநாவ லூரின்கண்
அந்தணராஞ் சடையனார் ஆற்றுதவம் பலித்ததென
இந்துநுதல் மனைவியரா மிசைஞானி யார்வயிற்றில்
சுந்தரர்வந் தவதரித்தார் சிவசமயந் துலங்கிடவே. 31

தவத்தினரால் மிக்குயர்ந்த தமிழுலகம் வாழ்ந்திடவும்
அவத்தினர்கள் தோன்றுபர சமயமெலா மழிந்திடவும்
சிவத்தினருள் மேன்மையுறு திருத்தொண்டர் தொகைதரவும்
நவத்தின்மேற் சுந்தரர்தாம் நனியவதா ரஞ்செய்தார். 32

பெருமிடியன் புதையனிதி பெற்றுமகிழ்ந் ததுபோலுங்
குருடனுக்குக் கண்தெரிந்தே குலாவுகின்ற செயல்போலும்
அருமையுடன் பெற்றெடுத்த அந்தணர்கண் டகமகிழ்ந்தே
பொருவரிய சடங்கியற்றிப் பூடணமு மணிவித்தார். 33

ஐம்படையுஞ் சதங்கைகளு மணிவித்தம் மகவினுக்குத்
தம்மரபின் முன்னோர்கள் தனிப்பெயரும் நனிவிளங்க
நம்பியா ரூரரெனு நாமமுமே மிகச்சூட்டித்
தம்பிரா னருள்வேண்டித் தாம்வளர்த்து வரலானார். 34

பேரழகெல் லாந்திரண்டே பிறங்குநம்பி யாரூரர்
தேருருட்டி விளையாடித் தெருவின்கண் வருமழகை
வாரணமேற் பவனியாய் வருகாலைக் கண்ணுற்றே
நாரமிகக் கொளலானார் நரசிங்க முனையரையர். 35

அம்மகவைப் பெறும்பேற்றை யடைந்தவர்தம் பாற்சென்றே
இம்மகவை யான்வளர்க்க வீந்தருளு மெனவிரந்தார்
சம்மதங்கொண் டவரளித்தார் தராபதியும் மகன்மைகொடு
செம்மையுற வளர்த்திட்டான் சிவன்கழலைத் துணைக்கொண்டே.



கயிலைமலை தனைப்பிரிந்த கமலினியுந் திருவாரூர்
மயிலைநிகர் கணிகையரின் மகளாகப் பிறந்திட்டாள்
புயலொற்றி யூர்வேளாண் புதல்வியாய் அவதரித்தாள்
அயில்விழிசேர் அநிந்திதையு மவனிதலத் திடைமாதோ. 37

மன்னவர்கள் திருவினுடன் வைதிககோ லமும்பொலியச்
சொன்னபது மையென்னச் சுந்தரனார் தாம்வளர்ந்தே
பன்னுகலை பலபயின்றார் பகர்முந்நூ லும்பூண்டார்
மன்னுகின்ற வெழிலுடனே மணப்பருவ முற்றனரே. 38

அத்ததியில் சுற்றத்தா ரனைவருமே நன்காய்ந்து
புத்தூர்வாழ் சடங்கவிதன் புத்திரியை மணம்பேசி
உத்தமமாம் மணவோலை யுறவினர்க்கெல் லாமனுப்பிச்
சுத்தநல்ல வோரைதனில் மணமியற்றச் சூழ்ந்தனரால். 39

மன்றல்செயு முன்னாளில் மணமகனை நீராட்டி
வென்றியுறு மாவேற்றி வேதியர்கள் புடைசூழத்
துன்றியபல் லியமுழங்கத் தொன்னாவ லூர்நீங்கி
யென்றுமிசை பெறுமீன்றோர் புத்தூரை யெய்தினரே. 40

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மணம்வரு புத்தூரில் வாழ்ந்திடு மாமறை யாளரும் மகளிருங்
கணங்கண மாகவே குழுமுவார் கடிமனை யெங்கணும்புதுக்குவார்
அணிபெறப் பந்தர்கள் வேய்குவார் அரம்பையுங் கமுகையு
நாட்டுவார்
மணிமலர் மாலைகள் தூக்குவார் மங்களத் திருவிளக் கேற்றுவார்.

சித்திர மெங்கணுந் தீட்டுவார் தெற்றியிற் கோலங்கள் போடுவார்
வித்திய பாலிகை நிறைகுடம் வேதிகை மீதில் நிரப்புவார்
புத்துடை யணிகளைப் பூணுவார் புரிகுழல் மேன்மலர் சூடுவார்
ஒத்துமே மங்கலம் பாடுவார் ஒருவரை யொருவர்த ழீஇக்
கொள்வார். 42

உற்றிடு மணமகன் றன்னையும் உடன்வரு குழுவினர் தம்மையும்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் பூமுதல் மங்கல மேந்தியே
எற்றுபல் லியங்களி யம்பவே யெதிர்கொடு முகமனி யம்பியே
மற்றுள சுற்றமுஞ் சூழ்தர மங்கல நன்மனைச் சேர்ந்தனர். 43

திருமண ந் தொடங்கிடு நாள்தனிற் றிவ்விய கீதங்க ளொளிசெய
மருவிய கிளைஞர்கள் சூழ்தர மங்கல கீதங்கள் பாடிட
திருநிகர் மங்கைக்கும் மைந்தர்க்குந் திருமஞ்ச னங்கள்செய் வித்த
பின்
எரிமுன ரவரையி ருத்தியே யிருக்குகள் மொழிந்திட லாயினார். 44

கந்தமி கும்புகை மூட்டுவார் கத்தூரி புனுகுடன் வீசுவார்
சந்தன மும்பனி நீர்கள்தூய்ச் சகலரு மகிழ்வுறச் செய்குவார்
அந்தம ணத்திடை மங்கைமார் அனைவருங் கூடித்த மக்குளே
சிந்தையிற் றோன்றிய படியெலாஞ் செப்பிம கிழ்வுற லாயினார். 45

மைந்துடை நம்பிக்கு மனைவியாய் வாய்த்தது மங்கைசெய்
நோன்பென்பார்
இந்துநு தல்தனை வேட்டிட எத்தவம் நம்பிசெய் தானென்பார்
பந்தமு டைமணங் கூடிடப் பதிசெய்த புண்ணியம் யாதென்பர்
இந்தம ணத்தினைக் கண்ணுற எத்தவம் செய்தனம் யாமென்பார்

இவ்விடை யின்னணம் நடைபெற வெந்தமை யாளுடை நாயகன்
ஒவ்வியே முன்னரு ரைசெய்த வொருமொழி தனைப்பாது
காக்கவே
திவ்விய விருத்தன் றன் வடிவொடு திருக்கரத் தாற்றண்டை
யூன்றியே
செவ்விய திருமணங் காணவே சென்று நடந்திட லாயினார். 47

விண்டுவும் வேதனு மறியொணா வித்தகன் வேதிய வடிவொடு
மண்டனிற் றிருவடி தோய்தர வந்திடு காட்சியைக் கண்டபேர்
பண்டுசெய் நம்தவந் திரண்டதிப் படிவம தென்றுவ ணங்குவார்
கண்டிடில் நாம்முனர்ச் செய்திட்ட கன்மங்கள் மாய்ந்திடு
மென்பரால். 48

இன்னவி தம்பலர் கூறிட வெந்தைபி ரான்மணப் பந்தருள்
பொன்னடி வைத்தும்பு குந்துமே புடையுள பலரையும்
நோக்கியே
மன்னிய வேதங்க ளாய்ந்துளீர் மணமகன் றனக்குமென் றனக்கு
மோர்
துன்னிய பெருவழக் குளததைச் சொல்லுவன் கேளுமின்
என்றனர். 49



அம்மொழி கேட்டலும் மணமகன் அப்பெருந் தகைதனை
நோக்கியே
எம்மிடைப் பெருவழக் குளதெனின் இயம்புமி னிதனைமு டித்தன்றி
இம்மண வேள்வியை முடிக்கிலே னென்றலும் நெற்றிவி ழியினான்
அம்மணப் பந்தருட் சூழ்ந்துள அந்தணர் கேட்டிட மொழி
குவார். 50

காதல்ம ணம்புரி காளையென் னடிமையின் கால்வழி வந்தவன்
ஆதலின் முறைப்படி யென்றனுக் காட்செயு முரிமையி லுள்ளவன்
ஈதவன் சிந்தையு ளெண்ணிலா தெய்ப்பது தன்னைத்தெரிந்தவன்
மீதுள பிழையினைக் கூறினேன் வினைசெய வேவுவீ ரென்றனர். 51

வையக மீதுள வுயிரையும் வானவர் தம்மையு மாட்கொளு
மையனு ரைத்திடும் வாய்மையை யந்தணர் யாவருங் கேட்டனர்
பையத்த மக்குளே நகைத்தனர் பைத்திய மோவென வுன்னினர்
ஐயரே ! யந்தணர்க் கந்தணர் அடிமையெ னன்மிகு விந்தையே.

என்றுமே மாமண ந் தன்னிடை யிருந்திடு மந்தண ரியம்பிட
நன்றுகொல் நன்றுகொல் மறையவர் நவின்றிடு வாய்மொழி
யென்றுமே
மன்றல்பு ரிந்திடு காளையும் வள்ளலை நோக்கிச்சி ரித்தனன்
கொன்றைவே ணியனது கேட்டுமே குரிசிலை நோக்கியீ துரை
செய்வான். 53

உண்மை யுணர்ந்திலை நகைத்தனை யுன்றந்தை தன்றந்தை
யொன்றியே
மண்ணி னில் வழிவழி யடிமையாய் வகுத்திடு தொழில்புரி
வோமென
எண்ணியே யெழுதியீந் துள்ளனன் இந்தஆ ளோலையின்
சொற்படி
நண்ணியே பணிசெய வாவென்றார் நம்பியும் பித்தனோ
நீரென்றான். 54

பித்தனே யாயினு மாகுக பேயனே யாயினு மாகுக
எத்தனை தீமொழி கூறினும் இயம்பிடு மொழிகட்கு நாணிலேன்
அத்தனைக் கென்னை நீ யொன்றுமே யறிந்திலை யாயிடின் நின்றுமே
வித்தகம் பேசிடல் விட்டுமே வேண்டிய பணிசெய வாவென்றார்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அகிலசரா சரமனைத்தும் ஆளாக் கொண்டு
அவரவர்கள் வினைவழியே யாடச் செய்து
உகமுடிவில் ஆனந்தத் திருக்கூத் தாடு
மொப்பற்ற வொருமுதல்வ னுரைத்தல் கேளாத்
தகவுடையீர் என்றன்மூ தாதை முன்னாள்
தந்தவா ளோலைதனைக் காட்டு மென்றே
புகைவிடுதீ யிடைநின்று மெழுந்து நம்பி
புராதனன்றன் இடைநெருங்கிப் புகன்று னன்றே. 56

ஆளோலை தனைநீயோ காண வல்லாய்
அவையினரே யதுகாணற் குரிய ராவர்
தாளாண்மை யுடனேவும் பணிசெய் யாது
தகவோலை தாவென்னல் தக்க தேயோ
ஆளேநீ யாகையினாற் காட்டே னென்றே
யயன்மாலு மறியாத வமலன் செல்ல
மீளாத சினமுடனே நம்பி யோடி
மேதகையோன் கையோலை மீட்கச் சென்றார். 57

பத்தர்பால் பரிவுடைய பரமன் றானும்
பயமுடையான் றனைப்போலப் பதறி யோட
நத்தியே பின்தொடர்ந்து நம்பி யோடி
நாயகன்றன் கரத்திருந்த வோலை வாங்கி
இத்தரையில் அந்தணர்கள் ஆளாச் செய்தல்
என்னமுறை யிதுவென்றே கீறி யிட்டார்
அத்தனுமே யதுகண்டு முறையோ வென்றே
யாரணஞ்சொல் திருவாயா லரற்றி னானால். 58

அருமறைகள் முறையிட்டு மறிய வொண்ணா
வருட்சோதி வடிவான அமல னும்தன்
திருவாயால் முறையோவென் றரற்றல் கேட்டுத்
திருமணத்திற் சூழ்ந்திருந்த மறையோ ரெல்லாம்
வருமுறைக்கு மாறாக வாது பேசும்
வயோதிகரின் முகநோக்கி மறைகள் வல்லீர்
மருவியெங்க ளுள்ளீர்நீர் வழுத்து மென்ன
மகேசனுமே சிலமொழிகள் வழங்க லானான். 59



இதுகாலை யிங்குள்ள துணர்வீர் நீவிர்
என்றனுடை இருப்பிடமுஞ் சேயதன்று
நதிபாயும் பெண்ணைவெண்ணெய் நல்லூ ராகும்
நம்பியுமே யறவழியை நழுவ விட்டுக்
கதுமெனவென் கரத்திருந்த வோலை யீர்த்துக்
கண்டதுண்ட மாய்க்கிழித்து விட்ட தாலே
அதுவுண்மை யென்பதனை யனைவோ ருக்கும்
அறியச்செய் தானடிமை யென்று னன்றே. 60

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நம்பியா ரூர ரந்த நாயக னுரையைக் கேட்டு
வம்புறு மன்றி லாடி வழக்குமுற் றவன்நீர் போலும்
இம்பர்வாழ் வெண்ணெய் நல்லூ ரென்பிரே லாங்குச்சென்று
நும்பிழை வழக்கை யெல்லாம் நுவலநீர் போதி ரென்றார், 61

நீதிசே ரந்ந கர்க்கு நீயுமென் னோடு போந்தால்
ஆதியி லுள்ள மூல வோலையை யாங்குக் காட்டி
வாதித்தென் னடிமை யென்னல் வலியுறச் செய்வே னென்ன
வோதியே தண்டொன் றூன்றி யொப்பிலாப் பெரியோன்
சென்றான். 62

ஈர்த்திடு காந்தத் தின்பா லிரும்பனை தோற்றம் போலத்
தீர்த்தன்பின் நம்பி செல்லத் திருவெண்ணெய் நல்லூ ருற்றான்
ஆர்த்திடு சுற்றத் தாரு மவர்கள்பின் தொடர்ந்து சென்றார்
கீர்த்திசேர் அவையோர் முன்னர்க் கீசனுங் கிளத்த
லுற்றான். 63

என்றனக் கடிமை யென்ன வெழுதிய வோலை தன்னை
வன்றிறல் கொண்டிந் நம்பி வாங்கியே கீறி யிட்டு
ஒன்றியென் பின்னர்ப் போந்தே யுள்ளன னுண்மை கேட்டு
நன்றுரை வழங்கல் வேண்டு மென்றனன் நரைமூ
தாளான். 64

மறையவ ரடிமை யாதல் மாநிலந் தன்னி லில்லை
அறையுநும் மொழிக ளையம் விளைக்கின்ற வைய வென்றார்
நிறைகுண முடையீர் ஓலை கிழித்தது நீதி யாமோ
பொறையுட னிவன்மூ தாதை பொறித்ததவ் வோலை
யென்றான். 65

### கோச்சகக் கலிப்பா

முன்னவையி லுளவறிஞர் நம்பிதனை முகநோக்கி
நின்னுடைய முறையாது நிகழ்த்துகென வாரூரர்
என்னையுமே யாதிசைவ னென்னவுநீ ரறிந்திடுவீர்
இன்னமுறை மாயமதா யிருக்கின்ற தெனமொழிந்தார். 66

அவ்வவையி லுள்ளோர்கள் அருமறையோன் றனைநோக்கிக்
கவ்விய நல்லாட்சியினுற் கணித்துள்ள வாவணத்தாற்
செவ்வையுடைக் காட்சியினுற் செப்புகின்ற மூன்றிலொன்ருல்
இவ்விடையில் நிருபித்தா லியம்பிடலா முறையென்ருர். 67

படியோலை யிவன்கிழித்தான் பகர்மூல வோலைதனை
யடியேன்பால் வைத்துள்ளேன் அதற்கிடையூ றில்லையெனிற்
கடிதினிலே காட்டிடுவே னெனவவர்கள் காட்டுமென்ருர்
முடிதுளங்கு மறையவனு மாவணத்தை முன்வைத்தான். 68

திருவெண்ணெய் நல்லூரில் நிகழ்பித்தன் திருவடிக்கே
அருமறைதே ராரூரன் அளித்திட்ட அடிமைமுறி
வருமரபி லுளோரெல்லாம் வழித்தொண்டு புரிவமென
ஒருமையுடன் வரைந்தளித்தே னூர னெப்பமிதே 69

எனவரைந்த ஆவணத்தை யெல்லோரும் கேட்டுணர்ந்தார்
முனம்பாட்ட னூர்வரைந்த ஏடெல்லாம் முன்கொணர்ந்தான்
தனதெழுத்தோ டொத்திட்டார் உண்மையெனத் தாமுணர்ந்தார்
பனவன்ருன் அடிமைசெய வேண்டுமெனப் பணித்தனரால், 70

அந்தணனை யடிமைகொண்ட வருமறையோன் முகநோக்கி
இந்தவள மாநகரே யிருப்பதுநீ ராகினுந்தஞ்
சொந்தமனை யெங்குளது சொல்லுமென்ரு ரவையிலுளோர்
எந்தமைநீ ரறியீரேற் காட்டிடுவோ மெழுகென்ருர். 71

முதுமறையோன் கோலூன்றி முன்செலப்பின் நம்பிசெலச்
சதுரரெனு மவையினருஞ் சார்ந்துமே பின்தொடர
விதுமுடியோன் கோயிலினுள் வேதியனு முட்புகுந்தான்
அதுகண்ட பின்னவனை யாவருமே காண்கிலரால். 72

நாதனைமுன் காணுராய் நம்பியுமே திகைத்திருப்ப
மாதொருபா கன்ருனும் மால்விடைமே லெழுந்தருளிக்
காதலினென் னடியவன்நீ காசினியிற் காவென்ருய்
ஆதலினல் வழக்காடி யாட்கொண்டோ மென்றறைந்தான். 73



அவ்வுரைகள் செவிப்புகலும் ஆன்கனைப்புக் கேட்டுமகிழ்
செவ்வியவான் கன்றினைப்போல் தேகமெலாம் புளகமெழத்
திவ்வியமன் றினினடிக்குந் திருவடியே யென்பொருட்டால்
இவ்விடைவந் தாட்கொண்ட தெனமகிழ்ந்து துள்ளினராய். 74

விண்ணிடைத்துந் துபிமுழங்க விரைமலர்கள் மழைபொழிந்து
மண்ணிடையெல் லாம்நிரப்ப மாதொருபா கன்பின்னும்
பண்ணுடைய பாடலிலே பரிவுடையோ மாதலினல்
எண்ணி யென்மேற் பாடென்ருர் இருக்களித்த திருவாயால். 75

இன்றெனையாட் கொண்டருளு மேந்தால்நின் குணக்கடலில்
ஒன்றினையு மறியாதேன் ஓதுவதெவ் வாறெனவும்
அன்றெனைநீ பித்தனென்ரு யதைமுதல்வைத் திசைபாடி
வன்றெண்ட னெனும்பெயரும் வையமிசைப் பெறுகென்ருர். 76

### கலி விருத்தம்

இத்தாரணி முழுதேத்திடு மிறையோனிது புகலப்
பித்தாபிறை சூடியெனும் பெரிதாந்திருப் பதிகம்
மெய்த்தாயினு மினியானையவ் வியன்நாவலர் பெருமான்
எத்தேயமும் நனியுய்ந்திட வெடுத்தேயிசைத் தனனுல், 77

நமக்கர்ச்சனை பாட்டாகலின் நம்நற்புக ழெல்லாம்
இமசேதுவின் பரியந்தமு மெடுத்தோதுக வென்ருர்
உமைகாதல னதுகூறிட வோங்குந்தமிழ் விரகர்
அமலன்றிரு வடிப்பூசையை யார்வத்துடன் புரிந்தார். 78

திருமாமணந் தவறுற்றபின் தெரிவைமண மகனை
யிருபோதினுந் துதித்தேகதி யெளிதாம்வகை பெற்ருள்
பெருமானருள் பெறுநாவலர் பிரியாவிடை கொண்டே
திருநாவலூர் பெருமான்றனைச் சென்றேதுதித் தனரால். 79

அங்கப்பதி கம்பாடிப்பின் துறையூர்தனை யணுகிப்
பொங்குந்தவ நெறிபெற்றபின் புலிசைப்பதி பாடித்
தங்காததி கையிற்சித்த வடத்துட்புகுந் தோர்பால்
செங்கைத்தலை வைத்தேபடுத் திருந்தார்சிவ னடியார். 80

### அறுசீர்க் கழிநேடிலடி யாசிரிய விருத்தம்

புற்செதுக்கிக் கைத்தொண்டும் புகழ்பாடி வாய்த்தொண்டும்
புரிந்தோ ரான
சற்சைவ வாகீசர் சார்ந்தபதி தனைமிதிக்கத்
தரியா ராகி

நற்சித்த வடமடத்தில் நாவலூ ரார்துயில
நம்பன் னானுந்
தற்செயலாய் நீட்டுதல்போல் விருத்தனாய்த் தன்னடியைத்
தலைமேல் வைத்தார். 81

அருகொருசார் படுத்திருந்தே யடிக்கடிக்கால் தலைமீதே
யழுந்த வைக்கும்
பெருமறையீர் யாரைநீர் பேசுமெனு மடியாரைப்
பெம்மா னோக்கி
வருமெனைநீர் அறியீரோ வெனவுரைத்து மறைந்திட்டான்
வள்ள லென்றே
திருவதிகைத் தலம்புகுந்து நம்பியுமே திருப்பதிகஞ்
செப்பி னாரால். 82

திருமாணிக் குழியடைந்து தினைநகரைத் தெரிசித்துத்
தில்லை சென்று
பெருமானை யடிவணங்கிப் பிரமபுரம் வலங்கொண்டு
பின்ன ராரூர்
வருவாயென் றழைத்தமையால் கோலக்காப் புன்கூரும்
வணங்கித் தொண்டர்
அருளாடு துறையம்பர் புகலூர்சென் றாரூரை
யடைந்தா ரன்றே. 83

ஆரூரி லுளவடியார் தமையனுப்பி நம்பிதனை
யழைக்கச் செய்து
சீருருந் திருவடியி லவர்பணிய முகநோக்கிச்
செல்வ நின்னை
நாருருந் தோழனென நாம்கொண்டோம் ஆகையினால்
நாளு மேநீ
தாருரும் மணக்கோலந் தன்னுடனே யிருக்கவென்றான்
தம்பி ரானே. 84

எம்தம்பி ரான்தோழன் எனநாவ லூராரு
மினிதி ருந்தார்
கொம்பனைய பரவைதனைத் தான்கண்டு மணஞ்செய்து
கொடுக்க வென்றே
நம்பனடி தனைப்பரவி யவர்பணிக்க நங்கைதனை
நம்பி வேட்டு
இம்பருள சுகந்துய்த்தே யிறைவழிபா டும்புரிந்தே
யிருந்தா ரன்றே. 85



தொண்டர்கள்தம் புகழ்விளங்கத் திருத்தொண்டத் தொகைபாடித்
தோழர் தாமும்
குண்டையூர் கிழாரவர்தம் பொதிநெல்லுங் கொணர்வித்துக்
கோதை வேண்ட
அண்டர்நா யகனருளாற் செங்கல்லை யாடகப்பொன்
னாகச் செய்தே
எண்டிசையுந் தமிழ்பாடிப் பொன்பெற்று முதுகுன்ற
மெய்தி னாரால். 86

அப்பதிவா ழரனளித்த செம்பொன்னை யாற்றிலிட்டே
யாரூ ருள்ள
திப்பியவா வியிலெடுத்துத் தெரிவைதனக் களித்ததற்பின்
திகழா ரூரன்
செப்புதமிழ் நாடெல்லாந் தெரிசித்து வடநாடு
செலவி ரும்பி
யொப்புமையில் காளத்தி மலைகண்டே யொற்றியூ
ருற்றா ரன்றே. 87

அங்குச்சங் கிலியென்னு மரிவைதனைக் கண்ணுற்றே
யரனைப் பாடித்
தங்குமகிழ் மரத்தின்கீழ்ச் சபதஞ்செய் தேமணந்து
தைய லோடு
சங்கையிலாச் சுகந்துய்த்துஞ் சங்கிலியை விட்டகன்ற
தன்மை யாலே
துங்கவிரு கண்ணிழந்து கோல்பெற்றுக் காஞ்சிநகர்
தொழச்சென் றாரால். 88

ஏகம்பர் திருவருளா லிடக்கண்மட் டும்பெற்றே
யேகி நம்பி
தேகமெலி வுற்றிடவே திருவாரூர் சென்றணைந்தார்
சிவனை வேண்டிப்
போகியகண் ணும்பெற்றுப் பரவைதன்னூ டல்தவிர்க்கப்
புராரி தன்னை
ஏகிடுவண் ணஞ்செய்தே யிருவருமே யின்பத்து
ளிணைந்து வாழ்ந்தார். 89

ஏயர்கோ னவர்செயலைக் கேட்டுவெறுப் புற்றமையை
யெங்கோ னெண்ணித்
தூயவந்த விருவருமே நட்பாக வருள்செய்தார்
தொங்கன் மாலை

மேயமலை நாடாளுஞ் சேரலர்கோன் வேட்கையுடன்
　　ஆரூர் மேவி
நாயகன்றன் தொண்டரிடம் நட்புரிமை பூண்டிருந்தார்
　　நவையொன் றில்லார். 90

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சேரமான் பெருமாள் நாயனு ராங்குச்
　　சில்பகல் தங்கியே சென்றூர்
தாரணி செல்வச் சுந்தரர் தாமுந்
　　தலம்பல சென்றுமே பாடி
வாரமாய்ப் பெற்ற பொருள்களை யெல்லாம்
　　வழிபறிப் போர்கவர்ந் தேக
காரணி கண்ட ரப்பொரு ளெல்லாங்
　　கவிசொலக் கேட்டளித் தனரால். 91

மீட்டும்வன் றொண்டர் புக்கொளி யூரை
　　விரும்பிச்சென் றிருக்கையி லேயோர்
வீட்டிலே யிருந்து மங்கல வொலியும்
　　வேறொரு வீட்டிலே யிருந்து
வாட்டமுற் றிரங்கு மொலியையும் கேட்டு
　　வகையுணர்ந் திடங்கரா விறந்த
ஈட்டரும் புதல்வன் றன்னையும் மீட்டே
　　யின்றவர் களிக்கச்செய் தனரால். 92

பன்னெடு நாண்முன் முதலையுண் டிறந்த
　　பாலனைப் பரமன்ற னருளால்
இந்நெடு நாளி லெழுப்பியே யிந்தார்
　　ஈசன்ற னடியரென் பதனை
மன்னடு சேரர் கேட்டுமே வந்து
　　மதகரி மிசையவ ரேற்றித்
தந்நெடு நகருக் கழைத்துமே சென்று
　　சிலபகல் தங்கிடச் செய்தார். 93

அங்கு நின்றகன்றே யிருவருங் கூடி
　　யரனமர் பதிகளை வணங்கித்
துங்கமா மகோதை யதனிடை வைகத்
　　துரிசறு சேரரு மொருநாள்



பொங்குநீர் கொண்டு மஞ்சன மாடு
　　போதினில் வன்றொண்டர் தாமும்
அங்கணர் வதியுந் திருவஞ்சைக் களத்தை
　　யடைந்துமே துதிசெய லானார். 94

புவிமனை வாழ்க்கை வெறுத்தன னென்றே
　　புகன்றிடு சுந்தரர் தமக்கு
செவியணி குழையான் திருவருள் புரியத்
　　தேவர்கள் வெள்ளையா னையின்மேல்
கவினுரை யேற்றிக் கயிலைசெல் செயலைச்
　　சேரருங் கருத்தினு லுணர்ந்தே
திவியவெண் புரவி யதன்மிசை யேறித்
　　திருமறை யோதிச்சென் றடைந்தார். 95

இருவருங் கயிலை செல்வதை யுணர்ந்தே
　　ஔவையு மிணைந்துடன் செல்லச்
சுருசுருப் புடனே கணபதி பூசை
　　தொடங்கிடச் சுருதிமுன் னவனும்
வெருவுறே லுன்னை யவர்கண்முன் விடுப்போம்
　　என்றுமே விளம்பிப்பின் றனது
பெரும்புழைக் கையா லெடுத்துமே கயிலைப்
　　பேரருள் மலையிடை யுய்த்தார். 96

மூவருங் கயிலை மலைதனை யடைந்தே
　　முத்தமிழ் மாலைகள் புனைந்தார்
தேவர்தந் தேவன் திருச்செவி யாரக்
　　கேட்டனன் திருவெணெய்ப் பதியில்
ஆவலோ டணுகி யாளெனக் கொண்ட
　　ஆலால சுந்தரர் தம்மை
ஏவல்செய் யணுக்கத் தொண்டர்தம் பணியை
　　ஏற்கவென் றருள் புரிந்தனனே. 97

மற்றவர் தமக்கும் ஏற்றநற் பதவி
　　யளித்துமே மாதுபங் காளன்
பற்றுடன் புவியில் வதிபவ ரெனினும்
　　பாவையர் நசையுள ரெனினும்
முற்றிய பத்தி யுடன்நமைத் துதிக்கும்
　　மூதறி வுடையவ ரென்னின்
இற்றை நாளவரு மெம்முடன் வதியும்
　　பேற்றினை யெய்துவ ரென்றான். 98

வெண்ணெயம் பதியில் வாழ்வதே நமக்கு
அளவிலா விருப்பமா கையினல்
உண்ணிறை யன்போ டப்பதி யணுகி
யுமையுடன் நமைவணங் கிடுவோர்
எண்ணிய வெண்ண நிறைவுறப் பெற்றே
யிறுதியில் நம்திரு வடியை
நண்ணியே யின்ப முறுவர்க ளென்று
நவின்றனன் நாரிபங் காளன். 99

வல்வினைத் தொடக்கால் புவிமிசைப் பிறந்தே
வள்ளலை வதுவைபூண் டிட்ட
அல்குறு பரவை சங்கிலி யாரும்
அநிந்திதை கமலினி யாகித்
தொல்வகை போல வுமைபணி யேற்ருர்
துகளறு மாதவ ரோடு
பல்லுல கேத்த வுமையுடன் மகிழ்ந்தே
பரமனும் வீற்றிருந் தனனல். 100

ஆலாலசுந்தரரை யாட்கொண்ட படலம் முற்றுப்பெற்றது.

• ஆக செய்யுள் 501.

பதின்மூன்ருவது

# சடையப்ப வள்ளல் சரணடைந்த படலம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கண்க ளிரண்டுஞ் சிவபெருமான் கருணை வடிவைக் கண்டிடவும்
திண்மை யுடைய செவியிரண்டுந் திவ்ய சரிதம் கேட்டிடவும்
பண்செய் வாயால் திருப்புகழைப் பாடிப் பாடி வணங்கிடவும்
வெண்ணை அடையப் பெற்ருரே வீட்டின் இன்பம் உற்ருரே. 1

என்றுங் குறையா வளஞ்சுரக்கும் ஏரும் வயலு முடையோராய்க்
கன்றை யுடைய கறவைகளால் கனகப் பணியால் குறைவிலராய்
ஒன்றி யணுகு வோர்க்கெல்லாம் உணவும் உபகா ரமும்புரியும்
வென்றி வேளாண் குடிநிறைந்து விளங்கும் வெண்ணெய்
மாநகரம். 2

அந்த நகரில் வருவிருந்தை யன்பாய் முகம னுடனழைத்தே
புந்தி மகிழ வுணவளித்துப் பொருளும் உதவி வருவிருந்தை
எந்தத் திசையும் நோக்கி நிற்கும் ஏவலுடையார் காங்கேயன்
மைந்தர் தருப்போல் சடையப்ப வள்ளல் என்பார்
வாழ்ந்திருந்தார் 3

இன்னி யங்கள் கறங்கிடவே யிசைபா டிடுநற் பாணர்க்கும்
முன்னைத் தமிழால் கவிபாடும் முதிர்ந்த புலமை யுடையோர்க்கும்
மன்னர் அறிஞர் புடைசூழ மகிழ்ந்து கேட்டுப் பொருளளித்துப்
பின்னு மவரை யூக்குவிக்கும் பெருமை யுடையா ரவரம்மா 4

பள்ளப் பழனஞ் சுரக்கின்ற பலவா கியநற் பொருளையெலாம்
அள்ளி யள்ளி யிரவலர்க்கும் அணுகும் புலவோர் குழாங்கட்கும்
உள்ள முவக்க வரையாது உதவல் கண்டே யுலகிலுளோர்
வள்ள லெனவே யழைத்திட்டார் அதுவே பெயராய் வழங்கியதே

பம்புஞ் செல்வ மெலாங்கொண்டு பலர்க்கு முதவி புரிந்திடுநாள்
கம்பம் என்னும் நாட்டிருந்து கைம்பெண்ணொருத்திமைந்தனுடன்
எம்பர் செல்வ தென்றுணராள் ஏகிச் சடையான் றனைக்கண்டே
இம்பர்க் களைக ணில்லாதேன் எனைக்காத்தல்நின்கடனென்ருள் 6

தஞ்சம் புகுந்த வம்மாதைத் தாம்காத் திடவே யுளத்துன்னி
அஞ்சேல் நின்னை யுடன்பிறந்த வம்மை யெனவே காத்திடுவேன்
துஞ்சு மளவுந் துயர்விடுத்துத் துணையா யிங்க
ணிருத்தியென்றான்
நெஞ்சிற் றயைகொண் டெவருக்கும் நிலைத்த வுதவி புரிவோனே.

கல்வி செல்வ முடன்பிறந்தும் களைக ணின்றித் தவித்திட்ட
மெல்லி நல்லாள் சடையப்பன் வீட்டின் பொறுப்பை
யேற்றிட்டாள்
செல்வன் கல்வி பயின்றிட்டான் சேயுந் தாயுந் தாம்பிறந்த
இல்லம் போலக் குறைவின்றி யிருந்து வாழ்ந்தா ரம்மனைக்கண், 8

அந்த மனையின் பசுங்கன்றொன் றகப்படாமல் மறைந்ததனால்
வந்த சிறுவ னதைத்தேடி மருங்கு சென்றான் வழியின்கண்
விந்தைத் தனிகண் டேதொழுதான் விளங்கப் புலமை
யருள்சுரந்து
சிந்து கன்றுந் தேவிதரச் சிறுவன் பெற்று மீண்டனனே. 9

வேற்றா ராரை யவரூரின் பெயரா லெவரும் விளிப்பது போல்
ஆற்றல் சிறுவன் கம்பநா டதனிற் பிறந்த தனைவோர்க்குந்
தோற்றக் கம்ப னெனவழைத்தார் துயர்தீர்ந் தவனு மனைவோரும்
போற்றக் கல்வி பயின்றிட்டே புலவ னெனப்பேர் பெற்றனனே.

சிறந்த மணிகள் அணிகலனுள் சேர்ந்தே சிறப்புப் பெறுவது
நிறைந்த கல்வி கைவந்த கம்ப நாடன் றிருபரவை [போல்
யுறைந்தே யேற்ற முறும்வண்ணம் உறையூர் நாடிச் சோழன்பால்
அறைந்தான் தன்னைக் காத்துவரும் அண்ணல் சிறப்பை
யறிவுறவே. 11

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

குடைகின்ற கயத்திலுள வரால்கள் முட்டக்
கோட்டெருமைக் கன்றென்றே குறித்து வீட்டில்
அடைவரையும் பால்சொரியும் வெண்ணெய் நல்லூர்
அதனிலுளோன் அஞ்சலென் பேன்ப டாத
கடையுடையான் ஈகையையே கடனுக் கொண்டோன்
கருணையுடைச் சடையப்ப னென்று கூறும்
உடையான்றன் புகழ்தனக்கோ ரெல்லை யில்லை
யுரைத்திடவு மொருநாவா லொண்ணா தையா. 12



வருகின்ற புலவோர்க்கும் இசைவா ணர்க்கும்
வயவேந்த ரெனவுள்ள வரிசை யாவுந்
தருகின்ற கொடையாளன் இரவ லாளர்
தந்தவவன் பொருளாலே தனிக ரானார்
பருகுகின்ற விருந்தினர்கை கழுவு நீரே
பலநதிக ளாயோடிப் பரவு மென்றால்
செருநின்ற நராதிபர்கள் செல்வந் தானுஞ்
செப்பிலவன் செல்வமதற் கீடா காதே. 13

அத்தகையோ ளெனைவளர்த்துக் கல்வி யிந்தான்
அதனாலே யான்மிகுந்த புலமை பெற்றேன்
வித்தைதனில் யானடைந்த மேன்மை தன்னை
வேந்தரவை தனையடைந்து விளக்க வேண்டி
இத்தரையி லிராசனெனும் பெயரைப் பூண்ட
ஏந்தலே நின்னவையை நாடி வந்தேன்
சித்தமகிழ்ந் தெனையேற்றுச் சிறப்புச் செய்யின்
தெவிட்டாத கவியமுதம் தெரிப்பே னென்றான். 14

கம்பன்றன் வாய்மைதனைக் காதாற் கேட்ட
காவலனா கியராச ராச சோழன்
இம்பரிலெம் மவையிடைநீ யிருக்க வெண்ணின்
எதனாலும் குறைவின்றி யேற்றுக் காப்பேன்
எம்பருமே செந்தமிழி னினிமை தன்னை
எளிதுணர்த்தின் எமக்குமோ ரிசைய தாகும்
உம்பர்பிரான் றிருவருளு முடன்சேர்ந் திட்டால்
உலகினிலே யெமக்கிணைவே றொருவ ரில்லை. 15

என்றுரைத்த மொழிகேட்ட கம்ப நாடன்
இதுவுமென்றன் பேறென்றே யிதயத் தெண்ணி
அன்றுமுதல் சோழன்ற னவைக்க ளத்துள்
ஆத்தான கவியெனும்பே ரமையப் பெற்றான்
தொன்றுதொட்டே ஆத்தான கவியா யுள்ள
றுகளிலொட்டக் கூத்தருக்குந் துணைவ னானான்
ஒன்றியொரு முகத்திலுள விருகண்போல
வொருமையுட னிருவருமே யுவந்தி ருந்தார். 16

இவ்வாறு பற்பலநா ளினிது செல்ல
இறைவரிலு மிகுசெல்வ முடையா னென்றும்
எவ்வெவர்க ளெவ்வெவற்றை விரும்பி னாலும்
இன்சொல்லோ டவையெல்லா மீய வல்ல

செவ்வியான் வெண்ணெய்நல்லூர்ச் சடைய னென்றும்
செப்புமொழி கேட்டதன்பின் சென்னியுள்ளம்
ஒளவியத்தாற் கதுவப்பெற் றவற்றைக் காண
அமைச்சரையு மொற்றரையு மனுப்பி னானல். 17

சென்றிட்ட வொற்றர்களுந் திரும்பி வந்தார்
செப்பியவை யுண்மையெனத் தெரிந்து கொண்டான்
கன்றியதோ ரழுக்காறு கதுவப் பின்னுங்
கவிவாணர் தமையனுப்பிக் காணச் செய்தான்
வென்றுதமிழ்ப் புலவர்களை வெண்ணெய் நல்லூர்
வேளாள னுஞ்சடையன் விருந்தா யேற்று
நன்றியுடன் முகமனுரைத் திருக்கச் செய்து
நறுஞ்சாலி சேமிக்க நாடிச் சென்றான். 18

செந்நெல்லைச் சேர் நிரப்புஞ் சிலத ரானோர்
சேர்க்குங்கால் வழியினிடைச் சிதற லானார்
அந்நெல்லைக் கண்ணுற்ற வள்ளல் தாமும்
அவற்றையெல்லாஞ் செங்கையாற் பொறுக்கிச்
சேர்த்தார்
இந்நிலையைக் கண்ணுற்ற இசைப்பா வாணர்
இறைந்த நெல்லைப் பொறுக்குகின்ற விவர்தா மோநம்
தந்நிலையை யறிந்துபொருள் தருவா ரென்று
தங்களுக்குள் தனியிருந்து தருக்க மிட்டார். 19

இன்னவண்ணம் ஏளனமாய் இயம்பும் வாய்மை
ஏவலரா லறிந்திட்ட வேந்தல் தாமும்
அன்னமுண்ண வவர்தம்மை யழைத்து வந்தே
ஆடகப்பொன் னிலைபரப்பி யவற்றி னுள்ளே
மின்னுநவ மணிக்குவைகள் நிறையப் பெய்து
மேதையீர்! உட்கொள்ள வேண்டு மென்றார்
என்னவிப ரீதமென்றே புலவ ரெல்லாம்
எண்ணியெங்கள் பிழைபொறுக்க வேண்டு மென்றார்

கடலுலக மொருகுடைக்கீழ் ஆளும் பேறும்
கல்வியினிற் கவிஞரென விளங்கும் பேறும்
அடல்மிகவும் பெற்றனமென் றறையும் பேறும்
அரியசெல்வ மிகப்பெற்றே வாழும் பேறும்



உடலின்றி யாவதுண்டோ வுரைப்பீ ரந்த
உடல்வளர்க்க வுணவாக்குஞ் செந்நெல் தன்னை
விடவுலகில் வேறுபொரு ளுண்டோ வுந்தம்
வித்தையெல்லாம் உணவின்றி விளங்கு மோதான்,

கோடிவித்தை யொருவன்கற் றிருந்திட் டாலுங்
குட்சியின்பா தையைவிலக்கக் கூடு மோதான்
நாடிசில நாளுணவை யேற்றுக் கொள்ள
நம்வயிறு இடந்தருமோ நாவா யேறி
ஓடியயல் நாடுசென்றும் உழைப்ப தெல்லாம்
ஒருசாண்கொள் ளுதரமதை யோம்ப வன்றோ
தேடிச்செந்நெல் சேர்ப்பதுவு மிழிவ தாமோ
செப்பிடுவீ ரெனவுரைத்தான் செல்வச் சீமான். 22

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இன்ன வண்ண மியம்புமொழி யாவுங் கேட்ட பாவாணர்
அன்னம் பிரம மென்றுமறை யறையும் வாய்மைஅறிந்து மெங்கள்
சின்ன மதியா லிகழ்ந்திட்டோம் செல்வா பொறுக்க
வேண்டுமென்றார்
அன்னவாயி னிவற்றை யெல்லா மகற்றி வெளியி
லெறியுமென்றான். 23

வெண்ணெய்ச் சடைய னீதுரைக்க வேலையாட்கள் குறுகிவந்தே
உண்ண வைத்த அரதனங்கள் ஒன்றும் விடாமல் புறத்தெறிந்து
நண்ணி வாழை யிலைபரப்பி நறுநெய் பழம்பக் கணங்களுடன்
வண்ண வமுதும் படைத்திட்டார் வயிறு நிரம்ப வுண்டனரே.24

புலவர் உண்டு கையலம்பிப் புறத்தே யெறிந்த மணிக்குவைகள்
பலவும் பொறுக்கித் தத்தமக்குள் பங்கொவ்வா மலுண்டவெச்சில்
இலைக்குப் பூச லிடுஞ்சுணங்க னென்ன வாது புரிபவரை
விலக்கி வேண்டும் பொருளீந்தே விடையு மீந்தான் விறற்
சடையன். 25

பின்னுஞ் சின்னாள் சென்றதற்பின் பிறநாடிருந்தே யொருவணிகன்
பொன்னும் மணியும் வைத்திழைத்த புதிய ஆடை கொடுவந்தான்
அன்ன உடையை வாங்குவதற் கதிகம் பொருளில் லாமையினால்
இன்ன ஆடை வேண்டுவதின் றென்றான் சோழன் ஏகினனே. 26

அந்த உடையை வெண்ணெய்நல்லூர்ச் சடையன் வாங்கி யணிந்துகொண்டான்
இந்தச் செய்தி வளவன்கேட் டெழுந்த வழுக்கா றதனலே
முந்தித் தன்பால் வருகவென முடுகித் தூதர் தமைவிடுத்தான்
வந்த தூதர் போகவிட்டுக் காலந் தாழ்த்து வந்தடைந்தான், 27

இழையா யிரம்பொன் பெறுமுடையை
யிடையிற் றரித்தே சடையப்பன்
விழைவோ டரசன் முன்சென்று
வேந்தே கவானிற் பருவதனல்
அழைத்துந் தாழ்த்தேன் பொறுக்கவென்ருன்
அரசன் சினந்தே யென்றன்பால்
பிழையும் புரிந்து பொய்மொழியும்
பேசல் தங்கட் கடாதென்ருன். 28

சிலந்தி குறங்கி லெழுந்துளதைச்
சென்னி யறியும் பொருட்டறிஞர்
கலந்த வவைமுன் சடையன்றன்
னுடையைக் கிழித்துக் காட்டினன்
மலர்ந்த முகங்கொண் டேசோழன்
வலிய நட்புக்கொள வெண்ணி
சலந்தந் திட்ட பெருங்குலத்தோய்
தம்மை யழைத்த தெனப்புகன்ருன். 29

கொண்ட நட்பிற் கறிகுறியாய்க்
கூட வருமா றழைத்திட்டான்
வண்டு முரலு நறுந்தாரான்
மகிழ்ந்து சேனை புடைசூழ
அண்டர் நாய கன்வதியும்
வெண்ணெய் நல்லூர் அடைந்திட்டான்
விண்டு வனத்தோன் அவர்க்கெல்லாம்
விருந்து பலநாள் புரிந்தனனே. 30

வெண்ணெய்ச் சடைய னில்லத்தில்
விருந்து பலநா ளருந்தியபின்
எண்ணி லாத நிலவளனும்
எடுக்கக் குறையா நவநிதியும்
கண்ணுற் கண்டு வியப்பெய்திக்
காந்துஞ் சோழன் விடைகொண்டான்
அண்ணல் தகுதிக் கேற்றவெலா
மளித்தே சடைய னனுப்பினனே. 31



ஒருநாட் சோழன் கம்பரையுங்
கூத்தர் தமையு மொருங்கழைத்துப்
பெருமை மிக்க புலவீர்காள்
பேர்வில் லிராமன் பெருங்கதையை
இருவீர் களுமே செந்தமிழா
லியற்று வீர்க ளென்றிரந்தான்
ஒருமை யுடனே யிருவோரும்
ஒத்துக் கொண்டு சென்றனரே. 32

அந்தக் கதையை யியற்றுவதற்
கநேக நாட்கண் முயன்றிட்டான்
எந்தக் கருத்துந் தெளிவுபெற
வெழுத வாரா மையினலே
சிந்தை கெட்டுக் கம்பனுமே
திருவெண் ணெய்நல் லூர்சென்று
தந்தை யனைய சடையப்பன்
றன்பால் அதனை மொழிந்தனனே. 33

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஐயுறே லென்றே கம்பன்றன் னுடனே
யருட்டுறைப் புகுந்துமே சடையன்
தையலோ டிருந்து கருணையே புரியுந்
தயாபரன் ருண்மிசைத் தாழ்ந்து
கையமர் நெல்லிக்கனியெனச் சரிதை
கழறுதற் கேற்றதோர் தெளிவை
ஐயனே! கம்பற் கருள்செயு மென்றே
யடியிணை தொழுதுவேண் டினரே. 34

எவ்வெவர் வேண்டும் விருப்பம தெல்லா
மெளிதினின் முற்றுறச் செய்யும்
நவ்விபா கனுமே யவர்கண்முன் ருேன்றி
நாமகள் கடாட்சமின் மையினல்
அவ்வகை மயக்கம் நேர்ந்துள ததற்கவ்
வம்மைதன் னடிபணிந் தேத்தித்
திவ்விய மாக நூலினை யியற்றுந்
திறமையைப் பெறுகவென் றுரைத்தான். 35

அத்தகு வரத்தைப் பெற்றபின் னவர்கள்
ஐயனே ஆண்மகப் பேறும்
இத்ததி தன்னி லெங்களுக் கருள
வேண்டுமென் றிரந்திட வீசன்
பத்தர்கள் விரும்பும் தகுதியை யுணர்ந்தே
பரிவுடன் ஆண்மகப் பேறு
நத்திய வண்ணம் பெறுவிரென் றிசைத்து
நாயகன் றிருவுருக் கரந்தான். 36

வரந்தனைப் பெற்று மீண்டபின் கம்பன்
வாணியின் றிருவருள் பெறவே
பரிந்தொரந் தாதி பான்மையிற் புனைந்தே
பாரதி திருவருள் பெற்றுப்
பரந்தபே ரறிவால் வான்மீகி யுரைத்த
பனுவலை யிரவெலாங் கேட்டு
விரிந்துள தான காப்பியந் தன்னை
விழைவுட னியற்றினன் மாதோ. 37

தெளிவுற வந்நூ லியற்றிட வீசன்
திருவருள் புரிந்தவத் தலத்தை
அளியுறத் தமது பாடலி லமைத்தும்
அதனுக்கோர் காரண ராக
ஒளிசெயுஞ் சடையன் புகழினை நூலி
லுரியநல் லிடங்களி லன்பர்
களிகொள வைத்தும் நூல்தனை முடித்தான்
கம்பநா டுடையகோ மகனே. 38

அண்ணலன் றளித்த வரமது பலித்தே
யவரவர் ஆண்மக வடைந்தார்
வெண்ணெய்வாழ் சடையன் காங்கேய னென்ன
விளங்கிடு நற்பெயர் தன்னை
வண்ண நன் மகவுக் களித்தனன் கம்பன்
மகிழ்ந்துமே தன்மகன் றனக்கிங்
குண்ணிறை வுடனே அம்பிகா பதியென்
றுரைத்துப்பின் விழாவயர் வித்தார். 39

தரங்கநீ ருலகில் இராமாவ தார
மென்றிடுந் தமிழ்ப்பெரு நூலை
அரங்கநா தன்றன் சந்நிதி யதனி
லரங்கினி லேற்றியே விரித்தான்



109990 MADRAS

கரங்குவித் துலகி லுள்ளவ ரெல்லாங்
கண்டுகேட் டுவகையின் மலர்ந்தார்
வரங்கிளர் கம்பன் வரிசையும் பெற்று
மன்னர்கள் மகிழவீற் றிருந்தான். 40

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இராமாவ தாரமென் றோதிடும் இதிகாச மாகிய நூலினைத்
தராதல முற்றும கிழ்ந்திடத் தந்திடு கம்பன்றன் மேதையும்
அராவணைத் தவனையா தரித்திடு மளியுடைச் சடையப்பன் மேன்மையும்
பராவிய தெங்கணும் பார்த்திபர் பார்த்திடச் சடையனை யழைத்தனர். 41

காவலர் விரும்பிய வண்ணமே கடிதினிற் சடையனுஞ் சென்றனன்
ஆவலோ டரசரைக் கண்டனன் அவர்களு மன்புட னேற்றனர்
பாவலன் றன்னையா தரித்திடு பான்மையுங் கூறிப்பு கழ்ந்தனர்
மேவலில் வங்கணம் பூண்டனர் வேந்தர்கள் நட்புமி குந்தவே. 42

அடிக்கடி யரசர்கள் வருவதும் அவர்களின் தகுதிகட் கேற்பவே
மிடுக்குடன் விருந்துகள் புரிவதும் மேதைகொள்புலவர்கட் கீவதும்
படிப்படி யாகவே யுயர்ந்தன பார்த்துமே வெள்கினர் பார்த்திபர்
துடித்திடு கண்ணேறு பட்டதோ தொல்பொருள் மிகச்செல வாயதே. 43

இயற்கையுஞ் சதிசெய லாயதா லெங்கணும் மழைவளஞ் சுருங்கின
செயத்தகு நென்முதல் விளைவுகள் செய்களிற் கருகியே தீய்ந்தன
வயல்களில் வளங்கள்கு றைந்தவால் வரகினை யுண்டுமே வாழ்ந் தனர்
அயலுள பிரசைகள் யாவர்க்கும் அன்னம்வ ழங்கினன்சடையனே.

உற்றதன் நிதிகளைக் கொண்டுமே யுணவுக்கு வேண்டுபல் பண்டமும்
பெற்றுவந் தேமக்கட் கீந்திடும் பேருப காரத்திற் றலைநின்றுன்
வற்றிடாச் செல்வமு மிவ்வழி வரவரக் குறைந்திட லாயினை
அற்றைய நிலையினுஞ் சடையப்பன் அன்னம்வ ழங்கலை மறந்திலன். 45

023:38.2192-TN
N64

நாவலர் எதிலர் ஞானியர் நண்ணிடு கின்றவர் பலருக்கும்
ஆவலாய்ப் பணிகளும் உண்டியும் அள்ளியே வழங்கிடு
தன்மையால்
காவலர் கண்டுவி யந்துமே கண்ணேறு பட்டதாற் சடையப்பன்
ஓவலில் லாப்பெருஞ் செல்வமும் ஒடுங்கிட வறுமைவந் துற்றதே.

பத்திக்கு வறுமையே துணையெனப் பண்ணவர் கூறிடு
வாய்மையை
நத்திய செல்வங்கு றைந்ததால் நண்ணுவோர்க் கென்செய்வ
தென்றுமே
சித்தங்க லங்கியே யேறுடைச் சேவகன் பத்தியில் மூழ்கினன்
உத்தமன் றன்னைச்சோ தித்திட வுற்றிடு காலமோ வோர்கிலேம்.

வறுமைநி லையினுஞ் செம்மையாய் வழங்கிடு வள்ளலைக் காணவே
சிறுமையில் வாழ்ந்தவோர் பாவலன் தேடியே யங்குவந்
துற்றனன்
உறுபுல வன்றனை யன்புடன் உபசரித் தில்லிரு ருத்தியே
மறுகிடைச் சென்றுமே யாங்கொரு மரஞ்செறி சோலையுட்
புக்கனன். 48

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சோலை யுட்புகு சடையப்ப வள்ளலும்
சோர்வு கொண்டம னத்தின னாகியே
காலை மாலையு மோய்வின்றி யாவர்க்கும்
கனக மும்பணி யும்பல நல்கினேம்
பாலை மாநிலம் போலுள வெம்மிடைப்
பரிந்து வந்திடு பாவலற் கீயவிவ்
வேலை மிக்கபொன் னின்மையி னென்செய்வேன்
வேத நாதனே யென்றுது தித்தனன். 49

நின்னைப் போற்றிடு வோர்கள்ம கிழ்ந்திட
நிறைந்த செல்வம ளித்தருள் நின்மலா
வுன்னை யன்றியே வேறெனக் கியாருளார்
உற்ற வேளையி லுதவிசெய் கின்றவர்
என்னை யித்ததி காத்தல் கடனென
எண்ணி யேதுதித் திட்டநம் வள்ளலும்
பின்னைத் தன்னுயிர் நீக்கிட வெண்ணியே
பெரிய புற்றொன் றில் கைதனை விட்டனன். 50



முதுமை யெய்தி யுயிர்விடும் போதினில்
மூச்சு வாங்கித் துயருறுங் கட்செவிக்
கதுவோ ராதர வாகவி ருந்ததால்
அரிய தன்துயர் நீக்கிட வெண்ணியே
பதும ரேகைகொள் கையிடைத் தன்திருப்
பதும ராகத்தை யுமிழ்ந்தும கிழ்ந்ததால்
புதுமை கண்டுதன் கையினை வாங்கியே
புராரி தன்றிரு வருளென வாழ்த்தினன். 51

அன்ன மாமணி கண்டக மகிழ்வுட
னடைந்த பாவலர்க் களித்திட வெண்ணியே
தன்ன கந்தனைக் குறுகுமுன் னேவலர்
சார்ந்து வேறொரு பாவலர் வந்துளார்
என்னக் கேட்டுமே யிருக்கச்செய் மின்களென்
றேவ லாளரை யனுப்பிப்பின் மீண்டும்போய்ப்
பின்னும் புற்றினிற் கையினை விட்டனன்
பிறகும் மணிகக்கிப் பிராணனை விட்டதே. 52

உயிர்வி டுந்தரு ணத்தினி லுள்ளவோர்
உரகத் தின்தலை யிற்கையை வைத்ததும்
செயிர்த்தல் விட்டது மணிகளைக் கக்கியே
சீவன் விட்டதும் சிவன்செய லென்றெணிக்
கயிலை நாயகன் றன்னைத்து தித்ததன்
காத்தி ரந்தனை யணிசெய்து கொண்டுபோய்
பயிர்வி ளைந்திடு தன்வயல் தன்னிடைப்
பரிவில் வைத்துச் சமாதிசெய் திட்டனன். 53

அணிசெய் மாமணி தன்னைய ளித்துப்பின்
னரிய தன்னுயிர் தன்னையும் விட்டிடும்
பணியின் வண்மையைப் பாருளோ ரறியவே
பண்ணை தன்னிற்ச மாதிசெய் வயலுக்கு
மணிகண் டன்சிவ னார்தாங்க லென்றுமே
வழங்க லாயினர் மாநில மாந்தர்கள்
துணிவு கொண்டுபின் சடையப்ப வள்ளலுந்
தோகை பாகனைத் துதித்தில்லம் மீண்டனன். 54

முன்னர்ப் பாண்டிய நாட்டிருந் தேவந்த
முதிய பாவலன் கண்டுக ளிக்கவும்
பின்னர்த் தொண்டைநன் னாட்டிருந் தேவந்து
பிறங்கு நாவலன் உண்மகிழ் கொள்ளவும்

மின்னு மாமணி யிரண்டையும் நல்கியே
 மேன்மை கொள்ளுப சாரமும் செய்தனன்
அன்ன மாணிக்கக் கற்களைப் பெற்றுமே
 யவர்கள் தங்களின் நாடடைந் தாரரோ. 55

நாட்டி லேவர்க்குங் கிடைப்பதற் கரியதாம்
 நாக ரத்தினம் ஜீவரத் தினமெனும்
மேட்டி மைதரு மணிபெற்ற புலவர்கள்
 மேவி தங்கள்நாட் டரசர்கள் தம்மிடைக்
காட்டி யம்மணி யைப்பெற்ற வகையையுங்
 கழறி னார்களக் காவல ரவர்கட்குத்
தாட்டி கம்பெறப் பொருள்களை நல்கியே
 தாங்க ளம்மணி தமைப்பெற்றுக் கொண்டனர். 56

மீன வன்னதை மீனாட்சி யம்மைக்கு
 மேன்மை மூக்குத்தி யாகச்செய் தணிவித்தான்
ஆனதொண்டை நாட் டரசனுங் காமாட்சி
 யம்மை மூக்கினுக் கணிசெய் தணிவித்தான்
ஞான வாரிதி யாகிய சத்திதம்
 நாசி தம்மிடை யடியர்கள் தெரிசிக்கப்
பானு போன்றொளி செய்வது கேட்டுமே
 பாரி லுள்ளோர் மகிழ்ச்சியுண் மூழ்கினர். 57

கலிநிலைத்துறை

கருவி மாமழை பொழிகில வெனமனங் கவன்று
சருவ மும்வடி வாகிய தயாபரன் றன்னை
மருவி யேசடை யப்பனும் வானவர் வணங்கும்
பெருமன் றாண்மிசை வீழ்ந்துமே யிவையிவை பேசும். 58

மூல காரண னாகிய முக்கணா போற்றி
யால முண்டுமே யமரருக் கருள்செய்தாய் போற்றி
பால னாகிய மார்க்கண்டன் பார்மிசை வாழக்
கால காலனைத் தோன்றிய கருணைவா ரிதியே. 59

இன்றும் இந்தவாழ் வதனையே துச்சமென் றெண்ணி
சென்று நாகம்வாழ் புற்றிடைச் செங்கையை விடுத்தும்
பொன்றி டாவகை யருள்செய்தே பொலன்மணி யளித்தாய்
என்றும் நின்செய லன்றியார் என்செய வல்லார். 60



வானம் நின்றுமே பொய்த்திடில் மாநகர் புரியும்
தானம் என்றுமே வழங்குதல் தடைப்படு மென்றே
ஞான மேமிகு நாவலர் நவிலுரை போன்று
தீனர் கட்கறம் புரிந்திடத் தியங்குகின் றனனால். 61

ஐய நீயருள் செல்வத்தை யடியர்கட் களித்தே
துய்ய நின்புகழ் வழுத்தியே துயர்துடைத் திருந்தேன்
வைய மீதினில் வான்மழை வழங்கிலா மையினால்
தையல் பாகயாம் படுதுயர் சகிப்பதற் கரிதால். 62

வயல்கள் காய்ந்துமே வளர்பைங்கூழ் வளர்ந்திடா மையினால்
செயத்த குஞ்செயல் செய்திடத் திறமையற் றுள்ளோம்
பெயல்த விர்ந்திடிற் பேதையே மெங்ஙனம் வாழ்வேம்
உயல்த னக்குநின் னருளலா லொருவழி யுண்டோ. 63

முகில்கள் பெய்திட விலையெனின் முன்னவ விந்த
வகிலம் முற்றுமே யழிந்திடு மாகையி னாலிம்
மகித லந்தனின் மழைபொழி வித்துமே யெமரை
மகிழச் செய்திடல் கடனென வணங்கி நின்றனனால். 64

என்று வள்ளலு மிரந்திடு மின்மொழி கேட்டுக்
கொன்றை வேணியன் வெளிவந்து குறுகிநீ நம்மை
நன்று போற்றினை யாதலின் நாமது தவிர்ப்போம்
கன்றி டேலென வின்னன கழறுவ தானான். 65

இரவி யோடுசேய் முன்னரு மிலங்கொளி வெள்ளி
பரவிப் பின்னரும் நடந்திடிற் பன்னிரண் டியாண்டு
கரவு செய்திடும் வானெனும் கணிதநூன் முறையே
யிரவி யேமழை பொழிகில விதுவுமோர் வியப்போ. 66

உலகம் போற்றிட அறம்புரிந் துண்மையில் வானம்
நலஞ்செய் யாமையால் வருந்துநீ நாளுமே யின்புற்
றலகி லாவுயிர் காத்திட வருள்புரிந் தனமால்
கலங்கி டேலென வுரைத்தனன் கருணைவா ரிதியே. 67

மங்கை நாயக னிவ்வுரை வழங்குமுன் வானம்
பொங்கி யார்த்துமே பொழியவத் தாரைக ளான
எங்கு முள்ளன வாகிய விலஞ்சியுஞ் செய்யுந்
தங்கி யேமிகுந் தோடியே சலதிபுக் கனவால். 68

அண்ட கோடிகள் யாவையு மளித்தரு ளமலன்
விண்ட வாய்மைபோல் வயலெலாம் விளைந்திட லான
கண்ட மாந்தர்கள் களிப்பினின் மூழ்கிட லானுர்
வண்டர் வான்புகழ் கூறியே வாழ்த்தினர் மாதோ. 69

வான நாயகன் மீளவும் வழுத்துவான் நினக்கே
ஊன மற்றவோர் பெண்மக வுதிப்பள்மற் றவள்பால்
ஞான நன்னெறி விளக்குமோர் நம்பிவந் துதிப்பான்
ஆன நின்மர பகிலத்தி லமர்ந்துபல் கிடுமால். 70

அன்ன நன்மொழி யண்ணலு மறைந்திட
பன்னு தற்கரு மகிழ்வொடு பரமனை யேத்தி
முன்ன வன்மலர்ப் பதந்தனின் முறைமுறை வணங்கி
இன்ன லின்றியே யறம்புரிந் தினிதுவாழ்ந் திருந்தான். 71

பழமை யாகிய வேதங்கண் முறையிடு பரமன்
தழைய வேமழை தந்ததைத் தரணியோ ருணர
மழையம் பட்டெனு மொருநகர் வளமுற வகுத்தே
விழைவு டன்னதின் மக்களும் மேவிவாழ்ந் தனரால். 72

சங்கும் முத்திடு கழைகளுஞ் சாலியும் விளைந்து
எங்கு மேமகிழ் வெய்திய தெவருமே யுணரப்
பொங்கு வெண்ணெய்நல் லூரெனப் புகழ்ந்திடலானுர்
துங்க வப்பெயர் தானுமே துலங்கிய தன்றே. 73

தொன்மை போலப்பல் வளங்களுந் தோன்றின வந்நாள்
நன்மை யேபுரி சடையப்பன் நாயகி கருவுற்
றன்னம் போலவோர் அரிவையை யீன்றன ளவள்பேர்
மன்னு மங்கள நாயகி யென்றனர் மறையோர். 74

வள்ளல் தானுமே வருபவர் தமக்கெலாம் வழங்கும்
உள்ள மோடுசெய் பத்திகண் டுமையொரு பாகன்
விள்ளு தற்கரி தாயதன் வியன்பத மளித்தான்
துள்ளி யேயந்த வின்பத்துள் துதைந்துவாழ்ந் தனனுல். 75

சடையப்பவள்ளல் சரணடைந்த படலம் முற்றுப்பெற்றது.

ஆகூ செய்யுள் 576.



ஸ்ரீ மெய்கண்டார்

பதினான்காவது

# மெய்கண்ட தேவர் மெய்ப்பொருளுணர்ந்த படலம்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அருங்குடிலை யெனும் வயலுள் அருள்வித்திட்டே
யாரணமாந் தருவளர்த்தா ரம்ம ரந்தான்
தரும்பயனை நுகர்ந்திடவே தான்சென் றோர்கள்
தழைதளிர்கள் அரும்புமலர் பிஞ்சு காயே
பெரும்பயனாக் கொண்டாறு சமய மானார்
பிறங்குமுச்சிப் பழுத்தபழச் சாறே யாகும்
தெருளுடைய சித்தாந்தத் தேனை யீந்த
சிவபெருமான் சேவடியே சிரமேற் கொள்வாம். 1

வெண்ணைய்வாழ் சடையப்ப வள்ளல் தானும்
விரும்பியறம் பலபுரிந்தே விமலன் பாதம்
நண்ணியபின் காங்கேய பூப னென்றே
நவில்புதல்வன் உடன்பிறந்த நங்கை தன்னைப்
பெண்ணாக டம்மென்னும் பேரூர் தன்னில்
பிறங்குமச்சு தக்களப் பாள ரென்னும்
புண்ணியவான் றனக்குமணம் புரிவித் திட்டார்
புவிதனிலே தம்பதிகள் பொருந்தி வாழ்ந்தார். 2

அச்சுதக்க ளப்பாளர் மனைவி யோடும்
அறம்புரிந்தே யில்லறத்தில் அமர்ந்து வாழ்ந்தும்
உச்சிமோந் தகங்குளிரப் பிள்ளைப் பேறே
ஒன்றில்லாக் குறையதனா லுள்ளம் வாடி
விச்சையரு ணந்தியெனுங் குருவின் பாதம்
வீழ்ந்திறைஞ்சி மகக்குறையை விரித்துக் கூற
நச்சியவர் திருமுறையிற் கயிறு சாத்தி
நாடியுற்ற கவிகண்டு நவில்வ தானார். 3

திருவெண்கா டெனத்திகழுந் தலத்திற் கேகித்
தினமும்முக் குளநீரிற் றீர்த்த மாடிப்
பெரும்பிரம வித்தைநா யகியா ரோடு
பிரியாத சுவேதவனப் பெருமான் பாதம்

இருந்துபல நாள்வணங்கிப் பிள்ளைப் பேற்றை
யீந்தருள்வ னப்பெருமா னென்று கூற
அருங்குரவ னுரைத்தபடி யாங்குச் சென்றே
யனுதினமூழ் கித்துதித்தே யமர்ந்திட் டாரால். 4

ஞானசம் பந்தருரை பழுது றாமல்
நம்பனுமே யருள்புரிந்தான் நங்கை தானும்
ஈனமுறு பரசமய மிழிந்து தாழ
ஏற்றமுறு சிவசமய மினிதி னோங்க
ஊனமிலா ஞானத்தின் உருவே யென்ன
ஒருகுழவி தனைப்பயந்தாள் உவகை மிஞ்சத்
தானமளித் தேபலர்க்கும் விழாக்கொண் டாடித்
தம்பதிகள் தமதில்ல மடைந்தா ரன்றே. 5

வறுமையுளான் போற்றுமொரு வயலைப் போல
வாஞ்சையுடன் குழவிதனை வளர்க்க லானார்
சிறுமதலை வளர்பிறைபோல் செழுமை யுற்ற
சென்றனபல் மாதங்கள் சென்ற பின்னும்
முறுவல்செய் வதுமின்றி வாய்தி றந்து
முத்தமிடு வோர்மகிழக் குதலை யில்லை
பெறும்பேறு பெற்றும்நாம் வாய்பே சாத
பிள்ளையைப்பெற் றோமென்றே பேதுற் றாரால். 6

ஓராண்டு கழிந்ததற்பின் சடங் கியற்ற
உற்றவர்மற் றவர்க்கெல்லா மோலை போக்கி
ஏராள மாப்பொருளைச் செலவு செய்தே
யின்பமுடன் விழாவைக்கொண் டாடி னார்கள்
தாராள மாகப்பல் தானஞ்செய் தார்
தங்கைமகன் செயற்கிரங்கித் தயங்கி நின்ற
சீராரும் வெண்ணெய் நல்லூர் மாது லன்றான்
செல்வனையு முடனழைத்துக் கொடுசென் றாரால். 7

வாய்பேசாக் குழவிதனை யழைத்து வந்தே
வளர்த்துவருங் காங்கேய பூபன் றானுந்
தாய்வருந்தும் வருத்தத்தைச் சகியா னாகித்
தண்புனலும் வெண்மதியுந் தலையிற் சூடிப்
பாய்புலித்தோ லும்முடுத்த அரன்கோயிற்குப்
பாலனையும் உடன்கொடுபோய்ப் பணியச் செய்து
சேய்தந்த கருணையனே வாய்தி றக்கச்
செய்வதுநின் பெருங்கருணை யென்று தாழ்ந்தான், 8



அருட்டுறையென் றுரைசெயுமவ் வால யத்துள்
அடைக்கலமா யரனடியி லமர்ந்திருந்தான்
பெருங்கருணை யுடையபிரான் கனவிற் றோன்றிப்
பேதுறேல் நின்மருகன் பேசுங் காலம்
அருகினிலே யுளதாகு மவனுக் கென்றன்
அத்திமுகன் திருவருளு மமைவ தாகும்
வருஞான முடனவனும் வாழ்வா னென்றே
வரமளித்தே யெம்பெருமான் மறைந்தா னன்றே. 9

கனவினிலே சிவபெருமா னருளிச் செய்த
கருணைவரம் விரைவிற்கை கூடு மென்றே
தினந்தினமு மவனடியே பரவி வாழ்ந்தார்
சிறுவனுமே வீதிவிளை யாடும் போது
இனமுடனே பரஞ்சோதி முனிவர் வந்தே
இளைஞனுக்கங் குபதேச மீந்து சென்றார்
மனனஞ்செய் ததன்பொருளை யுணரு தற்கு
மாதங்க முகக்கடவுள் மருங்கு சென்றான். 10

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

ஆளுஞ் சுவேத வனப்பெருமா ளென்றே யழைக்கு மப்புதல்வர்
நாளு மிபமா முகன்கோயில் நாடிச் சென்றே யருகிருந்து
கேளு மெனவே யவருரைப்பக் கேட்டுத் தெளிந்து வரலானார்
நீளும் நாட்களாகவதை நேர்ந்து வளர்ப்போ ருணர்ந்திலரே. 11

ஈச னபிடே கந்தனக்கே யென்றும் பால்நெய் யளித்துவரும்
நேசமுடைய வோரிடைச்சி நிமலன் கோயி லுட்புகுந்தே
தேசின் மிக்க பெருமானைத் தெரிசித் தேத்தி வலம்வருங்கால்
பாச முடனே கணபதிமுன் பாலன் பயிலக் கண்டனளே. 12

வாய் பேசாத சிறுமதலை வாயைத் திறந்து பயில்வதுவும்
ஆய்ந்த அறிவோ ரறிவரிய ஆனை முகத்துப் பெருமானார்
ஏய்ந்த மொழிக ளிசைப்பதுவு மிருகண் ணாற்கண் டவற்றை யெலாந்
தாய்தன் மாமன் றனைத்தேடித் தருக்கி நின்றே சாற்றினளால். 13

ஆயர் குலமா மகண்மொழிகள் அமுத மெனவே யிருசெவி யுட்
பாய வீசன் பகர்வரங்கள் பலித்த வென்றே களிகூர்ந்தார்
நாய கன்றன் திருக்கோயில் நண்ணி நம்பி தனைக்கண்டார்
தூய மொழியுந் தாம் கேட்டார் ஆனந் தத்தாற் றுள்ளின ரே. 14

பொள்ளா வடிவம் பொருந்திநின்ற புகர்மா முகத்துப் பூரணன்றன்
கள்ளார் கமலப் பதமிறைஞ்சிக் கருணை யுருவே கற்பகமே
விள்ளா மதலை வாய் திறந்தே விள்ளும் வண்ணம் அருள்புரிந்தாய்
தள்ளா வுன்றன் கருணையினைத் தமியே முணர வல்லேமோ. 15

இன்றிம் மதலை வாய்திறந்தே யியம்பும் வண்ணம் பெருங்கருணை
நன்றே புரிந்த நாயகமே நம்பும் நின்றன் பழவடியார்
துன்று மூங்கை யாயினவர் துவர்வாய் திறந்தே பேசும்வணம்
என்றுங் கருணை செயல்வேண்டு மென்றே துதிசெய் திறைஞ்சினரால். 16

எம்மை நாடி வழிபடுவோர் எவரா யினுமவ் வடியார்க்கும்
செம்மை யுறவே பேசுகின்ற செல்வ மென்று மளித்திடுவோம்
நம்மை நாடிக் கலைபலவும் நன்கிம் மதலை பயின்றதனால்
இம்மை தனிலே சிவசமய மெங்கும் பரப்பு மென்றனனே. 17

நற்குஞ் சரக்கன் றேயனைய நங்கள் பெருமான் இதுபகர
நிற்கு மடியார் குழாமெல்லாம் நின்றே வணங்கி விடைபெற்றுக்
கற்கும் மதலை தனைப்புல்லிக் கண்ணீ ராட்டி யயினிசுற்றிச்
சொற்கேட் டின்ப வாரிதியிற் றோய்ந்தே யில்லங் கொணர்ந்தனரே. 18

இல்ல மணைந்த சிறுமதலை யானை முகத்துப் பெருமானார்
சொல்லக் கேட்டே யுணர்ந்திட்ட தூய சித்தாந் தக்கருத்தை
மெல்ல மெல்ல வீட்டிலுளோர் விழைந்து கேட்க மொழிந்திடலும்
எல்லை யில்லா மகிழ்ச்சி யுடன் எவருங் கேட்கத் தொடங்கினரே. 19

வாயைத் திறவாச் சிறுமதலை வாயாற் பேசு வதுமன்றிக்
காயத் தியல்பும் மலத்தியல்பும் கடவு ளியல்புங் கசடறவே
நேயத் துடனே பலருக்கும் நிகழ்த்தும் வன்மை பெற்றிட்டார்
ஆய நிலைகண் டோர்பலரும் அவர்தம் சீட ராயினரே. 20

கலி விருத்தம்

ஊன மற்ற திருத்துறை யூரினில்
ஞான நல்கிடு நாயகர் பூசிப்போர்
ஆன வைய ரருணந்தி தம்மிடம்
கான மாமறை கற்பவர் வந்திலர். 21



ஏது காரண மென்னவங் குள்ளவர்
மாதோர் பாகர் வதிந்திடு வெண்ணையில்
போதம் யாவும் புகன்றிடு பிள்ளைபால்
ஓதச் சென்றுளா ரென்ன வுரைத்தனர். 22

அன்ன வார்த்தை யருணந்தி கேட்டனர்
துன்னு கூரம் தொடர்ந்திடப் பாலகன்
றன்னைக் கண்டிடத் தன்பதி நீங்கியே
மன்னு வெண்ணெய்நன் மாநகர்ப் போந்தனர். 23

தேசி கன்வரு கைகண்டு சீடர்கள்
நேச மோடு வணங்கியே நின்றனர்
ஆச னத்தி லிருந்துநம் மண்ணலும்
பாசத் தன்மை பகர்ந்திருந் தாரரோ. 24

வந்த தம்மை வணங்கிட லின்றியே
பந்தத் தன்மை பகர்ந்திடக் கேட்டனர்
உந்து மாணவம் ஓங்கி வளர்ந்ததாற்
சிந்தை யாழச் சிறிதே யுலாவினார். 25

மாண வர்க்கு வகுத்துரை செய்திடும்
யாணர்த் தன்மைகள் யாவையுங் கேட்டபின்
ஆண வத்தின் நிலைமை யனைவருங்
காணக் காட்டிடு மென்று கழறினார். 26

தங்கு லக்குரு தாம்பகர் தன்மையைத்
துங்க மாகிய தோன்றலுங் கேட்டனர்
அங்கை நீட்டி யவர்தமைச் சுட்டினார்
இங்ங னென்ன வியம்பில ரேந்தலே. 27

தம்மைச் சுட்டிய தன்மையைக் கண்டனர்
செம்மை யாத்தம் நிலைமையுஞ் சிந்தித்தார்
செம்மல் நோக்கினாற் சிந்தைவே றாகியே
எம்மை யாட்கொளு மேந்தலென் றெண்ணினார். 28

உண்மை ஞான மிதுவென் றுணர்த்திடும்
அண்ணல் தன்மை யறிந்தில மேயென
வெண்ணணித் தம்மையு மேன்று கொளும்வணம்
வண்ண மாகழல் வந்து வணங்கினார். 29

திட்டி தீக்கை தெளிவிக்கப் பார்ப்பனர்
கிட்டித் தாழக் கிளர்ந்த மகிழ்வுடன்
அட்டி யின்றி யடியர் முதல்வராய்
இட்ட மாக விருந்திடு வீரென்றார் 30

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தருங்கலையு மாகமமுந் தான்பயின்றே குருவான
தன்மை யாலே
அருஞ்சகலா கமபண்டி தரேயென்னு மருணந்தி
யந்த ணாளர்
பெருங்குருவாய்ச் சுவேதவனப் பெருமானைப் பெற்றுமகிழ்
வுற்றா ரென்னில்
இருங்கடல்சூழ் வையத்து ளீசனருள் பெருமைதனை
யியம்பப் போமோ. 31

எம்பெருமா னளித்திட்ட நான்மறையா கமங்களெலா
மியம்பு கின்ற
செம்பொருளை யாங்களெலாந் தெளிந்துணரச் செப்புமெனச்
சீடர் கேட்ப
நம்பியுமே மிகமகிழ்வாய் அவரையெலா மருகிருத்தி
நாப்பண் வைகித்
தும்பிமுகன் பாலுணர்ந்த சுருதியா கமப்பொருளைச்
சொல்ல லுற்றார். 32

ஈசனருள் வேதமிருக் கெசுர்சாம மதர்வணமென்
றீரி ரண்டும்
வாசவோ மக்கிரியை வேள்விமுறை யிறைவணக்க
மந்த்ர தந்த்ரம்
ஓசையுறு முதாத்தமனு தாத்தம்சு வரிதமுட
னுயர்ந்த பையிலன்
வைசம்பா யனன்சைமினி சுமந்துவுக்கும் வகுத்துபதே
சித்த வாகும். 33

கன்மமுபா சனைஞான காண்டமதில் உபநிடதம்
நூற்றெட் டுள்ளே
மன்னீசங் கேனங்கடம் பிரசன்ன முண்டகமும்
வளர்மாண் டூக்யம்
துன்னுமைத் ரேயங்கௌ சீதகியாந் தைத்திரியம்
சுவேதா ச்வதரம்
பன்னுபிருக தாரண்யம் சாந்தோக்யம் பன்னிரண்டும்
பகர்வர் மேலாய். 34



காமிகமும் யோகஜமும் சிந்தியமுங் காரணமோ
டசிதம் தீப்தம்
சேமசூக் குமம்சகச்ரம் அஞ்சுமான் செறிந்திலகு
சுப்ர பேதம்
வாமமிகு விசயநிச்சு வாசஞ்சுவா யம்புவம்
வன்னி வீரம்
வீமரௌ ரவமகுடம் விமலஞ்சந் திரஞானம்
விளங்கு பிம்பம். 35

தூயபுரோற் கிதம்லளிதம் சித்தம்சந் தானமொடு
தோய்சர் வோக்தம்
நேயகிர ணம்பார மேசுரமே வாதுளமே
நிகழ்த்து கின்ற
வாயவிரு பத்தெட்டா மாகமங்கள் மறைகளிலு
மரிய வாகும்
மேயவவை சிவபெருமான் ஐம்முகத்துந் தோன்றுவகை
விளங்கக் கேண்மின். 36

உயர்காமி கம்முதலா யசிதம்வரை யோரைந்துஞ்
சத்யோ சாதம்
மயர்வகற்று தீப்தமுற்சுப் பிரபேதம் வரையைந்தும்
வாமே தேவம்
அயர்விலா விசயமுதல் வீரம்வரை யவையைந்தும்
அகோர மாகும்
சயமுளரௌ ரவமுதலா பிம்பம்வரை யைந்துந்தற்
புருட மாகும். 37

அறைந்தவிரு பதுநிற்க புரோற்கிதமுன் வாதுளமீ
ருய வெட்டும்
குறைவிலா தீசான முகத்தினின்றுந் தோன்றியதாக்
கூறு நிற்பர்
நிறைந்தவிந்த வாகமங்கள் சரியை முதல் ஞானம்வரை
நிகழ்த்து மீதுள்
மறைந்துளதாம் பொருளெல்லா மினிதுரைப்பம் கேளுமென
வழுத்த லுற்றார். 38

அக்காலைச் சீட ரெலா மடி வணங்கித் தேவரீ
ரறையு மிந்தப்
பக்குவநல் லுபதேசப் பொருளை யெலா மொருநூலாய்ப்
பகர்ந்தே யீயின்

இக்காலை யாங்களுணர்ந் தீடேறு வோம்பிறகு
மெம்பின் னோர்கள்
எக்காலும் பயின்றின்ப மெய்திடுவ ரெனவேண்டி
நின்ற ரன்றே. 39

முன்னவனுங் கணேசர்பால் உணர்ந்ததனை மூதுலகோ
ருணரும் வண்ணம்
பன்னிருசூத் திரங்களாப் பகர்ந்துள்ளோம்
பணிவாய்க் கேட்டுத் [அதன்பொருளைப்
துன்னுமிந்நூற் சிறப்பையெலாந் துகளறவே பலநூலாய்த்
தொடர்ந்து செய்து
அன்னவாம் நூல்களையு மவனிதனக் களிக்கவுமி
தறையக் கேண்மின். 40

முதற்சூத் திரம்பதிக்குப் பிரமாணம் பாசத்திற்
கிரண்டாம் மூன்றே
யிதமுறவே பசுவிற்காம் நான்கைந்தா றியல்பசுபா
சம்ப திக்காம்
அதன்பின்ன ரிலக்கணமே யெட்டொன்பான் சாதனமே
யடுத்த மூன்றும்
பதமுறவே சாத்தியத்தைப் பகருவதா கும்மதனைப்
பரிந்து கேண்மின். 41

முன்னின்ற சூத்திரத்திற் புவிதோற்ற நிலையிறுதி
மூன்ற தென்றும்
அன்னதுதா னரனாலே யுடையதென்று மாக்கலுடன்
அளித்தல் செய்யும்
மன்னியவவ் விருவருமுத் தொழிற்படுவ ரென்றுமே
வகுத்துக் கூறுந்
துன்னியமூன் றதிகரண முடையததது தூயகுண
முடைய நல்லீர். 42

பின்னிரண்டா வதுவவ்வரன் உயிர்களிலே பிரிவறவே
நிற்ப னென்றும்
கன்மபலன் றனையரனே யுயிர்களுக்குக் கொடுத்தூட்டுங்
கருத்த னென்று
மன்னுமுயி ரனைத்துமச்சு மாறியே பிறக்குமென்று
மகத்த தென்ன
வுன்னுமரன் சருவவியா பகனென்றும் நான்காகி
வுரையா நிற்கும். 43



இல்லையெனு மறிவுடனே சொல்லுகையால் அறிவுயிர்தா
னியம்ப வுண்டு
தொல்லையென துடலென்ற பொருட்பிறிதின் கிழமையாய்ச்
சொல்ல லாலே
வல்லவவ் வுடலுக்கு வேறாக வுயிருண்டு
மதிக்கு மைந்திற்
புல்லியொவ்வொன் றாகவறி தலினைந்திற் கும்முயிர்தான்
புறம்பா யுண்டு. 44

கனவுடலை விட்டுநன வுடலிலே வருகையினாற்
கனவு டற்கும்
அனியமா யுயிருண்டு நித்திரையி னயர்ச்சியிலும்
பிராண வாயு
இனமருவு தொழில்புரியப் புசிப்புத்தொழி லிவ்வுடலுக்
கிலாமை யாலே
நனவுதரும் பிராணனுக்கு வேறாக வுயிருண்டு
ஞானச் செல்வீர். 45

மறந்துமறந் தேநினைக்குந் தன்மையினால் மறவாத
அரற்கு வேறாய்
நிறைந்தவுயி ருண்டுதத் துவங்களுக்குத் தனித்தனிப்பேர்
நிகழ்த்த லாலே
சிறந்ததத்து வங்களுக்கு வேறாக வுயிருண்டிச்
சிறப்பெல் லாமும்
அறைந்தமூன் றாகியசூத் திரத்துள்ளே யதிகரண
மேழாய்த் தோன்றும். 46

நான்கிலந்தக் கரணங்கட் குயிருடனே கூட்டுறவு
நண்ணி னல்லால்
தான்புரியுந் தொழிலிலா மையினந்தக் கரணங்கள்
தமக்கு வேறா
யேன்றவுயி ருண்டுமல மறைப்பினா லுயிர்க்கறிவொன்
றில்லை யென்றும்
ஆன்றவுயிர் மூன்றவத்தைப் படுமதனுக் கதிகரண
மூன்ற தாமால். 47

ஐந்திலுயி ராலேதத் துவங்களெலாந் தொழில்புரியு
மரன்ற னாலே
முந்துயிரெ லாமறியு மிரண்டேயா றினிலுயிர்கள்
முதுக்கு றைவால்

தந்துவறி வனவனைத்துந் தாமழியுஞ் சாற்றுமப்ர
மேய மாக
நந்தியறி யப்படுவோ னரனிதற்கு மிரண்டாகும்
நவிலக் கேளீர். 48

ஏழிலரன் பாசத்தை யனுபவியான் அனுபவியா
வீசற் பாசம்
வாழுமுயி ரவ்விரண்டு மனுபவிக்கு மெனல்மூன்றே
வகுக்கு மெட்டில்
ஊழுயிர்க்கு நல்லறிவு தவத்தணுகு மரன்குருவா
யுறுவ னைந்தி
லாமுதலா லுயிர்தன்னை யறியாது பற்றற்று
லறியும் நான்கே. 49

ஒன்பானி லரன்ஞானத் தாலரனைக் காணுமுயிர்
உயிரும் பாசந்
தன்பால்பற் றறினரன்தோன் றுவன்வாத ணுமலம்போம்
தானைந் தெண்ணில்
என்பார்மூன் றெருபதினீ யரனுடனென் றுகிநிற்றி
யியையு மாறு
நின்பாலாந் தொழிலனைத்து மரன்பணியென் றேகொள்க
நிகழ்த்தி ரண்டே. 50

பதினென்றில் ஞானியுறும் விடயமர னனுபவிப்பன்
பரனை யோர்ந்தே
முதிரன்பி னிருந்தாலவ் வரனிடமைக் கியமாவன்
மொழியி ரண்டே
இதின்கடையில் மும் மலமுங் களைகசிவ ஞானியொடு
மியைக ஞானி
வதிலிங்கஞ் சிவனென்றே வழிபடுக படாமைதமை
மாறல் நான்கே. 51

கலி நிலைத்துறை

சிறிய வாடியுட் பெரும்பொருள் செறிந்துதோன் றுவபோல்
அறிவு நூல்களின் கருத்தெலா மகத்தடக் கியதோர்
நெறியி னீடிய சிவஞான போதநூல் நிகழ்த்திச்
செறியு மாணவர் தமையெலாந் தெளிவுறச் செய்தார். 52



ஆர்த்தி யாய்ச்சிவ ஞானபோ தத்தினு ளமைந்த
சீர்த்தி மிக்கதோர் கருத்தெலாஞ் சிதைவுறு வண்ணம்
வார்த்தி கம்மெனும் பொழிப்புரை யென்னவே வகுத்தும்
பூர்த்தி யாகவே யுரைத்தமை புகலுதற் கெளிதோ. 53

கருணை யேவடி வாகிய கயிலையெம் பெருமான்
தருணம் நந்திக்குத் தாம்புகல் போதத்தைத் தாமும்
அருணி றைவுடன் சனற்குமா ரர்தமக் கறையப்
பொருணி றைபரஞ் சோதியும் மெய்கண்டார் புகன்றார். 54

இளமை யிற்பரஞ் சோதிவந் தியம்பிய மொழியைக்
களக வாகன விறைதன்பாற் கசடறத் தேர்ந்தே
உளந்த னிற்பதிந் திடும்வணம் மாணவர்க் குரைத்தார்
புளக மிக்கெழ மெய்கண்ட நாதராம் புனிதர். 55

உண்மை கண்டநம் தேசிக னுரைத்தவா சகத்தை
யண்மை மாணவர் நாற்பத்தொன் பதின்மரு மறிந்தே
திண்மை யுற்றன ரருணந்தி தேசிகர் துதிபோல்
நுண்மை நூலிரு பாவிரு பஃதென நுவன்றார். 56

இன்ன நூலின்பின் சிவஞான சித்தியா ரென்ன
அன்னி யர்சொலும் பக்கமுஞ் சுபக்கமு மாகப்
பன்னு சங்கைகள் தெளிவுறப் பாருளோர் மகிழ்ந்தே
நன்மை யெய்திடும் வணமிரு நூல்களை நவின்றார். 57

முந்தி யுய்யவந் தாரெனு மிருவர்கண் முறையே
உந்தி யார்களிற் றுப்படி யாரென வுரைத்தார்
சிந்தை யான்மன வாசகங் கடந்தவர் தெளிவாய்ப்
புந்தி தேருண்மை விளக்கமென் றெருநன்னூல் புகன்றார். 58

தில்லை வாழுமா பதிசிவம் திருவருட் பயனும்
தொல்லை சேர்சிவப் பிரகாசங் கொடிக்கவி தூது
வல்ல போற்றியும் வினாவெண்பா வாய்நெறி விளக்கம்
எல்லை சங்கற்ப மென்னவெண் ணூலியற் றினரால். 59

உயர்சித் தாந்தத்தி னெண்பொருள் யாவையு முணர்த்தி
மயர்வு தீர்க்குநூல் மாண்பதி னுன்கென வகுத்தார்
பெயர்வி லாவருட் டுறையுறை பிஞ்ஞக னருளால்
உயர்வு பெற்றன வுலகெலா முண்மையை யுணர்ந்தே. 60

உலக முய்யவே யவதரித் துண்மையை விளக்குந்
திலக மொப்பதோர் நூல்தந்த மெய்கண்ட தேவர்
இலகு மைப்பசிச் சோதிநாள் இரண்டறக் கலந்தே
விலகி லாச்சிவ சொரூபமாய் விளங்கின ரன்றே. 61

கன்னி பூரத்தி லருணந்தி காளியுத் திரத்தில்
உன்னு சம்பந்தர் உதளத்த முமாபதி வீடு
துன்ன லுற்றனர் உமாபதி யார்வழித் தொடர்ந்து
மன்னுஞ் சீர்த்திரு மடங்கள்சித் தாந்தத்தை வளர்க்கும். 62

இம்முறையில் மெய்கண்டார் சரிதமுடன் சித்தாந்த
மினிது ணர்ந்தோம்
செம்மையுறு சித்தாந்தஞ் செகத்தினிலே பரவுதற்கோர்
சேயைத் தந்த
அம்மையப்ப னுகவுறும் அருட்டுறைநா யகன்கழலை
யன்புகொண்டியாம்
எம்மையினுந் துதிசெய்தே இறவாத பேரின்ப
மெய்தி வாழ்வாம். 63

மெய்கண்டதேவர் மெய்ப்பொருளுணர்ந்த படலம்
முற்றுப்பெற்றது.

ஆ. செய்யுள் 639

## பதினைந்தாவது

## பாவிகள் பரிபவப் படலம்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சங்க ரன்சிவ சம்புச தாசிவன்
சர்வ சீவத யாபரன் தாணுவாய்
எங்கு மேநிறை யீசன்பு ராந்தகன்
ஈமத் தாடியெண் டோளனே றூர்ந்தவன்
கங்கை வேணியன் காமனைக் காய்ந்தவன்
கருணை நாயகன் என்றுதுதிப்பவர்
துங்க ஞானமும் இன்பமு முற்றுமே
தூய்மை யாய சிவபதந் தோய்வரே. 1

சூத மாமுனி தன்னையி றைஞ்சியே
சூழ்ந்தி ருந்திடு சவுனக முனிவரர்
மாது பாகனை மனத்திடை யெண்ணிலா
வஞ்ச நெஞ்சரை மறலிதன் தூதுவர்
ஏது செய்குவ ரென்னவி னுவலும்
இளகி யேமன மிருடியர் நோக்கியே
ஈது கேளுமி னெனச்சில வாய்மையை
இறையை யேத்தி யியம்பிட லாயினன். 2

தென்றி சைக்கிறை யாகிய தன்மனுந்
திரண்டு முன்வரு தூதரை நோக்கியே
இன்று நாளுலந் தார்கள்தம் முயிர்களை
யிங்கு நீர் கொணர் கென்றிடத் தூதுவர்
சென்று காலபா சங்கொடு வீக்கியே
சீவர் தங்களைக் கொண்டுமே வருதலும்
நின்று சித்திர குத்தனு மவர்கள்தம்
நிலைமை யீதென நிகழ்த்திடு வானரோ. 3

குருவை நிந்தனை செய்தவன் கொடுமையோன்
குலத்தைக் கெடுத்தவன் கொலைபுரிந் திட்டவன்
ஒருவன் றன்மனை யாளொடுங் கூடினோன்
உற்ற தாரங் கலங்கிட விட்டவன்

தெருவங் காடி சிறுக விலையிட்டோன்
தேவர் கோட்டத்தைத் திட்டிப்ப ழித்தவன்
வெருவ வேறொரு பங்கைப் பிடுங்கினோன்
வேலி யிட்ட பயிரை யழித்தவன். 4

மன்றி னின்று வழக்கோரஞ் சொன்னவன்
வாழக் கூடிய மணத்தைத்த டுத்தவன்
என்றும் நன்றுசெய் சோலைய ழித்தவன்
ஏழை வாழ்ந்திட மனதுபொ ருதவன்
நன்றி செய்தவர்க் கின்னல்கள் செய்தவன்
நாய கன்றனை நஞ்சிட்டுக் கொன்றவன்
கன்று மாந்திடப் பாலைவி டாதவன்
கண்ணீர் விட்டழக் கூலிகொ டாதவன். 5

இன்ன வாம்பல பவம்புரிந் திட்டவ
ரின்னின் னாரெனக் கூற யமதன்மன்
அன்ன பாவிகள் தம்முக நோக்கியே
அகில வாழ்க்கையிற் செய்திட்ட தியாதுநீர்
பன்னு பாவங்கள் பற்பல செய்துமே
பரமன் றண்டத்தை யெள்ளிப்ப ழித்ததால்
இன்ன தண்டனை யேற்றிடு மெனவவர்க்
கேற்ற தண்டனை யீந்திடு வானரோ. 6

கொடிய பாவஞ்செய் தாரைநம் ஏவலர்
கூறு கூறுகக் கூரிய வாள்கொடு
அடிமு தன்முடி யீருய ரிந்துமே
அனலி லிட்டுக்கொ ளுத்தியெ ரிப்பர்கள்
கடிய பாம்பட்டை பூரான்செந் தேள்களுங்
கலந்து வாழுங் குழியிடை வீழ்த்துவர்
இடியெ னத்தழல் தன்னிலே காய்ந்திடு
மிருப்புத் தூணொடுஞ் சேர்த்திடு வார்களால். 7

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

என்பு நுணுக்குறக் குருதிதெ றிக்க விரும்பினு லக்கைகொடு
முன்பு நிறுத்தி யுரத்தி லடிப்பர்கள் மோதுவர் சிற்சிலரை
இன்பக் குறியினை நாய்பல கவ்வி யிழுக்க விடுத்திடுவார்
வன்பு பெரும்புலி வள்ளுகிர் கீறி வருத்தநி றுத்திடுவார். 8



குப்பியில் நெய்கொடு கூறுப டுத்துக் கொளுத்துவர் சிற்சிலரை
செப்பை யுருக்கியே வாய்நனி யூற்றுவர் செக்கினி லாட்டுவரால்
ஓப்பி யுடல்தனைப் பாறுகள் கொத்தி யுடற்றநி றுத்திடுவார்
வெப்பு மிகுந்திடு நரகிடை வீழ்த்தியே வேதனை யீகுவரால். 9

வேறு

ஒன்றிப் பலநா ளிருந்தாலு மொருநாள் இறத்தல் உறுதியென
என்று முணரா தேதருக்கி யிழிவாம் பவங்கள் புரிந்திட்டோம்
இன்றே யுணர்ந்தோ மாதலினால் இனிமேதினிபாலெமைவிடிலே
நன்றே புரிந்து வருவமென நாடிப் பலரு நவில்வாரால். 10

உம்மைச் சதமென் றுதவிசெய்தோ முண்டீ ருடுத்தீர் சுற்றத்தீர்
எம்மை வருத்து மிக்காலை யிரங்கி வருவோர் தமைக்காணோம்
தம்மை நிகர்க்கும் பெருமான்றன் றுளை வணங்கி நீரேனும்
நும்மைக் காத்துக் கொண்மினென நுவலா நிற்பர் பலரம்மா. 11

அன்று பத்தர் மொழிந்ததனை யணுவு மேற்கா தவம்புரிந்தே
யின்று படும்பா டெம்மாலே யியம்ப முடியா தென்பர்சிலர்
என்றுங் கடவு ளிலையென்போர் மொழிகேட் டிழைத்த ஏதத்தால்
துன்றுந் துன்பஞ் சொலத்தகுமோ சுற்றத் தீரே யென்பர்சிலர்.

புழுக்க ளுடலைத் தொளைத்திடுமோ புலிகள் பாய்ந்து கடித்திடுமோ
கழுக்கள் கொத்தி யுலைத்திடுமோ கனலும் வீசிக் கொளுத்திடுமோ
இழுக்கு நரகி லிருப்போமோ யேது மறியோ மாகையினால்
ஒழுக்க முடனே பரனடியை யோதி யுய்ம்மி னென்பரால். 13

ஓடி யோடிப் பொருள்தேடி யுணர்ச்சி யின்றிச் சிறுதொழிற்கே
நாடிச் செலவு செய்பவத்தால் நாயேம் நாளும் நரகினிடை
வாடி யிருந்தே யுழல்கின்றேம் வையத் தீரே நீரேனும்
தேடிப் பரம னடிவணங்கி யுய்ம்மி னென்றே சிலர்சொல்வார். 14

அன்ன வாக நரகினிடை யழுந்தி யுழலு மச்சீவன்
மன்னு பிராரத் துவங்கழிய மலிந்து பின்னு முளவாய
துன்னு சஞ்சி தந்தன்னைத் தொலைப்பான்வேண்டிப்புவியினிடைப்
பின்னுஞ் சனன மெடுத்தற்குப் பின்னவுருவாய்த்திகழ்ந்திடுமால். 15

உண்ணு முணவி லோடதியிற் புனலி லூறிச் சாரமதாய்
வண்ண சுக்ல மேயாகி வயங்கி நின்றே யவைதாமும்
நண்ணும் மாத ருடன்கூடிக் கலவி புரியும் நாள்தன்னில்
பெண்ணின் கருப்பக் கோளகையில் தயிலத் துளிபோல் பிறங்கிடு
மால். 16

அடுத்த நாளில் குன்றிமணி யதுபோல் திரண்டு நான்கா நாள்
விடுத்த நீரின் குமிழியென விளங்கிப் பத்தாம் நாள்தன்னில்
கடுத்த விலந்தைக் கனிபோலுங் கவினிப் பதின்மூன் றும்நாளில்
எடுத்த எலுமிச் சைமரத்தின் எழில்சேர் கனிபோல் இலங்கிடு
மால். 17

பதினை ந் தாம்நாள் கடினமிலாப் பந்து போல வேதிரளும்
மதியொன் றதனில் மாமிசத்தின் வயங்கு பிண்ட மெனலாகும்
மதியா மிரண்டில் மத்தகத்தின் வடிவு காட்டும் மதிமூன் றில்
அதில்கை கால்கள் சிரமென்னும் ஐந்து மினிதா
வமைந்திலங்கும். 18

சேர்ந்த மாதம் நான்கினிலே செவிகண் வயிறு ரோமங்கள்
சார்ந்தே யைந்தில் இந்திரியத் தன்னிற் புழையுந் தான்
தோன்றும்
நேர்ந்த ஆறில் தாதுக்கள் நிறையும் ஏழில் சீவனுமே
ஆர்ந்து மதியெட் டவயவங்கள் அனைத்தும் நிரம்பிப்
பூர்த்தியுறும். 19

எட்டாம் மதியில் தாயுண்ணு முணவி லுளவா மிரதமெலாம்
தட்டா துந்தி வழியுண்டு தனுவும் வன்மை யுறப்பெற்று
முட்டா முன்னைப் பவநிகழ்ச்சி முனையு மறிவா லிறைவன்றன்
மட்டார் கழலைத் தான்துதித்தே மாயை கடக்க வேண்டுமினி. 20

என்றே யெண்ணு மக்குழவி யீரைம் மதியுங் கழிந்ததன்பின்
ஒன்றும் ஆலைக் கரும்பென்ன யோனி நெருக்க வேயொடுங்கித்
துன்று வளிவந் தாங்கடிப்பச் சுழன்று முன்னை நினைப்பொழிந்து
அன்றே வெளிவந் தஞ்ஞானத் தழுந்தி யுலகில் வளர்ந்திடு
மால். 21

அன்னை வயிற்று வாதனையும் அகில வாழ்வும் மரணத்தாற்
பின்னை யடையும் பெருந்துயரும் பேசக் கேட்ட ராதலினால்
மின்னை யிடம்வைத் தருட்டுறையுள் மேவும் பெருமானடிவணங்கிச்
சென்ம பவத்தை யொழித்திடுவீ ரெனவே சூதன் செப்பினனால். 22

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

செனன துன்பமும் மரணத்தின் துன்பமும்
செப்பு சூதன்றன் திருமுக நோக்கியே
மனனஞ் செய்திடு முனிவர்கள் யாவரும்
மகிழ்வு கொண்டுமே பூதலந் தன்னிலே



தினமும் பாவங்கள் செய்திடு சீவர்கள்
திருட்டி முன்னரே தீவினைக் கேற்றவா
றனுப வித்திடு துன்பமு முளவெனி
லறைதல் வேண்டுமென் றன்பொடு கேட்டனர். 23

அன்ன வாய்மையைக் கேட்டிடு சூதனும்
அன்புமிக்கெழ அருந்தவர் நோக்கியே
முன்னர்த் தோன்றிடு மூதறி வுடையவர்
மூத்த வர்குரு வாகிய பெரியவர்
தன்னைக் கண்டுமே யெழுந்துவ ணங்கிடார்
தருக்கிப் பீடத்தி ருந்திடு மாந்தர்கள்
மன்னியே கிடாக் கழுதைய தாகவே
மாநி லந்தனிற் பிறந்துழல் வார்களே. 24

அறிவின் மிக்கவர் குரவர்க ளந்தணர்
ஆகி யோர்தமை யடித்துமே வைதவர்
வறியர் தங்களை வலிய வுதைத்தவர்
வான்பொ ருள்தரு குருவின்பத் தினியையும்
நெறியி லாமலே முறையிலா மகளிர்தம்
நிறைந்த கற்பையு மழித்தவர் பூவினில்
பொறிக லக்கிடு கயமெனு நோயினாற்
புகலொ ணாததுன் பத்தினை யெய்துவார். 25

பெரியர் தங்களை யிகழ்ந்தவர் அலவனைப்
பின்னஞ் செய்தவர் வீட்டினிற் றீவைத்தே
எரியச் செய்தவர் அந்தணர்க் கொன்றவர்
என்றுங் குட்டநோய் கொண்டுமே வாடுவர்
குருவைத் தண்டனை புரிந்தவர் கால்கைகள்
குறுகிக் கண்செவி கெட்டுவ ருந்துவார்
உரிய கற்புடை மனைவியை நிந்தித்தோர்
உடைய கண்களில் நீர்வடிந் தொழுகுமால். 26

பசித்த வர்க்குக்கொ டாதுபு சித்தவர்
பன்னியை விட்டுப் பரத்தையர் வீட்டினில்
வசித்த வர்மேக நோயால் வருந்துவார்
வலிந்து மேபிறர் மனைவியை வாஞ்சித்தோர்
நசித்தி டக்குறி விதையும்ப ருத்திட
நண்ணும் வாதநோய் மூத்திரச் சுருக்குண்டாம்
விசித்த மும்அலர் சன்னியும் தோன்றியே
வேதனைதரத் துன்பத்துள் வீழ்வரால். 27

உரிமை பெற்றவர் பாகத்தை வஞ்சித்தோர்
உற்ற தெய்வத்தை நிந்தனை செய்தவர்
தெரிய வேபசு தன்னைவ தைத்தவர்
தெரிவை மார்களை யுற்றுற்று நோக்கினோர்
பிரிய சோதரர்க் கிரண்டகஞ் செய்தவர்
பேணா நண்பர்க்குத் துரோகம் புரிந்தவர்
அரிய கண்களின் பார்வையி ழந்துமே
அவனி மீதினிற் குருடராய் வாழ்குவார் 28

கண்ட மாலையுங் காசம்மார் வலியுமே
காத கம்புரி பாதகர்க் கேவரும்
மண்டு தேகத்தில் நிணங்களுங் கிருமியும்
வகுத்த நீதிக்கு மாறுபு ரிந்தவர்
அண்டி பொய்க்கரி யவையிடைக் கூறினோர்
அடைந்து வருந்துவர் அன்னை தந் தைக்கிடார்
கொண்ட வயிற்றிடை நோயுமெ ரிச்சலுங்
குலைந டுக்கமும் வறுமையுங் கொள்வரால். 29

புண்ணி யக்கதை கேட்கத் தடுத்தவர்
புலனி லாவூமை செவிடரு மாகுவார்
நண்ணி யேசிசு வைக்கொலை செய்தவர்
நலியச் செய்குன்ம வியாதியுண் மாழ்குவார்
எண்ணிக் கோட்சொலிக் கலகம்வி ளைத்தவர்க்
கென்றும் வாயினும் புண்ணுறும் அழுகிடும்
பண்ணு நற்செயற் கிடர்கள்செய் தோர்தமைப்
படர்ந்து பித்தவி யாதியும் பற்றுமால். 30

இட்ட தானியங் களவுசெய் திட்டவர்
எலியு டன்பெருச் சாளியு மாகுவார்
பட்டு நூல்கொண்டோர் பறவைக ளாகுவர்
பழங்கள் வவ்வினோர் பாய்குரங் காகுவார்
சுட்ட பண்டங்கொண் டோர்காக மாகுவார்
சூழ்ந்து ஊண்பறித் தோர்கழு காகுவர்
குட்டை நீர்கொண்டோர் மண்டுக மாகியே
குவல யத்திற் பிறந்துழல் வார்களே, 31

இன்ன வண்ணமே யுலகினி லுள்ளபேர்
இன்னல் தன்னிலே மூழ்கியுங் காரண ந்
தன்னை யோர்கிலா தவர்களே பின்னரு ந்
தவறு செய்திடு கின்றன ரையகோ



முன்னை யூழ்வினை தன்னைவேர் வாங்கிடும்
முதல்வன் ஐந்தெழுத் தோதி வணங்கிடில்
பின்னை யப்பெரு மானருள் செய்துமே
பிறந்தி றந்திடாப் பேரின்ப மீவரால். 32

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சூதருமிவ் வணமுரைப்பச் சூழ்ந்திருந்த முனிவரெலாஞ்
சூதர் நோக்கி
மாதவத்தின் பெருமையினால் இன்றுநுந்தம் மொழிகேட்டு
மகிழ்வு கொண்டோம்
நாதனுறும் ஐந்தெழுத்தும் நாங்கள்கேட் டிடமொழியின்
நாட்டோ ரெல்லாம்
ஓதியதை யுய்ந்திடுவர் உபகார மாகுமென
வுரைத்தா ரன்றே. 33

அவ்வுரையைக் கேட்டிட்ட சூதமுனி யக மகிழ்ந்தே
யகில மெல்லாம்
எவ்வமறக் கைக்கொள்ளுந் தூயமொழி யொன்றுளதால்
என்று மந்தத்
திவ்விய நன் மொழிபயில்வோர் சென்மபவ மொழிந்திடுவர்
திண்ண மென்றே
அவ்வியமில் லாமுனிவர் முகநோக்கி யம்மொழியை
யறைய லுற்றான். 34

தூய்மையுள நமசிவய வென்பதனைத் தூலபஞ்சாக்
கரம தென்பர்
வாய்மையுள சிவயநம சூக்குமபஞ் சாக்கரமாய்
வயங்கா நிற்கும்
தோய்கின்ற சிவயவசி காரணமாம் சிவ வென்னுந்
திவ்ய நாமம்
ஆய்மகா காரணமாம் சி யதனை மகாமனுவென்
றறைவர் மேலோர். 35

நவ்வென்னு மெழுத்ததுவே மாயையெனுங் குறிப்பதனை
நல்கா நிற்கும்
மவ்வதுவே மறைப்பாகும் சிய்யதுவே சிவமென்னும்
மாண்பைக் காட்டும்

வவ்வதுவே யருளாகும் யவ்வதுவே உயிராகும்
வயங்கு பாரில்
இவ்வகையே ஐந்தெழுத்தும் ஐந்துபொருள்
யிலங்கு மாமால். [தமைக்கொண்டே

பக்குவத்திற் கேற்றவணம் ஐந்தெழுத்தை மாறியே
பயின்று சாரும்
துக்கமதை யறவொழிப்பர் பேரறிஞர் ஆகையினாற்
றுறவு பூண்ட
மிக்கநல்லீர் அம்முறையு மதனாலே வினைபயனும்
விளக்க மாகத்
தக்கபடி யுரைத்திடுவன் கேளுமென அதன்மாண்பைச்
சாற்ற லுற்றார். 37

இறைநின்ற நமசிவய வெனவோதின் இருவினையொப்
பாகு மென்பர்
மறைநின்ற சிவயநம வெனப்பகரின் மலபரிபா
கந்தா னாகும்
அறைகின்ற சிவயவசி யெனலாலே அருள்தெரி
சனமே தோன்றும்
நிறைகின்ற சிவயவெனில் ஐக்கியநிலை தன்னிலே
நிறுத்துந் தானே. 38

ஆய்ந்துமே வசி யென்னில் துரியநிலை அனுபவபூ
ரணம தாகும்
தோய்ந்துமே சிவ வென்னில் சிவானுபந் தோன்றியே
துன்பம் நீக்கும்
ஏய்ந்ததாஞ் சி யென்னில் அனுபவத்தின் அதீதநிலை
யெய்த லாகும்
வாய்ந்தவிதை நன்குணர்ந்தோர் மரணமற்ற பெருவாழ்வு
வாழ்வார் தாமே. 39

மாயையாம் நகரமது அருளாகும் வகரத்தில்
மறைந்தொ டுங்கும்
சாயைமறைப் பாம்மகரம் யகரமெனு மான்மாவிற்
சார்ந் தொடுங்கும்
தூயவருள் வகரமும் ஆன்மாவாம் யகரமும்
தொடர்ந்தி ரண்டும்
மேய சியென்கின்ற பதியெழுத்தி லொடுங்கிவிடும்
மேதக் கோரே. 40



ஐந்தெழுத்தின் னவையென்றும் அவ்வெழுத்திற் குளதாகும்
பொருளுங் கூறி
எந்தெந்த நிலையிலதை மாற்றிடலா மென்பதையு
மெடுத்து ரைத்தோம்
அந்தந்த முறைப்படியே யுச்சரிக்கில் வரும்பேறு
மறைந்தோம் நீங்கள்
சிந்தைசெய்தே யகத்தொடுக்கிச் சிவபெருமான் திருவடியே
சேர்கு வீரால். 41

பேரறிவைப் பெறுகின்றே மெனமனத்துள் உன்னிநிதம்
பிரண வத்தின்
தாரகமாம் அகரமதை யுச்சரித்தே மூச்சதனைத்
தானுள் வாங்கல்
பூரகமென் றேயுரைப்பர் நிறுத்திடுதல் கும்பகமாம்
புரிந்த பின்னர்
சீரதுவாய் வெளிவிடலே ரேசகமென் றெவ்வெவருஞ்
செப்பு வாரால். 42

அகரமதாம் பதியெழுத்தால் பூரகஞ்செய் ததன்பின்ன
ரடுத்து நிற்கும்
உகரமதாம் பசுவெழுத்தாற் கும்பித்தே யருளறிவு
மொன்றிச் சேர
மகரமதாம் பாசவெழுத் துச்சரித்தே ரேசகத்தால்
மாயை யோடு
நிகரில்லா அருள்வரல்போல் பிராணாயா மஞ்செய்தால்
நிலைக்கும் இன்பம். 43

இவையெல்லா முங்களுக்கே அனுபவமா கையினாலே
இயம மாதி
யவையெல்லாந் தனித்தனியா யெடுத்தெடுத்தே
மாத லாலே [யறையகில்லோ
நவையில்லா வறிவுடையீர் இதுகொண்டே நாதனது
நலமும் பெற்று
சுவையுடைய பேரின்பந் துய்த்திடுவீர் எனப்புகன்றான்
சூதன் மாதோ. 44

பாவிகள் பரிபவப் படலம் முற்றுப்பெற்றது.

ஆகசெய்யுள் 683.

பதினொருவது

## தீர்த்த விசேடப் படலம்

### கோச்சகக் கலிப்பா

பிறவியெனுந் தளைநீக்கிப் பிணிமூப்பு மரணமெலாம்
உறவினொடு மொழியச்செய் துயர்கதியாம் பதமருளும்
கறைக்கண்டன் றிருவடியைக் கருத்திருத்தும் பேரறிஞர்
குறைவில்லாச் சுகந்துய்த்தே கோதில்வீ டெய்து வரால். 1

எந்தைபிரான் றிருச்சடைநின் றேயிழிந்து வில்வழியே
வந்துநந்தி பவந்துடைத்த வளர்பெண்ணை நதிதன்னில்
எந்தவுல கத்திலுளோர் எவர்வந்து மூழ்கிடினும்
அந்தமிலாப் பேரின்ப மடைந்திடுதற் கையமின்றால். 2

கங்கையினுஞ் சிறந்துளதாங் கவின்பெண்ணை நதிக்கரையில்
தங்கிடுவோர் நீராடித் தானங்கள் புரிந்திடுவோர்
துங்கவந்தத் தீர்த்தத்தைத் தொட்டவர்கள் உண்டவர்கள்
இங்கிவர்கள் எல்லோரும் இறைவனருள் பெறுகுவரே, 3

அகத்தியனுங் கீரசனும் அருள்வசிட்டன் காசிபனும்
புகல்கின்ற மார்க்கண்டன் புலத்தியனுங் கௌதமனும்
இகலிலெழு முனிவருடன் எண்ணில்பல் பெயர்மூழ்கிச்
சுகவாழ்வு பெற்றதனைத் தொல்லுலகெல் லாமறியும். 4

மகரமதி யைந்தாம்நாள் வருபுனலில் நீராடின்
இகலோகச் சுகந்துய்த்தே யிறைவனடி யுஞ்சேர்வார்
நிகரில்லா வந்நதியின் மாண்பதனை நிகழ்த்துவெனில்
உகம்பலவுஞ் சென்றாலும் உலவாத நீர்மைத்தால். 5

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருவருட் டுறையாந் திருத்தளி தனக்குத்
தென்புற மமைந்துள தாய
அருட்டுறைத் தீர்த்த மதனில்நீ ராடின்
அரும்பிணி யாவையு மகலும்
சிருட்டியின் மீண்டும் புகப்பெறார் சிவன்றன்
றிருவடி நீழலிற் றங்கி
வெருட்டுத லில்லாப் பேரின்ப முற்றே
விளங்கவீற் றிருப்பர்கண் மாதோ. 6



குடிகளின் பயிரை யழித்திடுங் கொடிய
விலங்குள குறும்பொறைச் சென்று
படையுடன் வேட்டை யாடியே போந்த
பார்த்திபன் ஒருவன்நீர் வேட்கை
கடுமையா தலினால் நாவெலாம் புலர்ந்து
கருணைவா ரிதியதாய் விளங்குஞ்
சடிலவெம் பெருமான் றிருவுருக் கண்டு
சரண்புகுந் திறைஞ்சினன் மாதோ. 7

பத்திசெய் யடியர் வேண்டிய வெல்லாம்
பணித்தருள் அருட்டுறை நாதன்
தத்திய நடைகொள் விருத்தவே தியன்போல்
தண்டுகை யூன்றியே போந்து
உத்தம அரசன் வேட்கையை வினவி
ஊன்றிடு கோலினா லகழ்ந்து
சுத்தநன் னீரை யவர்க்கெலா முதவித்
தோன்றிடா வகைகரந் தனனால், 8

உண்ணுநீர் வேட்கை யொழிந்ததன் பின்னர்
உத்தமப் பெரியரைக் காணான்
மண்ணுடை யிறைவன் பரமனை வேண்ட
மான்மழுக் கரத்துடன் போந்து
எண்ணிய வெண்ணம் யாதென வினவ
ஏந்தலும் திருவடி யிறைஞ்சிப்
பண்ணிய வெங்கள் பவமெலாந் தொலைத்தே
பதந்தர வேண்டுமென் றனனால். 9

மன்னவன் வேண்டும் முறையினுக் கிரங்கி
மதிமுடிக் கங்கைவே ணியனும்
தன்முடி யதனுள் வதிந்திடு கங்கை
தனைவிளித் திந்தவா வியினில்
மன்னியே யிருந்து வந்துமூழ் கிடுவோர்
வளர்பவ மனைத்தையுந் துடைத்து
உன்னியே யவர்கள் வேண்டிய வரமும்
உதவுதல் நின்கட னென்றான். 10

அத்தகு வேட்கை அறைந்தபின் னமலன்
அரசனை யன்புடன் விளித்தே
இத்தடந் தன்னிற் பங்குனி யுவாவில்
உத்திரம் இயைந்திடு நாளில்

சத்துவ குணஞ்சார் அதிதிகட் குதவிச்
சார்ந்துநீ ராடினெம் அருளால்
சித்தத்துள் விரும்பும் நலனெலாம் பெற்றெம்
பதத்தையுஞ் சேர்குவி ரென்றான் 11

என்றுமே யமலன் திருவுருக் கரந்தான்
ஏந்தலும் மீன்மதி யுவாவில்
சென்றுநீ ராடிச் சிவபெரு மானைச்
சேவித்து மஞ்சன மாட்டி
ஒன்றிய மனத்த னாகிமுன் துதித்தே
யுயர்கதி யுற்றனன் பின்னர்த்
துன்றியவ் வாவி மூழ்கியே பல்லோர்
சொல்லரும் பேறுபெற் றனரால். 12

தண்டினா லகழ்ந்த காரணந் தன்னால்
தண்டுதீர்த் தம்மென விளிப்பார்
தொண்டர்நா யகனுங் கங்கையை விடுத்த
தொடர்பினால் சிவகங்கை யென்பார்
கண்டிதில் மூழ்கின் இச்சித்த தரலால்
காமதீர்த் தம்மென லாகும்
அண்டினோர் தங்கட் கருள்தர லாலே
அருட்டுறைத் தீர்த்தமென் பாரால். 13

தெய்விக மாமித் தீர்த்தத்திற் குடைந்தே
செய்தானம் தருப்பணஞ் செய்து
மெய்வகை யாக வைந்தெழுத் தோதி
மெல்லியல் பங்கனைத் துதித்தால்
செய்தவம் வேறு வேண்டுவ தின்றால்
சென்மித்த பவமெலா மகன்றே
உய்வகை யான உறுதியு மளித்தே
உயர்கதி தனையுமீந் திடுமால். 14

இத்தகு தீர்த்தக் கரையினி லிருந்தே
யிறந்தவர்க் கருங்கட னாற்றின்
அத்தகும் எள்ளுக் காயிரம் ஆண்டா
அவர்கள்விண் ணாளுவ ரன்றிச்
சித்தமற் றதனைத் தீண்டின ரேனுஞ்
செல்வமும் வீடுமெய் திடுவார்
உத்தம மாமித் தீர்த்தத்தின் பெருமை
சேடனும் உரைப்பதற் கரிதால். 15



### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இணையிலா வித்தீர்த் தத்தை யெய்தியே நோக்கிற் பாவப்
பிணையறும் மூழ்கின் வேண்டும் காமியம் பெருக வுண்டாம்
துணைவியோ டாடி னந்தத் துரிசறு முழுக்கொன் றற்கே
அணைபல தீர்த்த மெல்லாம் ஆடிய பயன்வந் தெய்தும். 16

வருணமாக் னேய மென்னும் மந்திரஞ் செபித்து ஞான
பருணிதர்க் குதவிற் கங்கை படிந்தவர் பெறும்பே றெய்தும்
கருணையில் பதகர் மூழ்கின் கடும்பவம் அகல்வ ரென்னில்
அருணிதி யாமித் தீர்த்தப் பெருமையா ரளக்கற் பாலார். 17

* நீலியென் னும்பே ரோடு நின்மலை யாகுங் கௌரி
கோலியே பூசை செய்த குண்டமாந் தீர்த்தந் தன்னில்
வாலிதாம் ஆடிப் பூர வைகலில் மூழ்கி னோர்கள்
மோலிசேர் அரச ராகி வையக முழுதும் ஆள்வார். 18

பார்த்தன்முன் னகழ்ந்த தான ‡ பாண்டவ தீர்த்தந் தன்னில்
மூர்த்தியை வணங்கி மாசி யுவாவினில் மூழ்கு வாரேல்
கீர்த்திசேர் செல்வம் பெற்றுக் கேடிலா வின்பந் துய்த்துப்
பார்த்திப ராகிப் பூமேற் பல்லாண்டு வாழ்வர் மாதோ. 19

மாதவன் பூசை செய்த § வைகுண்ட தீர்த்தந் தன்னில்
காதலால் இடபம் பௌவம் கலந்துள நாளில் மூழ்கின்
வேதனை புரியுந் தீய வியாதிகள் நீங்கப் பெற்றுப்
பூதலத் தரச ராகிப் பொருந்தியே வாழ்வர் மாதோ. 20

வேதங்க ளகழ்ந்த தான † வேததீர்த் தத்துண் மேட
மாதுங்க வுவாவின் மூழ்கி மாதவர்க் குதவு வாரேல்
ஆதங்கஞ் செய்நோய் நீங்கி யாரோக்ய முற்றே யீசன்
பாதங்கள் தம்மைச் சார்ந்து பழுதிலா வின்பந் துய்ப்பார். 21

---

* நீலியாங்குளம் என வழங்குகிறது ; தென்புற முள்ளது.

‡ வாண்டியாங்குளம் எனத் திரித்து வழங்கப் பெறுகிறது ; தென்புற முள்ளது.

§ மகம்மதியர் வீதியுள் உள்ளது.

† செட்டிமார்கள் பூந்தோட்டத்தினுள் உள்ளது,

இன்னணம் பலதீர்த் தங்கள் இத்தலந் தன்னி லுண்டாால்
அன்னவை தம்மின் மூழ்கின் அவையவைக் கேற்ற வான
நன்னிலை தனையும் பெற்று நம்பன் றன் அருளி னாலே
வுன்னுகா மியங்க ளெல்லாம் ஒருங்குபெற் றுயர்வர் மாதோ. 22

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எண்ணி லாதபல் பிறவி மாதவ
மினிதி னுற்றிடி னல்லது
பெண்ணின் பாகனும் கருணை நாயகன்
பெரிது வந்திடு பதியதாம்
வெண்ணெய் மாநகர் தன்னில் வந்துபி
றந்து வாழ்வினை யெய்திடும்
புண்ணி யம்பெற லரிய தென்னவே
புகன்றி டும்பல மறையரோ. 23

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பெருமைசேர் முனிவீர் வெண்ணெய்ப் பெரும்பதி தன்னி லுள்ள
அருமையை யறிந்து கூறல் சேடற்கு மரிதென் றாலும்
ஒருமையாய் நீங்கள் கேட்க வொருசிறி துரைத்தே மிந்தத்
திருவுடைப் புராணங் கற்போர் சிவப்பேறு பெற்று வாழ்வார். 24

இப்பதிப் புகழைக் கேட்போர் இனிதுரை செய்தோர் கட்கும்
ஒப்பியே பொருள்க ளீதல் செய்துப சரிப்போ ரெல்லாம்
செப்புமீ ரெண்பே றுற்றே செய்தவ முற்றி யீசன்
திப்பிய பதவின் பத்தில் திளைத்திடு வார்கண் மாதோ. 25

ஆட்கொண்ட நாதன் மேன்மை யறிந்துகற் றோர்கள் வாழி
வேட்கையோ டவர்கட் குப்பொன் விரும்பியே யீந்தோர் வாழி
தாட்பணிந் தன்பு செய்யும் அன்பர்கள் தழைத்து வாழி
கேட்பவர் பலருஞ் செல்வங் கிளர்ந்தெழ வாழி வாழி. 26

தீர்த்த விசேடப் படலம் முற்றுப்பெற்றது.

ஆ செய்யுள் 709.

திருவருட்டுறைப் புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

# திருவருட்டுறைப் புராணம்

## செய்யுள் முதற்குறிப்பகராதி

[ எண் - பக்களண் ]


| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| அ | | அத்தகுதலங் | 27 |
| அகத்திய | 128 | அத்தகுதலத் | 28 |
| அகரமதாம் | 127 | அத்தகுநாட் | 20 |
| அகிலசரா | 84 | அத்தகும | 26 |
| அகிலமுந் | 28 | அத்தகுமா | 75 |
| அக்காலை | 113 | அத்தகுமொ | 73 |
| அங்கப்பதி | 87 | அத்தகுவரங் | 33 |
| அங்குச் | 89 | அத்தகுவரத் | 100 |
| அங்குநின் | 90 | அத்தகுவாய்மை | 79 |
| அச்சுதக் | 107 | அத்தகுவேட்கை | 129 |
| அச்சுதன் | 75 | அத்தகுவேத | 52 |
| அஞ்சல்நீ | 79 | அத்தகை | 95 |
| அடிக்கடி | 101 | அத்ததியில் | 81 |
| அடியவர் | 24 | அத்தரும | 48 |
| அடுத்த | 122 | அத்தலத் | 29 |
| அட்டிலு | 25 | அத்தனதா | 58 |
| அணிசெய் | 103 | அத்தனருள் | 6 |
| அண்டகோ | 106 | அத்தனுமம் | 62 |
| அண்டங் | 73 | அத்தன் | 76 |
| அண்டர்நா | 53 | அந்தவுடை | 98 |
| அண்ணலன் | 100 | அந்தகற் | 19 |
| அண்ணல்சேர் | 69 | அந்தக்கதை | 99 |
| அதன்பின் | 71 | அந்தணனை | 86 |
| அதுதெரிந் | 76 | அந்தநகரி | 93 |
| அதுவேளை | 65 | அந்தநல் | 51 |
| அத்தகுகொ | 50 | அத்தமனை | 94 |

| | ப. எ. |
|---|---|
| அந்தவான் | 57 |
| அப்பணி | 80 |
| அப்பதி | 89 |
| அப்பரம் | 29 |
| அப்பழி | 50 |
| அப்பாலு | 72 |
| அப்பிழை | 68 |
| அப்பெரிய | 72 |
| அப்பெருநதி | 69 |
| அப்பெருநா | 37 |
| அப்பெரும் | 55 |
| அமரர் | 57 |
| அம்பிகை | 29 |
| அம்புயங் | 13 |
| அம்மகவை | 80 |
| அம்முறைய | 69 |
| அம்முறையே | 44 |
| அம்மைமு | 22 |
| அம்மையும் | 42 |
| அம்மொழிகே | 83 |
| அம்மொழிய | 61 |
| அயிலேந்து | 7 |
| அரனடி | 13 |
| அரகரா | 48 |
| அரிந்தன | 14 |
| அரியணா | 42 |
| அரியதா | 58 |
| அரியதி | 40 |
| அருகொ | 88 |
| அருங்கு | 107 |
| அருட்டுறைநாத | 66 |
| அருட்டுறையென்று | 109 |
| அருட்டுறையென்றே | 27 |
| அருந்தவ | 26 |
| அருமறைகள் | 84 |
| அருமறையா | 4 |
| ருமை | 50 |

| | ப. எ. |
|---|---|
| அருவமா | 33 |
| அருவமு | 47 |
| அருளின்ப | 7 |
| அருளுறு | 41 |
| அருள்தா | 65 |
| அரைதனி | 71 |
| அவணிவ | 26 |
| அவர்களுள் | 73 |
| அவ்வண் | 36 |
| அவ்வரம் | 55 |
| அவ்வவை | 86 |
| அவ்வுரைக | 87 |
| அவ்வுரைகேட்டு | 73 |
| அவ்வுரைகேட்டெம் | 48 |
| அவ்வுரையை | 125 |
| அறத்தினை | 18 |
| அறநன் | 15 |
| அறநெறி | 16 |
| அறவழி | 51 |
| அறிஞர் | 14 |
| அறிவின் | 127 |
| அறிவோர் | 64 |
| அறைந்த | 113 |
| அன்புடனே | 60 |
| அன்புடன் | 35 |
| அன்புடைய | 44 |
| அன்புடையவீ | 72 |
| அன்றியுந் | 33 |
| அன்றுதொ | 62 |
| அன்றுபத் | 121 |
| அன்றுமா | 32 |
| அன்னநற் | 25 |
| அன்னநன் | 106 |
| அன்னமா | 103 |
| அன்னவர்க | 36 |
| அன்னவாக | 121 |
| அன்னவாம் | 70 |





| | ப. எ. |
|---|---|
| அன்னவாய் | 123 |
| அன்னவார் | 111 |
| அன்னவாறு | 58 |
| அன்னைசொ | 42 |
| அன்னையின் | 58 |
| அன்னைவயி | 122 |
| **ஆ** | |
| ஆகையா | 51 |
| ஆட்கொண் | 132 |
| ஆட்கொள் | 29 |
| ஆண்டொரு | 37 |
| ஆதலால்தே | 53 |
| ஆதலால்நி | 79 |
| ஆதாரம் | 40 |
| ஆதித்தன் | 7 |
| ஆதுலர் | 24 |
| ஆயர்குல | 109 |
| ஆயபன்னு | 37 |
| ஆய்ந்து | 126 |
| ஆரணங்க | 36 |
| ஆரணம் | 21 |
| ஆரணி | 44 |
| ஆரூரி | 88 |
| ஆர்த்தி | 117 |
| ஆர்வநீர் | 14 |
| ஆவிநா | 42 |
| ஆளுஞ்சு | 109 |
| ஆளோலை | 84 |
| ஆறுகள்த | 17 |
| ஆறுமுக | 61 |
| ஆனைமா | 53 |
| ஆன்வடி | 49 |
| ஆன்ற | 43 |
| **இ** | |
| இங்குறு | 77 |
| இங்ஙனம் | 40 |

| | ப. எ. |
|---|---|
| இடையி | 55 |
| இடைவெளி | 27 |
| இட்டதானி | 124 |
| இட்டமாக | 57 |
| இணையிலா | 131 |
| இதுகாலை | 85 |
| இத்தகுதீர்த் | 130 |
| இத்தகும | 62 |
| இத்தல | 74 |
| இத்தார | 87 |
| இந்திரதி | 40 |
| இந்திரப் | 66 |
| இப்பதி | 132 |
| இப்பெண் | 73 |
| இப்பெய | 45 |
| இப்பெருந | 67 |
| இப்பெருந் | 51 |
| இமயமீ | 80 |
| இம்மட | 78 |
| இம்முறை | 118 |
| இயற்கை | 101 |
| இரப்பவர் | 17 |
| இரவியோ | 105 |
| இராமா | 101 |
| இருவரும் | 91 |
| இருவிசும் | 24 |
| இருவினை | 41 |
| இல்லமனை | 110 |
| இல்லையெ | 115 |
| இவையெல் | 127 |
| இவ்வரம் | 35 |
| இவ்வாறி | 71 |
| இவ்வாறு | 95 |
| இவ்விடை | 82 |
| இழையா | 98 |
| இளமைச் | 21 |
| இளமையிற் | 117 |

| | ப. எ. |
|---|---|
| இறப்பிஞே | 47 |
| இறைநி | 126 |
| இறைய | 41 |
| இறைவ | 5 |
| இனியமா | 26 |
| இன்றிம் | 110 |
| இன்றும் | 104 |
| இன்றெனை | 87 |
| இன்னணங் | 34 |
| இன்னணமா | 78 |
| இன்னணம் | 132 |
| இன்னநா | 74 |
| இன்னநூ | 117 |
| இன்னவண்ணமி | 97 |
| இன்னவண்ணமே | 124 |
| இன்னவண்ணம் | 96 |
| இன்னவாம்பல | 120 |
| இன்னவாம்வர | 49 |
| இன்னவி | 82 |
| இன்னி | 93 |
| **ஈ** | |
| ஈகையில் | 16 |
| ஈசனபி | 109 |
| ஈசனரு | 112 |
| ஈசனே | 33 |
| ஈதுமுன் | 74 |
| ஈர்த்திடு | 85 |
| ஈறிலா | 21 |
| **உ** | |
| உண்ணீரு | 49 |
| உண்ணுநீ | 129 |
| உண்ணுமு | 121 |
| உண்மைக | 117 |
| உண்மைஞா | 111 |
| உண்மைய | 32 |
| உண்மையு | 83 |
| உத்தரதிசை | 68 |
| உம்மைச் | 121 |
| உயர்கா | 113 |
| உயர்சித் | 117 |
| உயிர்மேவு | 3 |
| உயிர்விடு | 103 |
| உரிமை | 124 |
| உரியகா | 78 |
| உருத்தி | 43 |
| உலகமுய் | 118 |
| உலகம்போ | 105 |
| உலகம்யா | 31 |
| உலகினி | 52 |
| உலகெலா | 40 |
| உலாவிடு | 15 |
| உற்றதன் | 101 |
| உற்றிடு | 81 |
| **ஊ** | |
| ஊரெலா | 18 |
| ஊர்தியா | 48 |
| ஊறுசெய் | 15 |
| ஊனமற்ற | 110 |
| **எ** | |
| எங்களை | 66 |
| எங்குத் | 60 |
| எடுத்திட்ட | 2 |
| எட்டாம் | 122 |
| எண்ணரியே | 38 |
| எண்ணிலா | 132 |
| எண்ணினு | 24 |
| எத்துணை | 31 |
| எந்தைபிரான்மன | 4 |
| எந்தைபிரான்திருச் | 128 |
| எந்தைமு | 11 |
| எம்தம் | 88 |
| எம்பெருமானளித் | 112 |
| எம்பெருமான்றனை | 60 |





| | ப. எ. |
|---|---|
| எம்பொரு | 34 |
| எம்மை | 110 |
| எல்லையில்அருளோ | 65 |
| எல்லையில்லதோர் | 57 |
| எவண் | 65 |
| எவ்வெவ | 99 |
| எழுகின்ற | 64 |
| என்னுமவ் | 38 |
| எனவரை | 86 |
| எனவே | 65 |
| எனுமுரை | 66 |
| என்புநு | 120 |
| என்பெரு | 37 |
| என்றமொ | 46 |
| என்றருட் | 65 |
| என்றனக்க | 85 |
| என்றனக்கு | 79 |
| என்றன்பா | 73 |
| என்றிடு | 61 |
| என்றிறை | 41 |
| என்றுங் | 93 |
| என்றுநா | 59 |
| என்றுமேதுதித் | 48 |
| என்றுமேமாம | 83 |
| என்றுமேயமலன் | 130 |
| என்றுரைத்த | 95 |
| என்றுரைத்தே | 71 |
| என்றுவள் | 105 |
| என்றெணி | 52 |
| என்றென் | 50 |
| என்றே | 122 |
| **ஏ** | |
| ஏகம்பர் | 89 |
| ஏதுகார | 111 |
| ஏயர்கோ | 89 |
| ஏவரும் | 35 |
| ஏழாம் | 56 |
| ஏழிலரன் | 116 |
| **ஐ** | |
| ஐந்திலு | 115 |
| ஐந்தெழு | 127 |
| ஐம்படை | 80 |
| ஐயநீ | 105 |
| ஐயுறே | 99 |
| **ஒ** | |
| ஒப்புயர் | 16 |
| ஒருதின | 77 |
| ஒருநாட் | 99 |
| ஒருமுத | 26 |
| ஒன்பா | 116 |
| ஒன்றிப் | 121 |
| **ஓ** | |
| ஓங்கார | 75 |
| ஓடியோ | 121 |
| ஓராண்டு | 108 |
| **க** | |
| கங்கையி | 128 |
| கங்கையை | 11 |
| கடந்து | 42 |
| கடலுலக | 96 |
| கடவுள்பா | 38 |
| கட்டியே | 59 |
| கண்களி | 93 |
| கண்டமா | 124 |
| கண்ணக | 21 |
| கண்ணுத | 9 |
| கண்ணுவர் | 68 |
| கந்தமிகு | 82 |
| கபிலையி | 69 |
| கம்பன் | 95 |
| கயிலைமலை | 81 |

| | ப. எ. |
|---|---|
| கயிலையி | 47 |
| கருணாகர | 64 |
| கருணையூ | 55 |
| கருணையே | 117 |
| கருவிமா | 104 |
| கலைகளை | 18 |
| கல்வி | 94 |
| களைகளை | 13 |
| கற்பகம் | 78 |
| கற்றவ | 14 |
| களவியு | 55 |
| களவினி | 109 |
| களவுட | 115 |
| கன்மமு | 112 |
| கன்னலை | 15 |
| கன்னிபூ | 118 |
| **கா** | |
| காடுகன் | 12 |
| காணக்காண | 54 |
| காதலிற் | 23 |
| காதலுறு | 5 |
| காதல் ம | 83 |
| காமிகமு | 113 |
| காரணை | 9 |
| கார்நிற | 49 |
| காலகா | 32 |
| காலின் | 57 |
| காவலர் | 101 |
| **கி** | |
| கின்னர | 76 |
| **கு** | |
| குடிகளி | 129 |
| குடைகின் | 94 |
| குப்பியில்நெய் | 121 |
| குமரருங் | 16 |
| குருவை | 119 |
| குற்றமும் | 15 |
| குன்றிடை | 17 |
| **கூ** | |
| கூர்த்த | 11 |
| **கொ** | |
| கொடிச்சி | 17 |
| கொடியம | 39 |
| கொடியவ | 50 |
| கொடியொ | 23 |
| கொடியபா | 120 |
| கொண்ட | 98 |
| **கோ** | |
| கோடிவித்தை | 97 |
| கோடையி | 68 |
| கோபங்கொ | 39 |
| கோபமே | 39 |
| கோவனகரா | 8 |
| கோழியை | 62 |
| கோளரி | 18 |
| **ச** | |
| சங்கரன் | 119 |
| சங்கும் | 106 |
| சங்கேந் | 6 |
| சங்கைபி | 14 |
| சச்சிதா | 52 |
| சத்துசித் | 34 |
| சந்திர | 58 |
| **சா** | |
| சார்ந்தார் | 75 |
| **சி** | |
| சிட்டர் | 49 |
| சித்திர | 81 |
| சிலந்தி | 98 |





| | ப. எ. |
|---|---|
| சிவதரு | 22 |
| சிவபெரு | 4 |
| சிவனரு | 66 |
| சிறந்த | 94 |
| சிறியவா | 116 |
| சிற்பர | 40 |
| சிற்றறி | 15 |
| **சீ** | |
| சீற்றமாய் | 38 |
| **சு** | |
| சுந்தரரு | 19 |
| சுந்தரவ | 76 |
| **சூ** | |
| சூதமா | 119 |
| சூதரு | 125 |
| **செ** | |
| செங்கமல | 6 |
| செந்தமிழு | 80 |
| செந்திளை | 17 |
| செந்நெல் | 96 |
| செல்லுநீர் | 13 |
| செல்லும்பா | 30 |
| செல்வன் | 61 |
| சென்றிட் | 96 |
| செனன | 122 |
| **சே** | |
| சேரமான் | 90 |
| சேர்ந்தமா | 122 |
| **சொ** | |
| சொல்லாய் | 3 |
| **சோ** | |
| சோமசேக | 55 |
| சோலையுட் | 102 |
| சோலைவாய் | 16 |
| **ஞா** | |
| ஞானசம் | 108 |
| ஞானதாண்ட | 54 |
| **த** | |
| தங்கள் | 13 |
| தங்குல | 111 |
| தஞ்சம் | 94 |
| தண்டிஞ | 130 |
| தத்துவ | 53 |
| தம்மைச் | 111 |
| தம்மையே | 21 |
| தரங்க | 100 |
| தருங்கலை | 112 |
| தலையிருந் | 36 |
| தவத்தின | 80 |
| தற்பரா | 33 |
| தனைக்கொ | 41 |
| தன்தந்தை | 5 |
| **தா** | |
| தாயினை | 79 |
| தானவர்குழாந் | 42 |
| தானவர்பு | 58 |
| தானவேச்சுரி | 42 |
| **தி** | |
| திங்கள் | 1 |
| திட்டிதிக் | 112 |
| திருமணந் | 82 |
| திருமாணி | 88 |
| திருமாமண | 87 |
| திருவருட் | 128 |
| திருவிந்த்ர | 63 |
| திருவின் | 21 |
| திருவெண்கா | 107 |
| திருவெண்ணெய்நகர் | 8 |
| திருவெண்ணெய்நல் | 86 |

| | ப. எ. |
|---|---|
| திருவோண | 74 |
| தில்லைவாழு | 59 |
| **தீ** | |
| தீமைதனி | 1 |
| **து** | |
| துடியாற் | 2 |
| துப்பொடு | 16 |
| துன்புசெ | 43 |
| துன்றிய | 26 |
| **தூ** | |
| தூயபுரோ | 113 |
| தூயவெள் | 32 |
| தூய்மை | 125 |
| **தெ** | |
| தெய்வீக | 130 |
| தெளிவுற | 100 |
| தென்றிசை | 119 |
| **தே** | |
| தேசிகன் | 111 |
| தேவர்களும் | 47 |
| **தொ** | |
| தொண்டர் | 89 |
| தொன்மைபோலப் | 106 |
| தொன்மையா | 57 |
| **தோ** | |
| தோற்றமார் | 23 |
| தோற்றமே | 54 |
| **ந** | |
| நதிக்கரை | 70 |
| நந்திமீது | 69 |
| நமக்கார்ச் | 87 |
| நம்பெரு | 49 |
| நம்பியா | 85 |

| | ப. எ. |
|---|---|
| நரியை | 5 |
| நலத்தி | 27 |
| நவநீத | 45 |
| நவ்வென் | 125 |
| நற்கந்த | 45 |
| நற்குஞ்ச | 110 |
| நற்றுறை | 38 |
| நன்றி | 22 |
| நன்றுண | 69 |
| **நா** | |
| நாட்டி | 104 |
| நாதனை | 86 |
| நாவலர் | 102 |
| நாற்குண | 3 |
| நான்கில | 115 |
| நான்மறை | 75 |
| **நி** | |
| நிரைகொ | 63 |
| நிறைந்த | 35 |
| நினதானி | 63 |
| நின்னை | 102 |
| **நீ** | |
| நீதமுட | 61 |
| நீதிசே | 85 |
| நீலியெனு | 46 |
| நீலியென்னும் | 131 |
| **நெ** | |
| நெடுநேர | 60 |
| நெய்கொடு | 14 |
| **ப** | |
| பகரறு | 25 |
| பகைத்திடு | 39 |
| பக்குவ | 126 |
| பங்கயா | 22 |





| | ப. எ. |
|---|---|
| பசித்தவர் | 123 |
| படியோ | 86 |
| பணியெ | 39 |
| பண்டுசெ | 36 |
| பண்ணமை | 23 |
| பதிநிலை | 18 |
| பதினைந் | 122 |
| பதினொன் | 116 |
| பத்தர்பா | 84 |
| பத்திக்கு | 102 |
| பத்திசெ | 129 |
| பத்தியா | 16 |
| பம்புஞ் | 93 |
| பரதநூ | 54 |
| பரம்பொ | 26 |
| பரன்சடை | 70 |
| பலபல | 23 |
| பல்வகை | 28 |
| பழகிடு | 76 |
| பழமை | 106 |
| பழிபிற | 50 |
| பள்ளப் | 93 |
| பனிமதி | 68 |
| பன்னொடு | 90 |
| **பா** | |
| பாட்டெலா | 23 |
| பாதகம் | 70 |
| பாமகள் | 52 |
| பாரகம் | 43 |
| பாரிடை | 38 |
| பாரினி | 70 |
| பாருயிர் | 75 |
| பாரொடு | 52 |
| பார்தரு | 73 |
| பார்த்தன் | 131 |
| பார்முதற்குடிலை | 34 |

| | ப. எ. |
|---|---|
| **பி** | |
| பித்தனே | 83 |
| பிரமனி | 30 |
| பிரமனு | 55 |
| பிலத்தி | 55 |
| பிறந்திட | 28 |
| பிறப்பது | 15 |
| பிறப்பிலா | 32 |
| பிறப்பினி | 50 |
| பிறவியெ | 128 |
| பிறைமுடி | 78 |
| பின்னரும்பெ | 72 |
| பின்னரும்மகத் | 39 |
| பின்னுளுங் | 36 |
| பின்னிரண் | 114 |
| பின்னுஞ் | 97 |
| **பு** | |
| புகல்கின்ற | 63 |
| புண்ணியக் | 124 |
| புண்ணியங் | 10 |
| புண்ணியத் | 75 |
| புலவரவை | 70 |
| புலவர் | 97 |
| புலவி | 13 |
| புல்லிய | 14 |
| புவிமனை | 91 |
| புழுக்க | 121 |
| புற்செதுக் | 87 |
| புனித | 27 |
| **பூ** | |
| பூதகணம் | 76 |
| பூமகள் | 20 |
| பூமிசை | 27 |
| **பெ** | |
| பெண்ணிரு | 2 |
| பெண்ணை | 12 |

| | ப. எ. |
|---|---|
| பெரியர் | 123 |
| பெருமிடி | 80 |
| பெருமை | 132 |
| பெரும்பி | 41 |
| **பே** | |
| பேரழகெல் | 80 |
| பேரறிவை | 127 |
| **பொ** | |
| பொள்ளா | 110 |
| பொறுமை | 41 |
| பொன்பொ | 59 |
| பொன்னி | 70 |
| **போ** | |
| போகமு | 68 |
| போதனே | 48 |
| போதுறு | 14 |
| போந்திடு | 59 |
| **ம** | |
| மகரமதியை | 128 |
| மக்களிற் | 12 |
| மக்களும் | 12 |
| மங்கல | 45 |
| மங்குலே | 16 |
| மங்குலெ | 2 |
| மங்கைநாயகனிவ் | 105 |
| மங்கைநாயகியும் | 61 |
| மங்கையர் | 19 |
| மஞ்சுவா | 12 |
| மணந்தரு | 35 |
| மணம்வரு | 81 |
| மண்ணிடை | 73 |
| மண்ணிலு | 44 |
| மண்ணினி | 11 |
| மண்வெட் | 37 |
| மந்திரங் | 53 |
| மருட்டுறை | 41 |
| மருதிடை | 69 |
| மலருடனே | 8 |
| மள்ளர்கள் | 13 |
| மறந்தரு | 11 |
| மறந்தும | 115 |
| மறைகள் | 32 |
| மறையவ | 85 |
| மறையெலா | 53 |
| மற்றவர் | 91 |
| மன்றல் | 81 |
| மன்றினி | 120 |
| மன்னவர்கள் | 81 |
| மன்னவன்வே | 129 |
| மன்னிய | 22 |
| **மா** | |
| மாசிலா | 50 |
| மாணவ | 111 |
| மாணிமு | 19 |
| மாதங்கி | 44 |
| மாதமும் | 49 |
| மாதலந் | 79 |
| மாதவன் | 131 |
| மாதுபா | 53 |
| மாமுகிலெ | 9 |
| மாயமுக்கு | 54 |
| மாயையாலவன் | 43 |
| மாயையாம்நகர | 126 |
| மாயையி | 57 |
| மாயையை | 54 |





| | ப. எ. |
|---|---|
| **மீ** | |
| மீட்டும் | 90 |
| மீண்டும | 39 |
| மீனவன் | 104 |
| **மு** | |
| முகில்கள் | 105 |
| முக்கணே | 33 |
| முதற்குத் | 114 |
| முதுமறை | 86 |
| முதுமை | 103 |
| முந்திய | 68 |
| முந்தியு | 117 |
| முனிவரெ | 39 |
| முன்னர் | 103 |
| முன்னவனுங் | 114 |
| முன்னவனுகிய | 38 |
| முன்னவை | 86 |
| முன்னுளி | 64 |
| முன்னின் | 114 |
| முன்னைநா | 30 |
| முன்னைய | 24 |
| **மூ** | |
| மூங்கிலாய் | 33 |
| மூலகார | 104 |
| மூவருங் | 91 |
| மூன்றுகூடிய | 32 |
| **மே** | |
| மேதிகளொ | 49 |
| மேதிமா | 42 |
| மேலவன் | 11 |
| **மை** | |
| மைந்துடை | 82 |
| **வ** | |
| வண்ணமா | 77 |
| வந்ததம் | 111 |
| வந்துமே | 30 |
| வயலினி | 13 |
| வயல்க | 105 |
| வரந்தனை | 100 |
| வருகின்ற | 95 |
| வருணமா | 131 |
| வருவிருந் | 25 |
| வலியவர் | 4 |
| வல்வினை | 92 |
| வள்ளல்தானு | 106 |
| வள்ளவாய்க் | 12 |
| வறுமைநிலையி | 102 |
| வறுமையுளான் | 108 |
| வனசமீ | 69 |
| வனவேட | 62 |
| வன்னிபீ | 40 |
| **வா** | |
| வாணிகேள் | 21 |
| வாமபாத | 54 |
| வாயைத்திற | 110 |
| வாய்பேசாக் | 108 |
| வாய்பேசாத | 109 |
| வானநாயக | 106 |
| வானம் நி | 105 |
| வானவரி | 62 |
| வானுறு | 77 |

ப. எ.

வி

விண்குளிர் 43
விண்டுவும் 82
விண்ணிடை. 87
வில்லியர் 17

வீ

வீரவாகு 59

வெ

வெண்கமல 7
வெண்சுதை 22
வெண்ணெயம்பதி 92
வெண்ணெயெயில் 46
வெண்ணெய்ச்சடையனி 98
வெண்ணெய்ச்சடையனீ 97
வெண்ணெய்நல்லூர்அ 9
வெண்ணெய்நல்லூரைத் 40
வெண்ணெய்மா 27
வெண்ணெய்வாழ் 107
வெண்ணெய்வைத் 29
வெள்ளிவெ 53
வெற்றி 60

வே

வேணுவாகி 33
வேதங்களகழ்ந்த 131
வேதங்கள்மு 52
வேதமே 12
வேதமோ 54
வேற்றா 94

வை

வையக 83


உ
சிவமயம்

# திருவருட்டுறைப் புராணம்

## அரும்பத உரை

அ

அகடு - வயிறு
அகம் - வீடு
அகழும் - தோண்டும்
அகழ்ந்த - தோண்டிய
அகிலம் - உலகம்
அங்கணர் - சிவன்
அங்கி - அக்கினி
அசரம் - அசையாப்பொருள்
அசரீரி - ஆகாசவாணி
அச்சுதன் - திருமால்
அஞ்சேல் - பயப்படாதே
அடர்த்ததால் - வருத்தியதால்
அடல் - வலி
அடவி - காடு
அட்டில் - அடுக்களை
அணி - அழகு, அடுக்கு, ஆபரணம்
அணிகலன் - ஆபரணம்
அண்ணல் - சிவன், பெருமை, மெய்கண்டார்
அண்மி - அணுகி
அண்மை - சமீபம்
அதரம் - உதடு
அதள் - தோல்
அதிகை - திருவதிகை
அதீதம் - கடந்தது
அத்தன் - கடவுள், சிவன், முருகன்
அத்திமுகன் - கணபதி
அநிலம் - காற்று
அந்தகன் - ஓர் அசுரன்
அந்தமிலா - முடிவில்லாத
அந்தம் - அழகு
அந்திவண்ணன் - சிவன்
அபரம் - பின்
அமரர் - தேவர்
அமலம் - புனிதம்
அமலன் - சிவன்
அமை - மூங்கில்
அமைவு - அடக்கம்
அம்புயம் - தாமரை
அயன் - பிரமன்
அயிராவதம் - இந்திரன் யானை
அயில் - வேல்
அயினி - ஆலத்தி
அரசு - அப்பர்
அரம்பை - வாழை
அரம்பையர் - தேவலோகமாதர்
அரி - திருமால்
அரியணை - சிங்காசனம்
அரிவைமார் - பெண்கள்
அருட்டுறை- அருளுக்கிருப்பிடம்
அருணை - திருவண்ணமலை
அருத்தி - அன்பு
அருந்தவர் - முனிவர்
அர்க்கியம் - மந்திரநீரிறைத்தல்

அலங்கல் - மாலை
அலரவன் - பிரம்மா
அலவன் - நண்டு
அல் - இருள்
அல்லல் - துன்பம்
அவணிவண் - அங்கு இங்கு
அவத்தினர் - வீணர்
அவனி - பூமி
அவா - ஆவல்
அவிசு - தேவருணவு
அவுணர் - அசுரர்
அவை - சபை
அவைக்களம் - இராஜசபை
அவையினர் - சபையோர்
அவையோர் - சபையினர்
அவ்வியம் - அழுக்காறு
அழல் - தீ
அளகம் - கூந்தல்
அளி - கிருபை
அளி - வண்டு
அள்ளல் - குழைசேறு
அறம் - தருமதேவதை
அறல் - கருமணல், நீர்
அறைகின்ற - சொல்லுகின்ற
அறைய - சொல்ல
அன்னணம் - அவ்விதம்
அன்னவூர்தி - பிரமன்

ஆ

ஆ - பசு
ஆக்கம் - செல்வம்
ஆங்கண் - அவ்விடம்
ஆசமனம் - மந்திரநீருட் கொள்ளல்
ஆசான் - குரு (வியாழன்)
ஆடி - கண்ணாடி
ஆடை - உடை
ஆட்சி - உரிமை
ஆணை - கட்டளை
ஆதங்கம் - உபத்திரவம்
ஆதரம் - அன்பு
ஆதவர்கள் - சூரியர்கள்
ஆதித்தன் - சூரியன்
ஆதுரம் - அவா
ஆதுலர் - தரித்திரர்
ஆயர் - இடையர்
ஆர - நிரம்ப
ஆரணம் - வேதம்
ஆரணி - துர்க்கை
ஆரியம் - வடமொழி
ஆரூரன் - சுந்தரர் முன்னோர்
ஆர்தல் - தங்குதல்
ஆர்த்தி - ஆவல்
ஆர்த்திடு - ஆரவாரஞ்செய்
ஆர்ந்து - நிறைந்து
ஆர்ப்பு - ஒலி
ஆர்வம் - ஆவல்
ஆலகாலம் - விஷம்
ஆலம் - விஷம்
ஆலாலம் - விஷம்
ஆவணம் - முறியோலை
ஆவி - உயிர்
ஆவுரிஞ்சி - பசுஉராயும் கல்
ஆழி - கடல், சக்கரம்
ஆற்றல் - வல்லமை
ஆற்றி - செய்து
ஆற்றும் - புரியும்
ஆனைமுகன் - கணபதி
ஆன் - பசு
ஆன்ற - மாட்சிமையுடைய

இ

இசை - புகழ், பாட்டு
இடங்கர் - முதலை
இடபம் - ரிஷபம், வைகாசிமாதம்
இடர் - துன்பம்
இடறு - ஆபத்து



இடுக்கண் - துன்பம்
இட்டி - யாகம்
இதம் - நன்மை
இதயம் - மனம்
இந்திரதனு - வானவில்
இந்திரதிசை - கிழக்கு
இந்து - சந்திரன்
இபமாமுகன் - கணபதி
இப்பி - சிப்பி
இமையவர் - தேவர்
இம்பர் - இவ்வுலகம்
இயம்ப - சொல்ல
இயம்பிட - சொல்ல
இரக்கம் - கிருபை
இரந்தரம் - துவாரம்
இரந்தான் - இரங்கிவேண்டினன்
இரப்பவர் - யாசிப்பவர்
இரவலர் - யாசிப்போர்
இருக்கு - மந்திரம், வேதம்
இருணிலம் - நரகம்
இரை - சப்தம்
இலகுகின்றது - ஒளிசெய் கின்றது
இலங்கிடும் - விளங்கும்
இலங்கும் - விளங்கும்
இலஞ்சி - குளம்
இல் - வீடு
இவண் - இவ்விடம்
இவர்தல் - ஏறிச்செலுத்துதல்
இழுக்கு - இழிவு
இழைத்தது - செய்தது
இளவல் - குழந்தை
இறை - கடவுள்
இறைஞ்ச - வணங்க
இறைஞ்சி - வணங்கி
இறைஞ்சினர் - வணங்கினர்
இறைஞ்சுவோம் - வணங்கு வோம்
இறைவன் - அரசன்
இனம் - பசுக்கூட்டம்
இனன் - சூரியன்
இனையன - இத்தன்மையான
இன்னணம் - இவ்விதம்
இன்னல் - துன்பம்
இன்னியம் - இனியவாத்தியம்

ஈ

ஈகை - ஈதல்
ஈறிலா - முடிவில்லாத

உ

உகிர் - நகம்
உகும் - உதிரும்
உச்சை - இந்திரன் குதிரை
உடற்ற - வருத்த
உடு - நட்சத்திரம்
உணக்கி - வாட்டி
உதகம் - நீர்
உதரம் - வயிறு
உதள் - மேடம்
உத்தரம் - வடக்கு
உந்தி - கொப்பூழ்
உந்துற - செலுத்த
உமணர் - உப்பமைப்போர்
உமாபதி - சிவன்
உம்பர் - தேவர்
உம்பர்கோன் - இந்திரன்
உம்பர்பிரான் - கடவுள்
உம்பல் - குலம்
உய்த்திட - விட
உய்மின் - கடைத்தேறுங்கள்
உய்வகை - பிழைக்கும் உபாயம்
உரம் - மார்பு, வலி
உரகம் - பாம்பு
உரிவை - தோல்
உருத்திரம் - கோபம்
உலந்தார் - முடிந்தவர்
உலப்பிலா - கேடில்லாத

உலவாத - குறைபடாத
உவந்து - மகிழ்ந்து
உவரி - உப்புத்தன்மை, கடல்
உவா - பௌர்ணமி
உழை - மான்
உளம் - மனம்
உள்ளம் - மனம்
உறழ் - போன்ற
உறழ்வு - போர்
உறுதல் - அடைதல்
உற்றேன் - வந்தேன்
உன்னி - நினைத்து
உன்னிய - நினைத்த
உன்னினர் - நினைத்தார்
உன்னுதல் - நினைத்தல்
உன்னும் - நினைக்கும்

ஊ

ஊர்தி - வாகனம்
ஊழி - உலகமுடிவுகாலம்
ஊறு - துன்பம்
ஊனமற்ற - குற்றமற்ற

எ

எகினம் - அன்னப்பறவை
எண்ணரில் - கணக்கற்ற
எண்மை - எளிமை
எந்தை - சிவன்
எம்மையும் - எப்பிறப்பும், எவ்விடத்தும், எக்காலத்தும்
எம்பர் - எவ்விடம்
எயில் - மதில்
எயிறு - பல்
எய்துவர் - அடைவர்
எரி - தீ
எரிநாள் - பூரம்
எல்லி - சூரியன்
எவனும் - எவ்விடத்தும்
எவ்வம் - துன்பம்
எள்ளும் - இகழும்

ஏ

ஏ - அம்பு
ஏகம் - தனி
ஏகி - சென்று
ஏதமார் - குற்றம் நிரம்பிய
ஏதம் - குற்றம்
ஏது - காரணம்
ஏத்த - துதிக்க
ஏத்தாத - துதிசெய்யாத
ஏத்தி - துதித்து
ஏத்திய - துதித்த
ஏத்தினோர் - துதித்தோர்
ஏத்தும் - துதிசெய்யும்
ஏத்துவாம் - துதிசெய்வோம்
ஏந்தல் - அரசன், சடையன், சுந்தரர், மெய்கண்டார், முருகன்
ஏந்தால் - சிவனே
ஏமம் - களிப்பு
ஏய்ந்துளது-பொருந்தியுள்ளது
ஏர் - அழகு
ஏறு - ரிஷபம்

ஐ

ஐக்கியம் - ஒன்றிப்பு
ஐந்துயர் - தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், பிற உயிரால்
ஐம்பொருள் - ஐம்பூதம் (மண், நீர், தீ, காற்று, ஆகாயம்)
ஐயமின்று - சந்தேகமில்லை
ஐயம் - பிச்சை

ஒ

ஒண்டொடி - பெண்
ஒரீஇ - நீங்கி



ஒளிரும் - பிரகாசிக்கும்
ஒளிர் - பிரகாசிக்கின்ற
ஒறுத்தல் - தண்டித்தல்
ஒறுவு - வருத்தம்
ஒன்றான் - சேரான்
ஒன்றி - சேர்ந்து

ஓ

ஓங்கல் - மலை
ஓடதி - சாகபக்ஷணம்
ஓதனம் - உணவு
ஓதை - ஒலி
ஓம்ப - பாதுகாக்க
ஓரும் - ஆராயும்
ஓரை - நாழிகை
ஓர்ந்திலர் - அறிந்திலர்
ஓர்ந்து - ஆராய்ந்து

ஔ

ஔவியம் - பொறாமை

க

கங்குல் - இரவு
கசடற - குற்றம்நீங்க
கசிந்து - மனம்இளகி
கஞ்சம் - தாமரை
கடற்பிணா - நெய்தல்நிலப்பெண்
கடி - அழகு, வாசனை
கடிதில் - விரைவில்
கடிது - விரைவு
கடிய - கொடிய
கடு - விஷம்
கடுக்கும் - நிகர்க்கும்
கடுக்கை - கொன்றை
கடை - கீழ்
கடைசியர் - மருதநிலப்பெண்கள்
கட்செவி - பாம்பு
கணிதம் - சோதிடம்
கணியா - கண்டு
கணித்துள்ள - குறிப்பிட்ட
கணை - அம்பு
கண் - இடம்
கண்டகன் - அசுரன்
கண்டிகை - உருத்திராக்கம்
கண்ணுதல் - சிவன்
கதலி - வாழை
கதிர் - ஒளி
கதுமென - விரைய
கதுவ - பற்ற
கந்தம் - வாசனை
கபிலை - பசு
கப்பிய - மூடிக்கொண்ட
கமலம் - தாமரை
கமுகு - பாக்குமரம்
கமை - பொறுமை
கம்புள் - சங்கு
கயம் - குளம்
கயல் - மீன்
கரணம் - மனம், வாக்கு, காயம்
கரந்த - மறைந்த, மறைத்துவைத்த
கரந்தனர் - மறைந்தார்
கரப்பு - களவு
கரவு - ஒளித்தல்
கரி - சாட்சி, யானை
கரும்பொன் - இரும்பு
கலிக்கும் - ஒலிக்கும்
கலை - சாத்திரம், மரக்கொம்பு
கவனம் - வேகம்
கவான் - தொடை
கவினி - அழகுறவிளங்கி
கவின் - அழகு
கவ்வு - பெருமை
கழகம் - கல்வி பயிலிடம்
கழல் - திருவடி
கழறல் - சொல்லல்
கழறும் - சொல்லும்

கழை - கரும்பு, மூங்கில்
களகம் - பெருச்சாளி
களம் - இடம்
களிறு - யானை
களைகண் - ஆதரவு
கறங்க - ஒலிக்க
கறங்கி - ஒலித்து
கறப்பு - கறத்தல்
கறை - கறுப்பு
கற்பகம் - தேவதாரு
கற்பம் - யுகம்
கனகம் - பொன்
கனல் - தீ
கனன்று - சீறி
கன்றிடேல் - வருந்தாதே
கன்றிய - கோபித்த
கன்னல் - கரும்பு

கா

கா - காப்பாற்று
காசினி - உலகம்
காஞ்சிரம் - எட்டிக்காய்
காட்சி - பிரத்தியட்சம்
காட்டூர் - புறவார் பனங்காட்டூர்
காண்டீபன் - அருச்சுனன்
காதல் - காமஇச்சை
காந்தும் - மனவெறுப்போடிருந்த
காமியம் - இச்சிக்கும் பொருள்
காமுகர் - தூர்த்தர்
காமுற - விரும்ப
காயம் - சரீரம்
காயத்திரி - மந்திரம்
காரணிகண்டர் - சிவன்
காரா - எருமை
காரிகை - பெண்
கார் - மேகம்
கால் - காற்று
காவலர் - மெய்காப்பாளர்
காளமேகம் - இருண்ட மேகம்
காளி - சிங்கம் (ஆவணி)
கானம் - காடு
கான் - காடு
கான்முளை - குழந்தை

கி

கிம்புருடர் - தேவலோக இசைவாணர்
கிரி - மலை
கிரீசர் - சிவன்
கிரீடி - அருச்சுனன்
கிளத்தல் - சொல்லல்
கிளருமுன் - சூரியனுதிக்குமுன்
கிளரும் - மிகுந்த
கிளர்ந்தெழ - மிகுதியாகத் தோன்ற
கின்னரர் - தேவருள் ஒருவர்

கீ

கீதம் - இசைப்பாட்டு

கு

குசை - தருப்பை
குஞ்சரம் - யானை
குடத்தியர் - இடைச்சியர்
குடிலம் - ஆகாயம்
குடிலை - பிரணவம்
குட்சி - வயிறு
குண்டிகை - குடம்
குதம் - மலவாயில்
குதிர் - நெற்கூடு
குந்தம் - வைகுந்தம்
குயிற்றும் - செய்யும்
குய்யம் - ஆண்குறி
குரம் - தருப்பை
குரவர் - குருமார்
குரவை - கூத்து
குருதி - இரத்தம்



குலவி - அளவளாவி, பிரகாசித்து
குவலயம் - பூமி, உலகினர்
குவை - குவித்தல்
குழகன் - சிவன்
குழல் - கூந்தல்
குழவி - குழந்தை
குழாம் - கூட்டம்
குழு - கூட்டம்
குழுமி - கூடி
குழுமினர் - கூடினர்
குழுவினர் - கூட்டத்தார்
குறங்கு - தொடை
குறிஞ்சி - மலைப்பிரதேசம்
குறும்பொறை - காடு
குன்றம் - விருத்தாசலம்

கூ

கூரம் - பொருமை
கூன் - வளைவு

கே

கேணி - கிணறு
கேண்மின் - கேளுங்கள்
கேந்திரம் - சிறந்த இடம்
கேள்வன் - கணவன்

கொ

கொங்கு - வாசனை
கொடிச்சியர் - குறிஞ்சிநிலப் பெண்கள்
கொண்டல் - மேகம்
கொய்தல் - பறித்தல்
கொய்திடுகாலை-பறிக்கும் சமயம்
கொழுகொம்பு - ஆதாரமாயிருப்பது
கொழுநா - கணவனே

கோ

கோ - தலைவன், பசு
கோடு - கொம்பு
கோட்பு - கொள்ளுதல்
கோதில் - குற்றமற்ற
கோதை - பெண், பார்வதி, பரவை
கோரம் - கொடுமை
கோலம் - அழகு
கோவல் - திருக்கோவலூர்
கோளகை - வட்டம்
கோளரி - சிங்கம்
கோள் - கிரகம்
கோன் - கடவுள்

கௌ

கௌவை - துன்பம்

ச

சகம் - உலகம்
சங்கை - நாணம்
சசி - சந்திரன், இந்திராணி
சஞ்சிதம் - கட்டுப்பட்டவினை
சடிலம் - சடை
சதனம் - வீடு
சதுரர் - அறிஞர்
சத்தி - பார்வதி
சந்தி - நியமம்
சபதி - விரைவு
சமயம் - மதம்
சமர் - சண்டை
சமீரணன் - காற்று
சரணம் - திருவடி
சரண் - அடைக்கலம்
சரதம் - சத்தியம்
சரம் - அம்பு, அசையும்பொருள்
சலம் - கங்கை, கோபம்
சலதி - கடல்
சனம் - மீன்

சா

சாகரம் - கடல்
சாந்தம் - சந்தனம்

சாரூப்யம் - கடவுளருள் பெற்றிருத்தல்
சாலி - நெல்
சாறு - திருவிழா
சாற்றல் - சொல்லல்
சாற்றினர் - கூறினர்

சி

சிகரம் - உச்சி
சிட்டர் - நல்லோர்
சிதறலானுர் - சிந்தினர்
சிதைத்து - அழித்து
சிந்து - சிதறிய, கடல்
சிந்தை - மனம்
சிம்புள் - சரபபக்ஷி
சிலதர் - ஏவலாளர்
சிவணி - கலந்து
சிறகர் , சிறகு
சிற்பரன் - சிவன்
சினந்து - ஆரவாரித்து
சினம் - கோபம்
சின்னம் - வாத்தியம்

சீ

சீதம் - குளிர்ச்சி
சீதரன் - திருமால்
சீயம் - சிங்கம்
சீரை - மரவுரி
சீற்றம் - கோபம்

சு

சுக்கிலம் - இந்திரியம்
சுட்டுதற்கு - குறிப்பிடுதற்கு
சுரர் - தேவர்
சுருதிகள் - வேதங்கள்
சுருள் - பெண்மயிர்
சுவர்க்கம் - முலை, சுவர்க்க போகம்
சுறவினம் - சுறாமீன்கூட்டம்
சுற்றத்தார் - கிளைஞர்

சூ

சூலி - துர்க்கை
சூழல் - இடம்

செ

செகம் - உலகம்
செகுத்திடல் - அழித்தல்
செங்கமலம் - செந்தாமரை
செப்பு - செம்பு
செம்புனல் - உதிரம்
செயிர்த்தல் - கோபித்தல்
செய் - வயல்
செரு - சண்டை
செருக்கு - கர்வம்
செவ்விய - அழகிய
செவ்வியது - செம்மையானது
செவ்வேள் - முருகன்
செறிந்திட - நெருங்க
செறிந்திடு - நெருங்கிய
செறுநர் - பகைவர்
சென்னி - தலை, சோழன்

சே

சேகரன் - தரித்தவன்
சேண் - ஆகாயம்
சேதகம் - சேறு
சேதனம் - அறிவு
சேந்தன் - முருகன்
சேமம் - சுகம்
சேயது - தூரம்
சேய் - பிள்ளை, செவ்வாய்
சேரலர் - பகைவர்

சை

சைவலம் - பாசி

சொ

சொரி - பொழி
சொன்னபதுமை-தங்கவிக்கிரகம்



சோ

சோணிதம் - இரத்தம்
சோதி - ஒளி
சோபம் - சோர்வு
சோமன் - சந்திரன்

ஞா

ஞாலம் - பூமி
ஞாழல் - குங்குமப்பூ

த

தகரம் - மயிர்ச்சாந்து
தகர் - ஆடு
தகர்த்து - அழித்து
தகவு - பெருமை
தஞ்சம் - அடைக்கலம்
தடம் - இடம், குளம், விசாலம்
தடிந்து - தண்டித்து
தண்ணளி - கிருபை
தண்புனல் - குளிர்ந்த நீர்
ததி - தயிர், சமயம்
தத்து - பாயும்
தத்தை - கிளி
தநயம் - மகன்
தம்பம் - நிலை
தம்பிரான் - சிவன்
தரணி - பூமி
தரணிபர் - அரசர்
தரணியோர் - மக்கள்
தரம் - தகுதி
தரளம் - முத்து
தராபதி - அரசன்
தரு - மரம், கற்பகம்
தருக்கி - அலங்கரித்து
தருணம் - சமயம்
தர்ப்பணம் - மந்திரநீரிறைத்தல்
தழல் - தீ
தளி - ஆலயம்
தளை - கட்டு
தறை - பூமி
தற்பரன் - சிவன்
தனு - உடல், வில்

தா

தாணு - சிவலிங்கம்
தாபதர் - முனிவர்
தாபம் - துன்பம்
தாமம் - மாலை, பெருமை
தாரகம் - பிரணவம்
தாரணி - உலகம்
தார் - மாலை
தாளாண்மை - ஊக்கம்
தானவர் - அசுரர்

தி

திகிரி - மூங்கில்
திங்கள் - சந்திரன்
திடர் - மணற்குன்று
திட்டி - கண்
திண்மை - பலம்
திப்பிய - திவ்விய
திரன் - திரட்சி
திரிபுராந்தகன் - சிவன்
திரிபுறல் - மாறுபாடடைதல்
திரு - செல்வம், இலக்குமி
திருட்டி - பார்வை
திருமஞ்சனம் - அபிடேகம்
திருநீறு - விபூதி
திளைத்திடும் - அனுபவிக்கும்

தீ

தீ - நெருப்பு
தீதறு - குற்றமற்ற
தீதுறு - தீமையுடைய
தீரம் - ஆற்றங்கரை
தீர்வில் - முடிவில்
தீர்த்தன் - சிவன்
தீனர் - இரப்போர்

து

துகளறவே - குற்றமின்றி
துகளில் - குற்றமற்ற

துகள் - குற்றம், புழுதி
துங்கம் - பரிசுத்தம்
துச்சம் - வெறுமை
துஞ்சி - இறந்து
துஞ்சுமளவு - இறக்கும்வரை
துடி - உடுக்கை
துணை - உதவி
துண்டம் - முகம்
துதைந்து - நெருங்கி
துந்துமி - ஓர்வாத்தியம்
துப்பு - பவளம்
துப்புரவு - முழுமையும்
தும்பிமுகன் - கணபதி
துயில - தூங்க
துய்த்து - அனுபவித்து
துய்ப்பதான - அனுபவிக்கும்
துய்ப்பார் - அனுபவிப்பார்
துய்ப்போர் - அனுபவிப்போர்
துரிசறு - குற்றமற்ற
துரியம் - சுத்தநிலை
துருவி - ஆராய்ந்து
துவம் - சத்துவம்
துவர் - பவளம்
துவேடம் - வெறுப்பு
துவ்வாது - வெறுப்பின்றி
துழனி - ஒலி
துளங்கு - ஆட்டங்கொண்டுள்ள
துறை - நெல்வாயிலறத்துறை
துனி - அச்சம்
துன்றிய - நெருங்கிய
துன்று - நெருங்கி
துன்றும் - நெருங்கும்
துன்னி - நெருங்கி
துன்னிய - நெருங்கிய

**தூ**

தூ - பரிசுத்தம்
தூய - பரிசுத்தமான
தூயர் - சிறந்தவர்
தூய்மை - பரிசுத்தம்
தூரியம் - எழுதுகோல்
தூளம் - புழுதி

**தெ**

தெக்கணம் - தென்திசை
தெய்வதம் - கடவுள்
தெரிவை - பெண்
தெரிவையர் - பெண்கள்
தெருள் - தெளிவு
தெறித்தன - சிந்தின
தெற்றி - திண்ணை

**தே**

தேசு - அழகு
தேவர்கோட்டம் - கோயில்
தேனு - பசு, எருமை பொதுப் பெயர்

**தை**

தையல் - பெண்

**தொ**

தொடக்கு - கட்டு
தொடை - மாலை
தொடையல் - மாலை
தொல் - பழமை
தொல்லை - பழமை
தொழுநோய் - குஷ்டம்
தொனி - ஒலி
தொன்மை - பழமை

**தோ**

தோகை - மயில், பார்வதி
தோகைபாகன் - சிவன்
தோகையர் - பெண்கள்
தோமறு - குற்றமற்ற
தோயம் - நீர்
தோன்றல் - மெய்கண்டார்

**ந**

நக்கன் - சிவன்
நங்கை - பார்வதி பரவையார்
நங்கையர் - பெண்கள்



நசை - விருப்பம்
நஞ்சு - விஷம்
நம்பன் - சிவன்
நம்பி - ஆண்மகன், சுந்தரர்
நலிக - வருத்துக
நல்க - கொடுக்க
நல்கு - தா
நல்கும் - தரும்
நல்லார் - பெண்கள்
நவில - சொல்ல
நவிலினும் - சொல்லினும்
நவில்வர் - சொல்வார்
நவின்றிடு - சொன்ன
நவை - குற்றம்
நவ்வி - பார்வதி
நளிர் - குளிர்ச்சி
நறுநெய் - பசுநெய்
நறை - வாசனை
நனி - மிகுதி

**நா**

நாகர் - தேவர்
நாகமீன் - அருந்ததி
நாணம் - வெட்கம்
நாப்பண் - நடு
நாமம் - அச்சம்
நாயகன் - சிவன்
நாரம் - நீர், அன்பு
நார் - அன்பு
நால்வாய் - தொங்குகிறவாய்
நாவாய் - மரக்கலம்
நாறு - முளை

**நி**

நிகர்க்கும் - சமானமாகும்
நிகழ்த்திடுவான் - கூறுவான்
நிகழ்த்தும் - சொல்லும்
நிசிசரன் - தாருகன்
நிச்சம் - நிச்சயம்
நிதி - செல்வம்
நிமலன் - சிவன்
நிமலி - பார்வதி
நிரப்பு - வறுமை
நிருபரவை - ராஜசபை
நிருமலன் - சிவன்
நிரை - பசுக்கூட்டம்
நிரையம் - நரகம்
நிலமகள் - பூமிதேவி
நிவகம் - திரள்
நிவந்து - உயர்ந்து
நின்மலன் - சிவன்

**நீ**

நீர் - ஜலம்
நீர்மை - ஒப்புரவு
நீவிய - தடவிய
நீறு - விபூதி

**நு**

நுகர்கின்ற - அனுபவிக்கின்ற
நுண்மை - நுட்பம்
நுதல் - நெற்றி
நுவல - சொல்ல
நுவலாநிற்பர் - சொல்வர்
நுவல்கின்ற - சொல்லுகின்ற
நுவன்றார் - கூறினார்
நுளச்சி - வலைச்சி

**நெ**

நெய் - தைலம்
நெய்தல் - கடற்பிரதேசம்
நெறி - ஒழுக்கம், வழி

**நே**

நேடி - தேடி
நேமி - சக்கரம்
நேரியது - நேர்மையானது
நேர்வான் - வேண்டுவான்

**நோ**

நோற்று - தவம்புரிந்து
நோன்பு - தவம்

ப

பகடு - எருது
பகரும் - சொல்லும்
பகர் - சொல்லிய
பகர்வேன் - சொல்வேன்
பக்கணம் - பலகாரம்
பங்கயம் - தாமரை
பங்கயாசனன் - பிரமன்
பசு - உயிர்
பசுஞானம் - ஆன்மஞானம்
பஞ்சை - அற்பம்
படர்தல் - படருதல்
படி - பூமி
படியோலை - நகல்
படிவம் - உருவம்
படுத்தல் - பொருந்தச்செய்தல்
படை - ஆயுதம், சேனை
பணி - ஆபரணம், தொண்டு
பணித்தனர் - கட்டளையிட்டனர்
பணித்து - கட்டளையிட்டு
பணிந்து - வணங்கி
பணிலம் - சங்கு
பணை - வயல்
பண் - இசை
பண்டு - பழமை
பண்ணவர் - முனிவர், தேவர்
பண்ணை - வயல்
பதகன் - துஷ்டன்
பதடி - பதர்
பதம் - மோட்சம்
பதி - கடவுள்
பதிநூல் - கடவுளை உணர்த்தும் நூல்
பதுமை - இலக்குமி
பத்திமை - பக்தி
பத்திரை - துர்க்கை
பந்தம் - கட்டு
பம்பு - ஆரவாரம்
பம்பும் - நெருங்கும்
பயந்த - பெற்ற
பயப்பது - அளிப்பது
பயிலல் - பழகல்
பயிற்றிலரேல் - போதிக்காவிடில்
பயின்று - படித்து
பரசு - மழு
பரதம் - நடனம்
பரந்த - விரவியுள்ள
பரந்தாமம் - வைகுண்டம்
பரவுதல் - வணங்கல்
பரன் - சிவன்
பரி - குதிரை
பரிதி - சூரியன்
பரிந்து - அன்புடன்
பரிபவம் - துன்பம்
பரிவு - அன்பு
பலாலம் வைக்கோல்
பல்க - பெருக
பல்கி - பெருகி, பரவி
பல்லியம் - பலவாத்தியம்
பவம் - பாவம்
பவனன் - காற்று
பவனி - ஊர்வலம்
பவன் - சிவன்
பழனம் - வயல்
பனவன் - சுந்தரர்
பனுவல் - பாடல்
பன்னகம் - பாம்பு
பன்னி - மனைவி
பன்னு - சொல்கின்ற
பன்னுவது - சொல்வது

பா

பாகல் - பலாமரம்
பாங்கர் - பக்கம்
பாங்கு - அழகு
பாசம் - கட்டு
பாண் - இசை
பாதபம் - மரம்
பாமகள் - சரஸ்வதி



பாரகம் - பூமி
பார் - பூமி
பார்த்தன் - அர்ச்சுனன்
பாலித்தல் - அளித்தல்
பாவையர் - பெண்கள்
பாறு - கழுகு
பானல் - வயல்
பானு - சூரியன்
பான்மை - தன்மை, தகுதி

பி

பிஞ்ஞகன் - சிவன்
பிணை - பெண்மான்
பிநாகினி - பெண்ணை நதி
பிம்பம் - அடையாள உருவம்
பிரசம் - தேன்
பிரமை - மயக்கம்
பிராரத்துவம் - அநுபவிக்கும் கன்மம்
பிழம்பு - திரட்சி
பிறங்கும் - விளங்கும், ஒளி செய்யும்
பிறழ்கிலா - வேறுகாத
பிறை - சந்திரன்
பின்னம் - நீர்த்துளி

பீ

பீசம் - மூலம்
பீடை - பாழாதல்
பீர் - முலைப்பால்
பீழை - துன்பம்

பு

புகர்மாமுகன் - கணபதி
புங்கவர் - தேவர்
புடவி - பூமி
புடை - பக்கம்
புணரி - கடல்
புணர்ப்பு - தந்திரம், சம்பந்தம்
புணை - தெப்பம், மூங்கில்
புத்துடை - புதிய ஆடை
புந்தி - புத்தி
புயல் - மேகம்
புரம் - நகர்
புரவி - குதிரை
புராதனன் - சிவன்
புராரி - சிவன்
புரி சுருள்
புரை - குற்றம், சமம் (உவமை)
புலவை - அறிவு
புலம் - அறிவு, வயல்
புலர - விடிய
புலவி - ஊடல்
புலன் - அறியும் சக்தி
புலிசை - திருப்பாதிரிப்புலியூர்
புல்லி - அணைத்து
புல்லிய - அற்பமான
புவனம் - உலகம்
புவனியோர் - உலகினர்
புவி - பூமி
புளகம் - மயிர் சிலிர்ப்பு
புளிஞர் - வேடர்
புனல் - நீர்
புனிதம் - பரிசுத்தம்
புகர்கண் - துன்பம்

பூ

பூ - பூமி
பூகம் - கமுகு
பூசுரர் - அந்தணர்
பூதங்கள் - நீர், மண், தீ, கால், வான் எனும் ஐந்து
பூதலம் - பூமி
பூரிப்பு - மகிழ்ச்சி
பூவைமார் - பெண்கள்

பெ

பெட்பு - அன்பு
பெண்ணை - பனைமரம், பெண்ணை நதி
பெற்றி தன்மை

பே

பேணி - விரும்பி
பேதுறல் - மதிமயக்கம்
பேறு - பாக்கியம்

பை

பைங்கூழ் - பயிர்
பைய - மெதுவாக

பொ

பொதும்பர் - சோலை
பொருப்பு - மலை
பொலன் - அழகு
பொருவு - உவமை
பொலிவது - விளங்குவது
பொலிய - விளங்க
பொலிவு அழகு
பொறி - தீப்பொறி
பொறித்தது - எழுதியது
பொறை பொறுமை
பொற்பு - அழகு
பொற்றொடி - பொன்வளையல்
பொன்றிடா - இறவாத

போ

போகம் - சுகம்
போகி - சுகமனுபவிப்போன்
போதம் - அறிவு, ஞானம்
போதிய - போதுமான
போது - காலம்
போந்தனம் - வந்தோம்
போந்திட்ட - வந்த
போந்து - சென்று

பௌ

பௌவம் - பூரணை நாள்

ம

மகம் - யாகம்
மகரமதி - தைமாதம்
மகவான் - இந்திரன்
மகவு - குழந்தை
மகிடம் - எருமை
மகிதலம் - பூமி
மகிழ்நன் - கணவன்
மங்குல் - மேகம்
மங்கை - பெண்
மஞ்சனம் - அபிடேகம்
மஞ்சு - மேகம்
மஞ்ஞை - மயில்
மடங்கல் - இடி
மடம் - அறியாமை, ஞானியர் இருக்குமிடம்
மட்டு - வாசனை
மண் - பூமி
மண்டு - மிகுதல்
மண்டூகம் - தவளை
மதகரி - யானை
மதலை - குழந்தை
மதன் - வலி
மதாணி - மார்ப்பதக்கம்
மதி - சந்திரன், மாதம்
மது - தேன்
மத்தகம் - யானைத்தலை
மந்தன் - சனி
மந்தை - கூட்டம்
மமதை - கர்வம்
மயல் - மயக்கம்



மரகதம் - பச்சை
மரபு - வமிசம்
மருங்கு - பக்கம்
மருட்டுறை - தீயவழி
மருதம் - வயல்
மருமலர் - மணம்மிக்க பூ
மருள் - மயக்கம்
மலைமகள் - பார்வதி
மலைவு - மயக்கம்
மல்க - பெருக
மல்கிடு - மிகுந்திடு
மல்கும் - நிறையும்
மல்லல் - மிகுதி
மழு - பரசாயுதம்
மள்ளர் - உழவர்
மறம் - பாவம்
மறலி - இயமன்
மறி - மேடம்
மறு - குற்றம்
மறை - வேதம், சங்குச்சுரி
மறையவர் - அந்தணர்
மறையோன் - வேதியன்
மனனம் - தியானம்
மன்பதை - மக்கள்
மன்றம் - சபை
மன்றல் - கலியாணம்
மன்று - சபை, நியாயசபை
மன்னி - நெருங்கி, நிலைபெற்று
மன்னிடா - பொருந்தாத
மன்னிய - நிலைபெற்ற
மன்னு - நிலைபெற்ற
மன்னுகின்ற - பொருந்திய

மா

மா - சிறந்த, யானை
மாகம் - ஆகாயம்
மாக்கள் - விலங்குகள்
மாசு - குற்றம்
மாடங்கள் - வீடுகள்
மாணி - வாமனன்
மாண்பு - உயர்வு
மாதங்கம் - யானை
மாதவம் - தவம்
மாதவர் - தவசிகள்
மாதவன் - திருமால்
மாதிரம் - பூமி
மாதுங்க - மிகச்சிறந்த
மாதோர்பாகர் - சிவன்
மாந்தர் - மனிதர்
மாந்திட - குடிக்க
மாய்க்க - கொல்ல
மால்வரை - பெரியமலை
மாழ்கும் - அழுந்தும்
மாற்றலர் - பகைவர்
மான - போல
மானும் - ஒத்திருக்கும்

மி

மிஞ்சவே - மிகுதியாக
மிஞ்சி - மிகுந்து
மிடறு - கழுத்து
மிடியன் - வறியன்
மிடைந்து - நெருங்கி
மிலைச்சிய - அணிந்த
மிளிருதல் - விளங்குதல்

மீ

மீக்கூர - பெருக
மீது - மேல்
மீனநோக்கி - மீனாட்சி
மீன் - நட்சத்திரம்
மீன்மதி - பங்குனிமாதம்

மு

முகந்து - மொண்டு
முகடு - உச்சி

முகமன் - உபசாரம்
முகன் - முன்
முகில் - மேகம்
முகை - மொட்டு
முத்தம் - மருதம்
முந்நீர் - கடல்
முரசு - உத்திரட்டாதி
முராரி - விஷ்ணு
முல்லை - காடு
முல்லையர் - இடைச்சியர்
முழுமடார் - மூடர்
முளரி - தாமரை
முறுவல் - சிரிப்பு
முறை - முறையீடு, ஒழுங்கு
முனிவு - கோபம்

மூ

மூங்கை - ஊமை
மூதாதை - பாட்டனர்
மூதாளர்-கிழவடிவுகொண்டவர்

மெ

மெல்லிநல்லாள் - பெண்

மே

மேதக - மேன்மையான
மேதகு - மேன்மையான
மேதக்கோன் - உயர்ந்தோன்
மேதி - எருமை
மேதினி - பூமி
மேதையீர் - அறிஞரே
மேய - பொருந்திய
மேவல் - பொருந்தியிருத்தல்

மை

மை - கருமை
மைந்து - வலி

மொ

மொய்த்து - நெருங்கி
மொய்ம்பு - பலம்

மோ

மோலி - கிரீடம்

யா

யாணர் - புதுமை
யாழ் - வீணை
யாளி - சிங்கம்

யோ

யோகி - தவசி

வ

வஞ்சினம் - சபதம்
வண்டர் - மங்கல பாடகர்
வண்ணம் - அழகு
வண்மை - ஈதல்குணம்
வதனம் - முகம்
வதிந்தவர் - தங்குவோர்
வதிந்திடு - தங்கியிருக்கும்
வதிந்து - தங்கி
வதிபவர் - தங்குவோர்
வதியும் - தங்கும்
வதிவது - தங்குவது
வதிவார் - தங்குவார்
வதுவை - மணம்
வபு - உடல்
வம்புறு - வழக்காடும்
வயங்கும் - விளங்கும்
வரன் - வரம்
வருக்கை - பலா
வருடுகின்ற - தடவுகின்ற



வரை - மலை, மூங்கில்
வலாரி - இந்திரன்
வல்லை - விரைவு
வழுத்துவர் - சொல்வார்
வளி - காற்று
வள்ளம் - வட்டில்
வள்ளல் - தாதா
வள்ளுகிர் - வளைந்த நகம்
வறிஞர் - ஏழைகள்
வனசம் - தாமரை
வனமாலி - திருமால்
வன்பு - வன்மை
வன்றிறல் - மிகுபலம்
வன்னி - பிரமசாரி, தீ

வா

வாகை - வெற்றி
வாச்சியம் - வாத்தியம், சொல்
வாஞ்சை - ஆசை
வாணன் - வாழ்பவன்
வாணி - கலைமகள்
வாம்பரி - குதிரை
வாய்மை - சொல்
வாரம் - அன்பு
வாரணம் - யானை
வாரி . வருணன், கடல்
வாரிசம் - தாமரை
வாரிதி - கடல்
வார் - நீண்ட
வாலிதாம் - சிறந்த
வாவி - குளம்
வாளி - அம்பு
வான நாயகன் - சிவன்
வானவர் - தேவர்
வான் - சிறந்த

வி

விசும்பு - ஆகாயம்
விச்சை - வித்தை

விஞ்சிடு - மிகுதியாக
விஞ்சையர் - வித்தியாதரர்
விடம் - விஷம்
விடை - ரிஷபம்
விடையவன் - சிவன்
விண் - தேவலோகம், ஆகாயம்
விண்டல் - மூங்கில்
விண்டு - திருமால்
விண்ணவர் - தேவர்
விது - சந்திரன்
வித்தகன் - சிவன்
வித்தியா - வித்தை
வித்துநர் - விதைப்போர்
விந்தை - துர்க்கை
விபுதர் - தேவர்
விப்பிரர் - அந்தணர்
விமலம் - பரிசுத்தம்
விமலன் - சிவன்
விமலி - பார்வதி
விம்மல் - துக்கம்
வியன் - பெருமை
விரகர் - சமர்த்தர்
விரகு - தீச்செயல்
விரிஞ்சன் - பிரமன்
விருது - வெற்றி
விரை - வாசனை
விலங்கு - மிருகம்
வில் - பிநாகம் என்னும் சிவன் கைவில்
விழையின் - விரும்பினால்
விளித்து - அழைத்து
விளிப்பது - அழைப்பது
விளிப்பார் - அழைப்பார்
விறல் - வெற்றி

வீ

வீடுதல் - அழிதல்
வீறு - பெருமை

## வெ

வெண்கமலம் - வெள்ளைத் தாமரை
வெம்பவம் - கொடிய பாவம்
வெம்மை - கொடுமை
வெயிலவன் - சூரியன்
வெருட்டுதல் - அச்சமுறுத்தல்
வெருவ - அச்சம்கொள்ள
வெருவி - அஞ்சி
வெற்பு - மலை
வென்றி - வெற்றி

## வே

வேட்கை - விருப்பம்
வேட்டல் - மணம்புரிதல்
வேட்டு - மணம் புரிந்து
வேட்பு - வேட்கை
வேணி - சடை
வேணியர் - சிவபிரான்
வேணு - மூங்கில்
வேணுவனம் - மூங்கில்காடு
வேதன் - பிரமன்
வேதா - பிரமன்
வேதிகை - மேடை
வேத்தவை - ராஜசபை
வேத்திரம் - பிரம்பு
வேய் - மூங்கில்
வேரல் - மூங்கில்
வேவல் - வெந்துநீறுதல்
வேழம் - யானை
வேள்வி - யாகம்

## வை

வை - வைக்கோல்
வைகல் - நாள், தங்கியிருத்தல்
வைகின் - தங்கியிருப்பின்
வைகும் - தங்கியிருக்கும்
வைகுவோர் - தங்குவோர்
வைதவன் - இகழ்ந்தவன்
வைப்பு - ஊர்
வையகம் - பூமி
வையம் - சிவிகை, பூமி
வையத்தீரே - உலகமக்களே

109990
O23:38.21192.TN
N64